இறைவி வணக்கம்

ஸ்ரீ மூக மஹாகவி

எரிக்கப்பட்ட ஷடத்வாக்கள் என்னும் காடுகளுக்கு அப்பால் விளங்குவதும், சற்று மலர்ந்த குஸும்ப மலரைப் போன்ற செந்நிறமுடையதும், நவயௌவன வடிவமானதும், கம்பாநதிக்கரையில் விளங்கிக் கொண்டிருப்பதுமான ஒரு கருணாமூர்த்தியை நான் தியானிக்கின்றேன்.

மலர்க்கணைகள், அங்குசம், பாசம், வில் ஆகியவற்றைத் தன் கரத்தே தரித்திருப்பதும், பிறையிளங்கீற்றைத் தலையில் சூடியுள்ளதும், காமகோடி பீடத்தில் வீற்றிருப்பதும், முதிர்ந்த செந்நிற வடிவுடையதும் (அதாவது, அகண்டாகாரவிருத்தியின் பரிபாகாவஸ்தையில் விளங்குவதும்) ஆன ஸ்ரீ பரதேவதையைத் தியானிக்கின்றேன்.

ஸ்ரீ சக்ரத்தின் நடுவேயுள்ள பிந்துஸ்தானத்திலே, ஸதாசிவவடிவமான கட்டிலின் மேல், பரசிவ வடிவமான அழகிய மலர்ப்படுக்கையில், காமாக்ஷீ என்னும் திருநாமத்தையுடைய என்னுடைய பாக்யம் வீற்றிருக்கின்றது!

மகாலிங்கத்தைப் பெற்ற மகராஜி

இராமலிங்காமிஷன் தலைவரும், நமது "அருள்" பத்திரிகையின் தலையாய ஆதரவாளருமான பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் அவர்களின் அன்னையார் ருக்மிணி அம்மையார் அவர்கள், சென்ற நவம்பர் மாதம் 8'ம் நாள் நள்ளிரவிலே இறைவனடி எய்திவிட்ட செய்தியை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அம்மையார் அவர்கள் ஆன்மிகத் துறையில் மிகவும் ஈடுபாடு உடையவர்கள். இராமலிங்க வள்ளலாரின் அருட்பாக்களில் நெஞ்சுருகித் திளைப்பவர்கள். இராமாயணம் பாரதம் போன்ற இதிகாச புராணங்களை சிரத்தையோடு சிரவணம் செய்பவர்கள். இவற்றோடு கூட, தம் ஓய்வு நேரங்களிலே தோட்டவேலை செய்வதைத் தமது பிரியமான பொழுதுபோக்காகக் கொண்டிருந்தவர்கள்.

அன்னாரது அஸ்தியை, அவரது புதல்வர் திரு. மகாலிங்கம் அவர்கள் காசிக்கு எடுத்துச் சென்று, கங்கையில் கரைத்துவிட்டு வந்தார்கள்.

அம்மையார் அவர்களின் ஆன்மா சாந்தி அடையுமாறு, எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக!

நீதி



ஸ்ரீ திருமுருக
கிருபானந்தவாரியார்

வீடு என்ற சொல் விடு என்ற முதனிலை நீண்ட தொழிற்பெயர். மழை, பனி, காற்று, குளிர் முதலிய துன்பங்களினின்றும் விடுபடச் செய்வது வீடு.

வீடுகள் பல சேர்ந்தது வீதி. வீதிகள் பல சேர்ந்தது ஊர். ஊர்கள் பல சேர்ந்தது நாடு.

ஊர்களில் வீதியிருந்தால் பெருமை ஏற்படாது. நீதியிருக்க வேண்டும். நீதியமைந்த வீதியே நாட்டுக்கு நலத்தை நல்கும்.

முற்காலத்தில் மன்னர்கள் முதற்கடமை, அறம் நீதி இவைகளை மக்களிடம் பரப்புவதேயாகும் என்று கருதியிருந்தார்கள்

"நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே"

என்று புறநானூறு புகல்கின்றது.

இப்போது முடியாட்சியில்லை; குடியாட்சி. ஒவ்வொரு ஊரிலும்பஞ்சாயத்து மன்றத்தின் மூலமே நீதி வழங்கப் பெறுகின்றது. நீதி வழங்கும் பஞ்சாயத்து மன்றம் மிக்க ஆற்றல் உடையது. சிறந்த கட்டுப்பாடும் உடையது. நல்ல பணி நாட்டுக்கு ஆற்றுதல் வேண்டும்.

சிறந்த நீதி எது தெரியுமா?

தனக்கு எது துன்பம் என்று தோன்றுகின்றதோ, அதனைப் பிறருக்குச் செய்யக்கூடாது.

தனக்கு எது இன்பமோ அதனைப் பிறருக்கும் புரிதல் வேண்டும்.

தன்னை யாராவது நிந்தித்தால் மனம் வருந்துகின்றது. ஆதலால் பிறரை நிந்திக்கக் கூடாது. நம் பொருளை யாராவது கவர்ந்தால் துன்பப்படுகிறோம். நாம் பிறர் பொருளைக் கவரக்கூடாது. நமது மனைவியை ஒருவன் விரும்பிப் பார்த்தால் உள்ளங் கொதிக்கின்றது. பிறர் மனைவியை மனத்தாலும் விரும்பக்கூடாது. நம் காலில் முள் குத்தினும் வலிக்கின்றது. பிற உயிரைக் கொல்லுதல் கூடாது.

எனவே பஞ்சாயத்து மன்றங்கள் தக்க விரிவுரையாளர் மூல

மாகவும், துண்டுத் தாள்கள் மூல மாகவும், மக்களிடையே நீதி நெறியைப் பரப்புதல் வேண்டும்.

உலகமெல்லாம் நீதி வெள்ளம் ஓடவேண்டும். அதன் மூலம் உயிராகிய பயிர் தழைக்க வேண்டும்.

இளைஞர்களை நல்வழிப் படுத்த வேண்டும். இளைஞர் உள்ளம் பண்படவேண்டும்.

கல்வியின் பயன் அறிவு. அறிவின் பயன் பண்பு. பண்பு இல்லாதவன் எத்துணைச் சிறந்த கூரிய அறிவு பெற்றிருப்பினும் அவன் மரத்துக்குச் சமானமானவன் என்கின்றார் திருவள்ளுவர்.

"அரம்போலுங் கூர்மைய
ரேனும் மரம் போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்."

இறையுணர்ச்சி இன்றியமையாதது. இறைவன் எங்கும் உளன், எல்லாம் அறிகின்றவன் என்று கருதினால், மனத்தாலும் வாக்காலும் செயலாலும் தீவினை செய்யமாட்டார்கள்.

ஒவ்வொரு உடம்புக்கும் தலை யுண்டு. காலில்லாத உடம்பு உண்டு. கையில்லாத உடம்பு உண்டு. தலையில்லாத உடம்பு வாழாது. ஒரு குடும்பத்துக்கு ஒரு தலைவன் உண்டு. மாவட்டப் பஞ்சாயத்துத்தலைவர் உளர். ஒரு கட்சிக்குத் தலைவர் உண்டு. எல்லாவற்றுக்கும் தலைவன் இருப்பது போல, அகில உலகங்கட்கும் ஒரு தலைவன் உண்டு. இறைவன் ஒருவன் உண்டு. உண்டு என்று அறிவுடைய உலகம் எல்லாம் உரைப்பதை ஒருவன் இல்லையென்றால், அவனைப் பேய் என்று வைக்க வேண்டும் என்று திருவள்ளுவ தேவர் தெரிவிக்கின்றார்.

உலகத்தார் உண்டென்ப
தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்கிறார் தொல்காப்பியர். ஆதலால் அறிவுடைய பெருமக்கள் எல்லோரும் உண்டு என்ற தெய்வத்தை, இல்லையென்று சில ஆசிரியர்களே மாணவர்களின் இளம் உள்ளத்தில் நஞ்சு ஊசியை ஏற்றிக்கெடுக்கின்றார்கள், எதிர்காலம் மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சியில் இருக்கின்றது. நன்மாணாக்கர்களை உண்டாக்கும் பொறுப்பு ஆசிரியர்களின் தலைப்பாரம். ஆசிரியர்களையும் கல்வி நிலையங்களையும் நன் முறையில் நடத்தும் பெரும் பொறுப்பு, பஞ்சாயத்து மன்றத்தின்பால்அமைந்துள்ளது. ஆதலால், பஞ்சாயத்து மன்றங்கள் தம் கடமையைநன்கு உணர்ந்து, கல்வித் துறையைப் பண்பு வளர்க்கும் முறையில் கண்காணிக்கவேண்டும்.

மக்கள் நீதியைக் கடைப்பிடித்து வாழ்வார்களாக. யாண்டும் நீதி நிலைபெறுவதாக, இறையருள் என்றும் இனிதுதுணைபுரிக

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை



பாரதஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர்

ஜீவன் முக்தர்கள், தானம் செய்வதால் ஏற்பட்ட புண்ணியத்தை ஆச்ரயிக்காமலும், வேதம் யாகம் இவைகளால் கிடைத்த புண்யத்தை ஆச்ரயிக்காமலும், விருப்பு வெறுப்பு இல்லாதவர்களாகி இவ்வுலகில் சஞ்சரிக்கின்றனர்.

தன் இனத்தாருடன் சண்டையை அடைந்தவர்கள் நல்ல படுக்கையை அடைந்தாலும் ஒரு பொழுதும் நித்திரையை அடைகிறதில்லை. ஓ அரசனே, ஸ்திரீகளிடத்திலும் ஆசையை அடைய மாட்டார்கள். மாகதர்களாலும் ஸூதர்களாலும் துதிக்கப்பட்டாலும், சந்தோஷத்தை அடைவதில்லை.

தனக்கு வேண்டியவர்களுடன் விரோதித்துக் கொண்டவர்களுக்கு, நன்மை சொன்னால் அது ருசிக்கிறதில்லை. அவர்களுக்கு யோக க்ஷேமமும் சரியாக நடப்பதில்லை. அவர்களுக்கு நாசத்தை அடைவதைத் தவிர வேறு ஒன்றும் கதியில்லை.

தனது சூரத்தனத்தை பிராமணர்களிடத்திலும் ஸ்திரீகளிடத்திலும் பந்துக்களிடத்திலும் பசுக்களிடத்திலும் எவர்கள் காட்டுகிறார்களோ, அவர்கள் காம்பிலிருந்து பழுத்த பழம்

உதிர்ந்து விழுவதுபோல் விழுந்து விடுவார்கள்.

தனித்துக் கிளம்பிய மரம் மிகப் பெரியதாகவும் அழுத்தமாக வேரூன்றியதாகவும் இருந்தாலும், காற்றினால் அடிக்கப்பட்டு கிளைகளுடன் ஒரு நொடியில் முறிந்து விழுந்துவிடும்.

எந்த மரங்கள் நன்ருக வேரூன்றிக் கூட்டமாகச் சேர்ந்து இருக்கின்றனவோ, அவைகள் ஒன்றையொன்று பற்றிக் கொண்டு, மிக்க வேகமுள்ள காற்றுகளையும் ஸஹிக்கின்றன.

இவ்வாறு, நற்குணங்களோடு கூடியனவனுய் இருந்தாலும், ஒருவனுய் இருக்கிற மனிதனை, தனித்து முளைத்த மரத்தை வாயு போல், சத்ருக்கள் வென்று விடுவார்கள் என மஹான்கள் கூறுகின்றனர்.

குளத்தில் இருக்கும் நீலோத்பலப் புஷ்பங்கள் போல், ஒருவர் ஒருவரைப் பற்றி அடுத்திருந்தால் நன்ருக விருத்தி அடைகின்ருர்கள்.

கொல்லத்தக்க குற்றம் செய்தவராயினும், வேத வித்துக்கள், பசுக்கள், பங்காளிகள், குழந்தைகள், பெண்கள், அன்னமிட்டவர்கள், சரணமடைந்தவர்கள் இவர்கள் கொல்லத்தக்கவர்கள் அல்ல,

மனிதனிடத்தில் பொருளிருப்பதனுலும் வியாதியின்மையினுலும் ஏற்படும் பெருமையானது, வேறு எதனுலும் கிடைக்காது. ஓ அரசனே, உமக்கு இந்த குணங்கள் எப்பொழுதுமிருக்கட்டும். பொருள் இல்லாதவர்களும், நோயினுல் துன்பத்தை அடைந்தவர்களும், மரித்தவர்களுக்கு சமானம்.

ஓ மஹாராஜரே, வியாதியால் உண்டாகாததும், காரமுள்ளதும் தலைவலியைக் கொடுப்பதும், பாவத்துடன் கூடியதும், கடுமையும் கூர்மையும் உஷ்ணமுள்ளதும் ஸாதுக்களால் அடக்ககூடியதும் கெட்டவர்களால் அடக்க முடியாததுமான கோபத்தை அடக்கும்.

வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள், நல்ல பழம் கிட்டினுலும் அதைக் கண்டு சந்தோஷப்படுவதில்லை. விஷயங்களின் உண்மையை அறிவதில்லை. ரோகிகள் எப்பொழுதும் துக்கத்துடன் இருப்பார்கள். பொருள்களால் ஏற்பட்ட போகங்களையும் ஸௌக்யத்தையும் அறிகிறதில்லை.

ஸாதுக்களுடன் விரோதிப்பது பலவானுக்கு உகந்ததல்ல. சுலபமாக செய்யக்கூடிய தர்மத்தை தாமதப்படுத்தாமல் சீக்கிரம் செய்யவேண்டும். கடூர ஸ்வபாவமுள்ளவர்களிடம் இராஜ்யத்தைக் கொடுத்தால், அந்த தேசமும் அவன் குடும்பமும் அழிந்து விடும். அன்புள்ளவர்களிடம் இராஜ்யமிருந்தால், பரம்பரையாக பிள்ளை பேரன் முதலிய யாவரும் அனுபவிப்பார்கள்.

உங்கள் பிள்ளைகள் பாண்டவர்களைப் பாதுகாக்கட்டும். பாண்டவர்கள் உங்கள் பிள்ளைகளை ரக்ஷிக்கட்டும். ஓ அரசனே, கௌரவர்கள் ஸமமான சத்ரு மித்ரர்களை உடையவர்களாகவும், ஸமமான காரியத்தை உடையவர்களாகவும், ஸுகத்துடன் கூடியவர்களாகவும், செழிப்படைந்தவர்களாகவும் ஜீவிக்கட்டும்,

ஓ ஆஜமீடனின் வம்சத்தில் பிறந்தவரே, நீர் கௌரவர்

களுக்குக் கட்டும் மூளைபோல் நடு நிலையில் இருந்து, அவர்களை அடக்கவேண்டும். குருகுலமானது உமக்கு அதீனமாய் இருக்கிறது. காட்டில் வசித்து மிகுந்த துயரத்தை அடைந்த பாண்டவர்களைப் பாதுகாத்து, உமது கீர்த்தியை ரக்ஷித்துக் கொள்ளும்.

ஓ அரசரே, நீர் பாண்டு புத்ரர்களுடன் ஸந்தி செய்து கொள்ளும். நீர் அஜாக்ரதையாக இருக்கும் சமயத்தை சத்ருக்கள் கோர வேண்டாம். பாண்டவர்கள் ஸத்யத்தில் இருக்கின்றனர். நீர் உமது பிள்ளைகளை அடக்குவீராக.

விசித்ரபுத்ரனுன ஓ திருதராஷ்டிரரே, பிரம்மபுத்ரரான மனுவானவர், கற்பிக்கத்தகாதவனுக்குக் கற்பிப்பவனையும், சிறுலாபத்தால் சந்தோஷிக்கிறவனையும், சத்ருவை ரொம்பவும் நம்பி அண்டுகிறவனையும், ஸ்திரீகளின் சம்பாத்யத்தால் பிழைக்கின்றவனையும், யாசிக்கத்தகாதவனை (லோபியை) யாசிக்கின்றவனையும், தற்புகழ்ச்சி செய்து கொள்கிறவனையும், நற்குலத்தில்பிறந்து கெட்ட காரியங்களைச் செய்கிறவனையும், தான் துர்பலனுக இருந்து பலசாலியுடன் எப்பொழுதும் பகைப்பவனையும், நம்பிக்கை இல்லாதவனுக்கு உபதேசிக்கிறவனையும், விரும்பத்தகாததை விரும்புகிறவனையும், நாட்டுப் பெண்ணுடன் பேசுகிற மாமனுரையும், நாட்டுப் பெண்ணுலும் அவள் பிறந்த குடும்பத்தினர்களாலும் உதவியை அடைந்து கடன் முதலியவற்றைப் போக்கிக் கொண்டு பின்பு அவர்களிடம் கௌரவத்தை விரும்புகிறவனையும், பிறர் மனைவியை அடைந்தவனையும், பெண்டிர்களை ரொம்பவும் தூஷிக்கிறவனையும், உபகாரத்தைப் பெற்றுப் பின் ''எனக்கு நினைவு இல்லையே?'' என்று சொல்லுகிறவனையும், புண்ய தீர்த்தங்களில் வாக்கினுல் தானம் செய்துவிட்டு பின்பு அதைக் கேட்கும் போது கொடுக்காமல்தற்புகழ்ச்சிசெய்து கொள்கிறவனையும், அஸத்துக்களை நல்லவனென்று சொல்லுகிறவனையும், இந்தப் பதினேழு மனிதர்களையும், ஆகாயத்தை முஷ்டிகளால் உடைக்கிறவர்களாகவும், வளைக்க முடியாத இந்திரனுடைய வானவில்லை வளைக்கின்றவர்களாகவும், பிடிக்க முடியாத சூரிய கிரணங்களைப் பிடிக்கின்றவர்களாகவும் சொன்னுர். அவர்களைப் பாசத்துடன் கூடிய யம படர்கள் நரகத்துக்கு அழைத்துச் செல்வார்கள்.

எந்த மனிதன் எவன் விஷயத்தில் எவ்விதம் இருக்கிருனே, அந்த மனிதன் விஷயத்தில் அவனும் அவ்விதம் இருக்க வேண்டும். அதுதான் தர்மம். கபடமாக நடந்து கொள்கிறவனிடத்தில் கபடமாகவே நடந்து கொள்ள வேண்டும். நேர்மையாக நடந்து கொள்ளும் ஸாதுக்களிடத்தில் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

''நூறு வயசு ஒரு மனிதன் இருப்பானென வேதம் கூறியும்,

அவ்வாறு யாரும் இல்லாமல் மரிப்பதற்கு என்ன காரணம்?'' என திருதராஷ்டிரன் கேட்டதற்கு, விதுரர் பதில் கூறுகிறார்.

அதிகமான அஹங்காரம், அதிகமாகப் பேசுதல், கொடாமை, கோபம், தான் மட்டிலும் நன்றாக இருக்க வேண்டுமென நினைத்தல், ஸ்நேஹிதனுக்கு துரோகம் செய்தல் என்ற இவை, கூர்மையான கத்திகள் போல் மனிதனைக் கொன்று விடுகின்றன. யமன்வந்து கொல்லுவதில்லை. உமக்கு க்ஷேமம் உண்டாகட்டும்.

பிரம்மஹத்தி செய்தவனுக்கு ஒப்பானவர்களை விதுரர் கூறுகிறார். நம்பினவன் மனைவியைச் சேருகிறவனும், குரு பத்னியை அடைந்தவனும், கீழ்ப்பட்ட சாதியை மணந்த த்விஜனும், கள் குடிப்பவனும், தலைவனாய் இருந்து தன் கீழுள்ளவர்களின் பிழைப்பைக் கெடுக்கிறவனும், பிராமணர்களையே ஸேவகர்களாக வைத்துக் கொண்டிருப்பவனும், தன்னை சரண மடைந்தவனைக் கெடுக்கிறவனும், பிரம்மஹத்தி செய்தவனுக்கு சமமானவர்கள். இவர்களுடன் சேர்ந்தவனுக்கும் அந்தப் பாபம் வரும். அதற்குப் பிராயச் சித்தம் செய்து கொள்ள வேண்டுமென சாஸ்திரம் (வேதம்) கூறுகிறது,

பெரியோர்களுடைய உபதேசங்களைக் கேட்டு நடக்கிறவனும்; நீதி அறிந்தவனும்;கொடையாளியும்; பெரியோர்களால் வைச்வதேவம் செய்யப்பட்ட அன்னத்தையும், யதிகள் வேதவித்துக்கள் இவர்கள் சாப்பிட்ட சேஷத்தையும்,யாகசமாராதனையில் கிடைக்கும் அன்னத்தையும், ஸ்ரீ பகவானுக்கு நிவேதனம் செய்த அன்னத்தையும் சாப்பிடுகிறவனும்; சிறிது கூடப் பிறருக்கு துன்பத்தைச் செய்யாதவனும்; பயனில்லாத காரியத்தால் கலங்கிய மனமில்லாதவனும்; செய்ந்நன்றி உள்ளவனும்; ஸத்யம் பேசுகிறவனும்;யாவராலும் அண்டக்கூடியவனுமான அறிவாளி ஸ்வர்கத்தை அடைவான்.

ஓ அரசனே, எப்பொழுதும் இனிமையாகப் பேசுகின்ற மனிதர்கள் சுலபமாககிடைப்பார்கள். அப்ரியமான நன்மையைச் சொல்லுகிறவனும் கேட்கிறவனும் கிடைப்பதரிது.

எவன் தர்மத்தை அடுத்து, யஜமானனுக்கு பிரியமானாலும் அப்ரியமானாலும் அதை யோசிக்காமல், கேட்கும் போது அப்ரியமாய் இருந்த போதிலும் பின்பு எது நன்மை அளிக்குமோ அதைக் கூறுகிறவனே, அரசனுக்கு உற்ற துணைவன்.

இடையூறு செய்யும் ஒரு மனிதனை, ஓர் குலத்தைக் காப்பதற்காக விட்டுவிடலாம். ஒரு கிராமத்தை பாதுகாப்பதற்காக, இடையூறு செய்யும் ஒருகுலத்தை விட்டுவிடலாம். (அதாவது, கிராமத்துக்குத் தீங்கு செய்யும் குலத்தை கிராமத்தை விட்டு வெளியேற்றி விடலாம் எனக் கருத்து.) ஒரு பட்டினத்தைப் பாதுகாப்பதற்காக, ஒரு கிராமத்தை வெளியேற்றி விடலாம். தன்னுடைய ஆத்மாவை ரக்ஷித்துக் கொள்வதற்காக, பூமியையே விட்டுவிடலாம்.

உ

திருச்சிற்றம்பலம்

"காராயவண்ண! மணிவண்ண! கண்ண !
கனசங்கு சக்ர தரநீன்
சீராய தூய ! மலர்வாய ! நேய !
சீராம ! ராம !" எனவே
தாராய வாழ்வு தருநெஞ்சு சூழ்க
தாமோத ராய நமஓம்
நாராய ணாய நமவாம ணாய
நமகேச வாய நமவே !

கலைக்கடலே ! கருணைநெடுங் கடலேகானம்
கடந்ததடங் கடலேஎன் கருத்தே ஞான
மலைக்கண்எழும் சுடரேவான் சுடரே அன்பர்
மனத்தொளிரும் சுயஞ்சுடரே! மணியே வானோர்
தலைக்கணுறு மகுடசிகா மணியே வாய்மைத்
தசரதன்றன் குலமணியே! தமியேனுள்ள
நிலைக்கணுறும் சீராம வள்ளலேஎன்
நிலைஅறிந்தும் அருளவினும் நினைந்திலாயே!

—திருவருட்பா

மஹாலிங்கம்



ஜகத்குரு
ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்

ஒரு வீட்டைப்பார்த்து, இதைக் கட்டியது யார் என்று நாம் கேட்டால், அதைக் கட்டியது சமீபத்திலானால் இன்னார் கட்டினார் என்று பதில் சொல்லலாம். முன்னூறு நானூறு வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட வீட்டை யார் கட்டினார் என்றால், தெரியாது என்று சொல்லுவார்கள்.

நாய், பூனை முதலியன வீடு கட்டப்பட்டதாகவே அறிந்திருக்க மாட்டா. இப்படியே எப்பொழுதுமிருப்பதாகவே நினைத்துக் கொண்டிருக்கலாம்.

ஒரு வண்டியைக்காட்டி அதை யார் செய்தது என்று கேட்டால் இன்ன தச்சன் செய்தானென்று சொல்லலாம். ஆனால் இந்த வாழை மரத்தை யார் செய்தது என்று கேட்டால் தெரியாது. இது சமீபத்தில்தான் உண்டானது. ஆயினும் அதைச் செய்தது யார் என்று நமக்குத் தெரியாது. ஒவ்வொரு பட்டையாக அதில் அடுக்கியது யார்? எந்த ஆயுதத்தைக் கொண்டு இது செய்யப்பட்டது? தெரியாது.

அந்த மலையை, நட்சத்திரங்களை, சந்திரனைச் செய்தது யார்? தெரியாது. அவை வெகு காலமாக இருக்கின்றன, அவை நாட்பட்டவைதான்.

ஆனால் அந்தப் புஷ்பம் இப்பொழுது உண்டானதே. இரண்டு நாள் முன் சிறு மொட்டாக இருந்தது. இப்பொழுது அழகிய ரோஜாப் பூவாகி விட்டது. ஒவ்வொரு தளத்திலும் எத்தனையோ நரம்புகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஒரு மிருகம் பட்டினத்தைச் சுற்றிப் பார்த்தால் எவ்வளவு தெரிந்து கொள்ளுமோ, அவ்வளவுதான் பிரபஞ்சத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம்.

இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு நமக்கு ஆக வேண்டிய தென்ன வென்று கேட்கலாம். இந்த அழகான ரோஜாப் பூவைச் செய்தவர் யார் என்று தெரிந்து கொள்ளுவதால் நமக்குப் பிரயோஜனமுண்டாகலாம். அவன் மகா கெட்டிக்காரனுக இருக்க வேண்டும். அவன் இன்னுன் என்று தெரிந்து கொண்டால், நமக்கு வேண்டியதை அவனிடத்தில் சொல்லிக் கொள்ளலாம்.

ஒரு வீட்டில் திருட்டு நடந்து விட்டது. திருடனைக் கண்டு பிடிக்க மண்ணில் பதிந்திருக்கும் அவனுடைய காலடையாளம் முதலியவைகளைக்கவனிக்கிறோம். சிருஷ்டி கர்த்தா ஒருவன், நமது கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறுன் என்று தெரிகிறது. அவன் இருக்கிறுன் என்பதற்கு என்ன அடையாளம்? நாமே ஒரு அடையாளம். நம்முடைய உள்ளங்கையிலிருக்கிற ரேகை மாதிரி நாம் போட முடியுமா?

இந்தப் பட்டணத்திலுள்ள விசித்திரங்களைக் காட்டிலும் ஒரு சிறிய இலையில் அதிக விசித்திரங்கள் இருக்கின்றன. இவைகளைச் செய்தவன் அகப்படுவதில்லை. அவன் ஒரு குகையில் புகுந்து கொண்டிருக்கிறுன்.

வேதம் அவனைப் பற்றிச் சொல்லும்போதெல்லாம், அவன் ஒரு குகையில். இருப்பதாகவே சொல்லுகிறது. அவன் ஒருவனுகத் தான் இருக்க வேண்டும். ஒரே ரீதியாக எங்கும் செய்வதால், ஆசாமி ஒரே ஆசாமிதான். அப்படி ஒருவன் இருக்கிறுன் என்பதை உலகெல்லாம் அறிவிக்கின்றன. இப்படி அறிவிக்கும் அடையாளத்திற்கு, சம்ஸ்கிருத பாஷையில் லிங்கம் என்று பெயர்

கண்ணுக்குத் தெரியாததை ஊகிப்பதற்கு அனுமானம் என்று பெயர். ஆகாசத்தில் ஒரு கர்ஜனை உண்டானுல், மேகம் குழுமியிருப்பதாக அனுமானிக்கிறோம். மேகமிருப்பதை அறிவிக்கும் கர்ஜனை லிங்கம்.

காளஹஸ்தி முதலிய இடங்களில் ராத்திரி வேளைகளில் மலையில் நெருப்புத் தெரியும். மரங்கள் தாமாகவும் தீப்பற்றி எரிவதுண்டு. பகலிலுமெரியுமாயினும், அப்பொழுது நெருப்புத் தெரியாது. ஆனுல் புகை தெரியும். அந்தப் புகையைக் கொண்டு நெருப்பிருப்பதாக அனுமானிப்போம். அந்தப் புகை லிங்கம்.

லிங்கம் என்ற சொல் அடையாளம் என்ற அர்த்தத்தை உடையது என்பது, இந்த உதாரணங்களிலிருந்து தெரியும். அப்படியே பிரபஞ்சத்திலுள்ள பொருள்களையெல்லாம் சிருஷ்டித்தவன் ஒருவன் இருக்கிறுன் என்பதைக் காட்டும் லிங்கம் இருக்கிறது. இந்த உலகமே அந்த லிங்கம்.

கண்ணுக்குத் தெரியாததை நினைப்பூட்டக் கண்ணுக்குத்தெரி

யும் லிங்கம் ஏற்பட்டிருக்கிறது. யோசிப்போமானுல், எல்லாம் லிங்கமே. ஆயினும் ஒன்றைக் கண்டால் அவன் நினைவு வரும் படி, அதை லிங்கம் என்று சாஸ் திரம் ஏற்படுத்தி இருக்கிறது. அந்த நினைவு தினந்தோறும் உண் டாகும்படி செய்ய, சாயங்காலத் தில் சிவதரிசனம் அவசியமென்று சொல்லப்பட்டிருக்கிறது,

ஈச்வர ஸ்வரூபம் இப்படிப் பட்டதென்று காட்ட, அதைக் கூடுமானவரையில் அறிவிக்கக் கூடிய லிங்கத்தை சாஸ்திரம் சொல்லியிருக்கிறது. சாதாரண லிங்கத்தைவிட அதிகமாக, ஸ்ப டிக லிங்கம் சிவஸ்வரூபத்தை அறிவிக்கக்கூடியது. லிங்கத்தில் பிரம்ம பீடம், விஷ்ணுபீடம், சிவ பீடம் என மூன்று பீடங்கள் உண்டு. ஸ்ரீ காளஹஸ்தியில் லிங்கமானது எட்டுக்கால் பூச்சி யாகவும், பாம்பாகவும், யானை யாகவும் மூன்று பிரிவுகளாக வுள் ளது. ஸ்ரீ என்பதற்கு ஐசுவரியம் லட்சுமி என்ற அர்த்தங்கள். தவிர எட்டுக்கால் பூச்சி என்றும் அர்த்தமுண்டு. காளம் என்ப தற்கு பாம்பு என்ற அர்த்தம். ஹஸ்தி என்பதற்கு யானை என்ற அர்த்தமுண்டு, லிங்கம் அப்ப டியே மூன்றின் உருவங்களாகவு மிருக்கிறது.

காளஹஸ்தியிலிருந்து 20மைல் தூரத்தில், குடிமல்லம் என்று ஒரு க்ஷேத்திரமிருக்கிறது. அங்கு லிங்கம் பரசுராமரால் பிர திஷ்டை செய்யப்பட்டது. அடிப் பாகம் கந்தர்வ ரூபமாகவும், மத் திய பாகம் முண்டாசுடன் கூடிய பரசுராம ரூபமாகவும், உச்சிப் பாகம் சிவலிங்க ரூபமாகவுமிருக் கிறது. பிரம்மா ஒரு சாபத்தால் சித்ரசேனன் என்ற கந்தர்வனுனு ராம். ஆகையால் அந்த லிங்கத் தின் அடி பிரம்மா. பரசுராமர் விஷ்ணு அவதாரம். நடுவில்இருக் கிறூர்.

அரசமர பூஜை செய்கையில் மூலம் (அதாவது அடிப்பாகம்) பிரம்ம ரூபமென்றும், மத்திய பாகம் விஷ்ணு ரூபம் என்றும், உச்சிப்பாகம் சிவரூப மென்றும் சொல்லுவது வழக்கம். கீதை யிலும் பகவான் 'ஊர்த்வமூலமத: சாகமச்வத்தம் ப்ராஹுரவ்ய யம்' என்று சொல்லியிருக்கிறூர். மற்ற விருட்சங்களைப் போலில் லாமல், ஸம்ஸார விருட்சத்தின் வேர் மேலோங்கியிருக் கிறது. கிளைகளும் இலைகளும் கீழ் நோக் கிச் செல்லுகின்றன என்பது, அதன் அர்த்தம்.

இப்படிப்பட்ட லிங்கத்தைப் பூஜை செய்ய, நர்மதை ஆற்றி லிருந்து லிங்கத்தைக் கொண்டு வர வேண்டும். பஞ்சாயதன பூஜையில் கணநாதன், சூரியன், அம்பாள், விஷ்ணு, பரமசிவன் ஆகிய ஐந்து மூர்த்தங்கள் இருக்க வேண்டும். ஏகலிங்க பூஜை செய்தால், நிவேதனம் பிறகு சண்டேசுவரருக்கு அர்ப்பண மாகி விடுகிறது; ஆகையால் தான், சிவன் கோயில் பிரசாதம் சாப்பிடக்கூடாது.

கோயில்களில் சாஸ்திர மரியாதையை மீறக்கூடாது. பிராம்மணர்களும் கர்ப்பக் கிருகத்திற்குள் போகக் கூடாது. உள்ளே போனால் அபசாரமே நேரும். அபிஷேக தீர்த்தம் காலில்படும். அர்ச்சனை செய்த புஷ்பம் காலில் படும். ஆயினும் ஒருவர் செய்து தானாகவேண்டும். அதற்குதீக்ஷை பெற்ற சிவத்விஜர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள்.

நிரம்ப ஸமீபிப்பது பிரயோஜனமில்லை. இந்தப் புஸ்தகத்தை கண்ணுக்கு சமீபத்தில் வைத்துக் கொண்டால் படிக்க முடியாது, தூரத்தில் பிடித்துக் கொண்டாலும் படிக்க முடியாது. அதிசாமீப்யமும், அதி தூரமும் பிரயோஜனப்படாது என்பது, அதனால் தெரிகிறது. ஆகையால் சிறிது தூரத்திலிருந்தே சேவிக்க வேண்டும்.

வீடுகளில் சிவலிங்க பூஜை மாத்திரம் கூடாது, ஆதித்யன், அம்பிகை, விஷ்ணு, கணநாதன் என்ற ஐந்து மூர்த்தங்களையும் வைத்துப் பூஜை செய்ய வேண்டும். தஞ்சாவூருக்கடுத்த வல்லத்தில் ஸூரியன் ஸ்படிகமாகக் கிடைக்கிறது. கணநாதம் என்ற சிவப்புக்கல், கங்கையில் விழும் சோணபத்திரையில் கிடைக்கிறது. ஸாளக்ராமம் நேபாளத்தில் கண்டகி நதியில் கிடைக்கிறது. காளஹஸ்திக்கருகிலுள்ள ஸுவர்ணமுகி நதியில், அம்பிகை அகப்படுகிறது. நர்மதையில் ஓங்கார குண்டத்தில் பாணம் அகப்படுகிறது. இப்படியே விஷ்ணு பஞ்சாயதன பூஜையும், சக்தி பஞ்சாயதன பூஜையு முண்டு.

*

சாதனையில் வரும் இடையூறுகள்



பகவான்
ஸ்ரீ ராமகிருஷ்ண
பரமஹம்ஸர்

வீடு ஒன்று தீப்பற்றி எரிந்து விழ்ந்து போனதை நேரில் பார்த்த ஒருவன் வந்து, அதை இன்னொருவனிடம் தெரிவித்தான். மற்றவனோ, அச்செய்தி சமாசாரப் பத்திரிகையில் வரவில்லையாதலால் அதைத் தான் நம்பமுடியாது என்று மறுத்துவிட்டான். சமாசாரப் பத்திரிகையில் மக்கள் இத்தகைய பிராந்தி வைத்திருக்கிறார்கள்.

தந்திர சாதனத்தில் சவசாதனம் என்பது ஒன்று. பிணத்தின் மீது அமர்ந்துகொண்டு சில சாதனங்கள் புரிகின்றபொழுது, அப்பிணம் வாய்திறக்கிறது. அவ்வேளையில், பொரி முதலிய அதன் வாயில் போட்டு, அதை சாந்தப் படுத்தி விட்டு, சாதகன் ஏனைய சாதனங்களில் ஈடுபடுகிறான். அதே விதத்தில், குடும்பி ஒருவன் தன்னுடைய மனைவி மக்களுக்குத் தேவையாயுள்ள வசதிகள் எல்லாம் செய்து வைத்துவிட்டு, தான் தீவிரமாக சாதனங்களில் ஈடுபடலாம்.

ஹடயோக ஆசனங்களை எத்தனை யெத்தனையோ விதங்களில் போட வல்லவன் ஒருவன் இருந்தான். ஆயினும் அவனுடைய மனது காமத்திலும் காசு ஆசையிலும் அந்தரங்கமாக உழன்று கொண்டிருந்தது.

பக்தி விசுவாசம் மனிதனை பகவானிடத்து எடுத்துச் செல்லுகிறது என்றும், வெறும் விசாரம் அவனை பகவானிடத்திலிருந்து வெகு தூரத்துக்கு அப்பால் கொண்டுபோய் விடுகிறது என்றும், வைஷ்ணவர்களில் சிலர் எண்ணுகின்றனர்.

எட்டுவிதமான தளைகள். மனிதனைப் பந்தப் படுத்துகின்றன.

ஆனால் அவைகளினின்று விடுபடுவது மிக எளிது. அறை ஒன்று நெடுநாள் இருள் சூழ்ந்து கிடக்கிறது. அதனுள் தீபத்தைக் கொண்டு வந்தவுடனே, இருள் அகன்று விடுகிறது. விவேகமென்னும் தீபத்தை மனிதனுடைய உள்ளத்தில் ஏற்றிவைத்தால், எட்டு பந்தங்களும் இருக்குமிடம் தெரியாது மறைந்துபோய் விடுகின்றன.

குடும்பஸ்தன் ஒருவனுக்கு, ஆத்ம சாதனங்கள் புரிவதற்கு ஏற்ற வசதிகள் வாய்ப்பது மிக துர்லபம். பெரும்பாலும், அவனுக்குக் குடும்பவாழ்வு தடையாகவே வந்து வாய்க்கிறது. பிணி, சோகம், வறுமை, கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் அபிப்பிராயபேதம், கட்டுக்கடங்காதவர்களும் குறும்புக்காரர்களும் அறிவிலிகளும் ஆகிய மக்கள்—இவை போன்ற இடுக்கண்கள் பல இருக்கின்றன.

உலக ஆசை சிறிதளவாவது ஒரு சாதகன் உள்ளத்தில் இருக்குமாகில், அவன் ஆத்ம சாதனத்தில் முன்னேற்ற மடைவதில்லை.

''என் உள்ளத்தினின்று, தர்க்க விதர்க்கம் பண்ணும் மனப்பான்மையை, தாயே, உனது வஜ்ராயுதத்தால் தாக்கி ஒழித்துவிடு'' என்று அம்பிகையிடம் தேம்பியழுது விண்ணப்பித்தேன்.

மேலோணுக வெறும் வேஷம் போடுபவனுக்கும், எதிலும் சுயநலக் கணக்குப் பார்ப்பவனுக்கும், ஆத்ம சாதனம் லபிக்காது.

போகம் அதிகரிக்குமளவு யோகம் குறைவு பட்டுப் போகிறது. பின்பு போகம் எப்பொழுதும் மனிதனைத் துன்பத்தில் கொண்டு சேர்க்கும்.

சுவரெங்கும் கரிபடிந்துள்ள அறையில் வசிக்கின்றவன், எவ்வளவு எச்சரிக்கையாயிருந்தாலும் அவன்மீது கொஞ்சம் கரி படிந்து விடும். உலகில் வசித்திருக்கிறவனுக்கு அப்படி ஏதேனும் ஒருவிதத்தில் இடையிடையே துன்பம் வரும். அதைத் தவிர்க்க அவனுக்கு இயலாது.

பரமஹம்ஸர் நரேந்திரனைப் பார்த்து ஒரு தடவை பகர்ந்தார்:

''பொதுவாக உன் பாடல்களைக் கேட்டு நான் பரவசமடைகிறேன். ஆனால் இன்று நீ பாட ஆரம்பித்ததும், நான் வெளியே எழுந்து போய் விட்டேன். உன் பாடல் இன்று சப்பையாய் இருந்தது. அதற்குக் காரணம், நீ உத்யோகம் தேடிக்கொண்டு திரிகிறாய்.''

இதைக் கேட்டு நரேந்திரனுக்கு வெட்கம் வந்துவிட்டது.

ஒருவன் யோகப்பிரஷ்டன் ஆவதேன்?

யோக சாதனங்கள் செய்து கொண்டிருப்பதற்கிடையில்,

உலக ஆசை ஏதேனும் உள்ளத்தில் புகுந்து விட்டால், அவன் பிரஷ்டன் ஆகிருன். ஆனுல் மறு பிறப்பில் மீண்டும் முயன்று, அவன் மேல் நிலைக்கு வந்து விடுவான். உலக ஆசை சிறிதளவாவது உள்ளத்தில் இடம் பெற்று விடுமாகில், யோகம் வாய்க்காது.

பக்தர் ஒருவரிடம் பரமஹம்ஸர் பகர்ந்ததாவது:

"நீர் காலமெல்லாம் பிறருடைய வியவகாரங்களையும், சண்டை சச்சரவுகளையும் தீர்த்து வைப்பதிலேயே காலத்தைக் கழித்து வருகின்றீர். அது சத்கர்மமென்ருலும், இவ்வளவு தூரம் செய்தது போதும். இனி அதையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு, இறைவனுடைய திருவடிகளிலேயே பக்தியை வளர்த்து வருவீராக."

குடும்ப வாழ்க்கையில் ஒருவனுக்கு எப்பொழுதுமே தொல்லைகள் உண்டு. சில வேளைகளில் மனைவி அவன் சொன்னபடி கேட்பதில்லை. அவனுக்குக் கிடைக்கிற சம்பளமோ, வெறும் இருபது ரூபாய். குழந்தைக்கு அன்னப்பிராசம் செய்யக் கையில் காசு இல்லை. மூத்த மகனைப் படிக்க வைக்கப் பணம் இல்லை. வீடு பாழடைந்து கிடக்கிறது. மழை பெய்யும்பொழுது கூரை ஒழுகுகிறது. இத்தனை இன்னல்களுக்கிடையில் அவன் குடும்ப வாழ்க்கை நடத்த வேண்டியதாய் இருக்கிறது.

ஒருவன் தன்மீது காமம் குரோதம் முதலியன ஆதிக்கம் கொள்ளாதிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். தன்னிடத்துக் கிளம்பிய கோபத்தால், ஆஞ்சநேயன் லங்காபுரியின் மீது தீப்பற்றி எரியும்படி அதைக் கொளுத்தி விட்டான். பிறகு சீதையின் கதி என்னவானதோ என்று திடீரென்று அவனுடைய மனத்தில் கவலை மிக உண்டாயிற்று.

தான் செய்த பாபங்களைப் பற்றியே ஓயாது எண்ணிக் கொண்டிருப்பவன், மகாபாபியாகிருன். அவையாவையும் மனத்தினின்று துடைத்துத்தள்ளி விட்டு, தெய்வத்தை நினைப்பவன் தூயவன் ஆகிருன்.

உலகத்தவருள் ஏதேனும் ஒரு மனிதனுக்குக் கீழ்ப்பட்டு உத்தியோகம் பண்ணினுல், அதற்கேற்றவாறு மனது மாசுபடிந்து விடுகிறது. இனி, நாலைந்து பேருக்குக் கீழ்ப்படிந்து சேவகம் பண்ணுபவனுடைய கதி என்னுவது?

உலக வாழ்வு மிகக் கடினமானது. இப்புறம் திரும்பினுல் ஒருவனுக்குத் தடியடி விழுகிறது; அப்புறம் திரும்பினுல் துடைப்பக் கட்டையடி விழுகிறது; வேருரு புறம் திரும்பினுல் செருப்படி விழுகிறது. எங்கு திரும்பினுலும் ஏதேனும் ஒருவிதத்தில் உபத்திரவம் வருகிறது. அத்தனைவித உபத்திரவங்களுக் கிடையில், சாதகன் ஒருவன் நல்வாழ்வு வாழ்ந்தாக வேண்டும்.

மெய்யன்பன் ஒருவன் அச்சமற்றவனுய், ஆவலற்றவனுய் இருக்கிருன். இறைவன் தனக்கு எதை அமைத்துத் தருகிருரோ, அதுவே தனக்கு முற்றிலும் பொருந்தியது என்னும் நம்பிக்கை அவனுக்கு இருப்பதால், அவன் கவலையற்று இருக்கிருன்.

கண்ணன் கோபியர்களுடைய ஆடைகளை அபகரித்ததன் கருத்து யாதோ?

எட்டு பந்தங்கள் ஜீவர்களை உலகில் தளைக்கின்றன. அவை

களுள் ஏழு பந்தங்களினின்று கோபிமார்கள் விடுதலையடைந்தனர். நாணம் என்னும் ஒரு பந்தம் பாக்கியிருந்தது. அச்செயலின் மூலம் கண்ணன் அந்தக் கடைசி பந்தத்திலிருந்தும் அவர்களை விடுவித்து வைத்தான்.

ஆத்ம சாதனத்தில் முன்னேற்றத்துக்குக் காமம் பேரிடைஞ்சலாயிருப்பது போன்று, குரோதமும் பேரிடைஞ்சலாகிறது. தடைபட்ட ஆசை குரோதமாக வடிவெடுக்கிறது.

சாதனத்தின் ஆரம்பதசையில், ஒருவன் தான்செய்த பாபத்தைக் குறித்து வருந்துதல் போன்ற விசாரங்களில் ஈடுபடலாம். ஆனால் அதிவிரைவில் அவன் அதையெல்லாம் கடந்து, தூய பக்தியில் ஈடுபடுதல் வேண்டும். பக்தி ஓங்கப் பெற்றிருக்கும் ஒருவன் உள்ளத்தினின்று, பாப புண்ணியத்தைப் பற்றிய எண்ணங்களெல்லாம் அகன்றுபோய் விடுகின்றன.

வெட்கம், அச்சம், வெறுப்பு ஆகியவைகள் உள்ளத்திலிருக்கும் வரையில், ஒருவன் ஆத்ம சாதனங்களுக்கு உதவான். வெட்கம் முதலியவைகளை ஒதுக்கித் தள்ளி விட்டு, இறைவனுடைய திருநாமத்தை ஓதிக்கொண்டு ஆனந்தக் கூத்தாடுகிறவர்கள் பாக்கியவான்கள்.

கர்ணன் செய்த இரண்டு தவறுகள்

வேத வேதாந்த
வித்வரத்னம்
பிரம்ம ஸ்ரீ

ஆர். முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகள்



தன் சொத்தைத் தியாகம் செய்யுங்காலத்தில் ஸத்வகுணம் நிரம்பியவனாக இருக்கவேண்டும். பிரதி உபகாரத்தில் ஆசைவைக்கலாகாது. கர்ணன் தன் குண்டலங்களை இந்திரனுக்கு தானம் செய்யுங்காலத்தில், இந்திரனிடமிருந்து அதற்குப் பதிலாக சக்தி என்ற ஆயுதத்தை வேண்டி, அதனால் மனக்குழப்பமுள்ளவனாக ஆனான்.

பிரதி உபகாரத்தை எதிர்பாராமல் செய்யப்படும் தானமே ''ஸாத்விகதானம்'' எனப்படும். அவ்வித தானத்தையே செய்ய வேண்டுமல்லாமல், பிரதி உபகாரத்தில் ஒரு பொழுதும் ஆசை வைக்கலாகாது.

கர்ணனுடைய உடலோடு உடலாக விருக்கும் கவசத்தையும் குண்டலங்களையும், ஒரு சமயம் பிராம்மணவேஷம் பூண்டுவந்த தேவேந்திரன் யாசித்தான். யாசிக்கின்றவன் தேவேந்திரன் என்பதை உணர்ந்த கர்ணன் ''தங்களிடமுள்ள சக்தி என்ற ஆயுதத்தைப் பிரதியாகக்கொடுத்தால், என்னிடமுள்ளவற்றை நான் கொடுக்கின்றேன்'' எனக் கூறினான். இந்திரனும் ''நான் அந்த ஆயுதத்தை உனக்குத் தருகிறேன். ஆனால் ஒரே ஒரு நபரைத்தான் நீ அதனால் கொல்ல வேண்டும். மற்ற ஆயுதங்கள் இருக்கையில் அதைநீ உபயோகப் படுத்தக் கூடாது. மேலும் பிராணனுக்கு ஆபத்து

நேரிடுமோ என்று அஞ்சும் காலத்தில் தான் நீ உபயோகிக்க வேண்டும்'' எனப் பல நிபந்தனைகளை விதித்தான். அவ்வளவுக்கும் கட்டுப்பட்டு, கவசத்தையும் குண்டலங்களையும் இந்திரனுக்கு அளித்தான் கர்ணன்.

அதைப் பெற்றுக்கொண்ட இந்திரன் ''இந்த சக்தி ஆயுதத்தால் யாரைக்கொல்ல வேண்டுமென்று எண்ணுகின்றாயோ, அவனை ஸ்ரீமந் நாராயணன் ரக்ஷித்து வருகிறான்'' எனக்கூறி விட்டுச் சென்றான்.

பிறகு ''இந்த சக்தியைப் பெற்றும் பயனில்லாமல் போய் விட்டதே! இனி என்ன செய்யலாம்?'' எனக் கர்ணனுடைய மனது குழப்பமுற்றது.

பிரதி உபகாரத்தை எதிர் பாராமல் கர்ணன் கவசத்தையும் குண்டலங்களையுமளித்திருந்தால், அச்சிறந்த தர்மம் அவனுக்கு சரியான சந்தர்ப்பத்தில் மிகவும் உதவியளித்திருக்கும். ஆதலால் பிரதி உபகாரத்தை எதிர்பாராமல் தானம் செய்வதே மிகவும் சிறந்ததாகும்.

கபடமாக தர்மத்தை மிகச் சிறந்த முறையில் அனுஷ்டித்தாலும், முடிவில்பயனற்றதாகையால் கபட தர்மத்தை அனுஷ்டிக்கலாகாது. பிராஹ்மணன் என்று தன்னைச் சொல்லிக் கொண்டு கர்ணனால்சம்பாதிக்கப் பட்ட அஸ்திரவித்யை, பயனற்றதாக ஆகிவிட்டது.

பிருஹ்ம க்ஷத்ரிய வைச்யர் என்ற த்ரை வர்ணிகர்களுள் கர்ணன் சேராதவன் என்ற காரணத்தால், துரோணாசாரியார் அவனுக்கு பிரம்ம அஸ்திரத்தை உபதேசிக்க மறுத்து விட்டார்.

உடனே பரசுராமரை அண்டி, அவரிடம் தன்னை பிராம்மணன் எனக்கூறிக் கொண்டு, பிரும்மாஸ்திரத்தை உபதேசிக்க வேண்டுமென வேண்டிக் கொண்டான்.

அவனுடைய அடக்கம், ஒழுக்கம், பணிவிடை முதலியவற்றால் பரசுராமர் மிகவும் திருப்தியடைந்து, அவனுக்கு பிரும்மாஸ்திரத்தை உபதேசித்தார்.

பரசுராமரை வஞ்சித்து எப்படியாவது அவருடைய திருப்தியை சம்பாதிப்பதன் பொருட்டு, சாதாரண சிஷ்யர்கள் செய்வதை விடப் பலமடங்கு அதிகமாக குருவிற்குப் பணிவிடை முதலியவற்றைச் செய்தான் கர்ணன். பரசுராமரும் அவனை பிராம்மணன் என்றே பூர்ணமாக நம்பி, அவனை முக்கிய சிஷ்யனாக பாவித்து வந்தார்.

ஒரு சமயம், கர்ணனுடைய துடையில் தலையை வைத்துக் கொண்டு பரசுராமர் தூங்கினார். அப்பொழுது, காட்டிலுள்ள

பயங்கரமான பெரிய புழு ஒன்று, கர்ணனுடைய துடையைத் துளைத்து, இரத்தம் தாரைதாரையாகக்கொட்டிற்று. இருந்தாலும் ஆசார்யனுடைய தூக்கம் கலைந்து விடுமோ என்று அஞ்சி, கர்ணன் துடையை அசைக்கவுமில்லை. புழுவை அகற்ற சத்தம் செய்யவுமில்லை. தாங்க முடியாத வேதனையை மிக தைர்யத்துடன் பொறுத்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம், அவன் துடையிலிருந்து வழிந்தோடிய இரத்தம் தலையில்பட்டு, பரசுராமர் விழித்துக் கொண்டார். தலையில் இரத்தத்தைக் கண்டதும் ''என்ன நடந்தது?'' எனக் கர்ணனை வினவினார். சமீபத்திலிருந்த காட்டுப்புழுவையுங் கண்டார்.

அச்சமயத்தில் கர்ணனால் உண்மையை மறைக்க முடியவில்லை. நடந்ததை நடந்தபடியே கூறினான். உடனே சினங்கொண்ட பரசுராமர் ''நீ யார்? உண்மையில் பிராம்மணனா? பிராம்மணனுக்கு இவ்வளவு வேதனையைப் பொறுத்துக் கொள்ளக்கூடிய தைர்யம் இராதே?'' எனக் கடிந்தார்.

அப்பொழுது ''நான் பிராம்மணனும் அல்ல, க்ஷத்திரியனுமல்ல'' என்று உண்மையை உரைத்தான் கர்ணன்.

''ஏ மூடா! என்னை வஞ்சித்து நீ பிரும்மாஸ்திரத்தைப் பெற்ற காரணத்தால், அந்த வித்யை உனக்கு அவசியமான காலத்தில் தோன்றாமல் போகட்டும்'' எனப் பரசுராமர் சபித்தார்.

பிறகு கௌரவ பாண்டவ யுத்தகாலத்தில், அர்ஜுனன் மேல் பிரும்மாஸ்திரத்தைப் பிரயோகம் செய்ய வேண்டுமென கர்ணன் எண்ணும்பொழுது, அது அவனுக்குப் புலப்படாமல் போய் விட்டது.

இங்கு, குருசுச்ரூஷை முதலிய தர்மங்கள் மிக ஒழுங்காக அனுஷ்டிக்கப்பட்டபோதிலும், குருவை வஞ்சிக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டவை என்ற காரணத்தால், முடிவில் பயனற்றவைகளாக ஆகி விட்டன.

பிராம்மணனை அவமதிக்கலாகாது. ஏனென்றால் பிராம்மணர்களுடைய சாபம் மிகக்கொடியது. பொறுக்க முடியாதது. பரீக்ஷித் என்ற அரசன், பிராம்மணருடைய சாபத்தால் தக்ஷகன் என்ற சர்ப்பத்தால்கடிக்கப்பட்டு, அதன் விஷமாகிற அக்கினியில் நாசத்தை யடைந்தான்.

பரீக்ஷித் என்ற அரசன், ஒரு சமயம் வேட்டையாடுவதற்காக வனத்திற்குச் சென்றான்.

பல மிருங்களைத் துரத்திக் கொண்டுவெகுதூரம்சென்றதும், பசியாலும் தாகத்தாலும் மிகவும் பீடிக்கப்பட்டு, சமீபத்தில் எங்கேயாவது குளமோ கிணறோ இருக்கின்றதா என்று அறிவதற்காக, பல விடங்களிலும் சுற்றினான். பயனில்லை. எந்த இடத்திலும் நீர் நிலயமே காணப்படவில்லை.

அங்கு ஓர் இடத்திலுள்ள ஆசிரமத்திற்குள் நுழைந்து, கண்களை மூடிக்கொண்டும், மூச்சையடக்கியும், இவ்வுலக வியவஹாரங்களையே மறந்தும், ஸமாதி நிலையிலிருக்கும் சமீகர் என்ற முனிவரைக் கண்டான்.

அவனுக்குள்ள தாகத்தால், அம்முனிவருடைய நிலையைக்கூட உணராமல் ''கொஞ்சம் நீர் கொடுங்கள்'' என்று கேட்டான்.

முனிவரிடமிருந்து யாதொரு பதிலும் இல்லை. உடனே அரச

னுக்கு அளவுகடந்த கோபம் ஏற்பட்டது.

''அரசனுக்குரிய உபசாரங்களை இவர் செய்யாதது மன்னியில், நமது வேண்டுகோளைக்கூட இவர் இலக்ஷயம் செய்யாமல் நம்மை மிகவும் அவமதித்து விட்டாரே'' என்றெல்லாம் எண்ண எண்ண, அவனுடைய கோபம் அதிகரித்தது.

உடனே, சமீபத்தில் இறந்து கிடந்த ஒருபாம்பைத் தனது வில்லின் நுனியால் எடுத்து, அம்முனிவருடைய கழுத்தில் போட்டு விட்டு நகரத்திற்குச் சென்றான்.

அம்முனிவருக்கு சிருங்கி என்ற ஒரு குமாரன் இருந்தான். இவ்விஷயத்தை அவன் கேள்விப்பட்டதும், ''அந்தணர்களை அரசன் அவமதிக்கும் காலமும் ஏற்பட்டு விட்டதா! இப்பொழுது பார்க்கட்டும் என்னுடைய வீரத்தை!'' எனக்கூறி, ''இன்று முதல் ஏழாவது தினத்தன்று, தக்ஷகனுடைய விஷாக்னியால் அந்த அரசன் உயிர்துறக்கக் கடவான்'' என்று சபித்தான். அந்த சாபமும் அவ்விதமே பலித்தது. ஆதலால் அந்தணர்களை ஒரு பொழுதும் அவமதிக்கக் கூடாது.

அவரவர்களுடைய அதிருஷ்டத்திற் கேற்றபடி தெய்வாதீனமாகப் பொருள் கிடைக்கும். ஆதலால் சேவிக்கத் தகாத துஷ்டர்களைச் சேவித்தாவது பொருளைச் சேகரிக்க வேண்டுமென்று எண்ணலாகாது. துஷ்டனை துர்யோதனனைப் பொருளாசையால் அண்டிய துரோணர் முதலியவர்கள் கடைசியில் போரில் மடிந்தனர்.

❋

நடமாடும் வேதமாதா

ஸ்ரீமதி வசுமதி ராமசாமி

வேதம், ஒரு உத்தம மனிதன் எப்படி வாழ வேண்டும், குடும்பத்தில் எந்த அளவுக்கு அமைந்திருக்கவேண்டும், பஞ்ச யக்ஞம். தேவ, மானுஷ, பித்ருர், பூத, ஜீவ யக்ஞம் ஒரு மனிதனால் எப்படி நிறைவேற வேண்டும் என்று சொல்லிற்று.

வேதமே உருவெடுத்தது. நடமாடும் வேதம், தெய்வமாக அறுபத்தாறு ஆண்டுகள் ஓய்வின்றி, கடமையை — பணியை ஆற்றி அமரத்துவம் எய்தது,

ஸௌக்கியமா?

நமஸ்காரம்.

வரணும்.

ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு மறுபடியும் நமஸ்காரம் செய்தால்,

மறுபடியும் ஸௌக்கியமா?

இப்படி அகமும் முகமும் மலர்ந்து,எந்த நேரத்தில் போனாலும்அன்புடன் ஆதரவுடன் பேசி விசாரிக்க, பிரும்ம ஸ்ரீ அனந்த ராமதீக்ஷிதர் அவர்களால் தான் முடியும்.

வேதம், மனிதன் பிறரிடம் எப்படி அன்பாக இன்முகமாக நடந்து கொள்ள வேண்டுமெனச் சொல்லிற்று.

பிறர் மனத்தை ஜாதிப் புஷ்பமாக மென்மையாக கருதுவார் தீக்ஷிதர்.

இறைவன் தன் உள்ளத்திலே நிறைந்திருக்கிறான் எனக்கண்ட மகான்கள் பலர் இருக்கிறார்கள், இருந்திருக்கிறார்கள். ஆனால் பிறருடைய இதயத்திலும் இறைவன் நிறைந்திருப்பதைக் கண்டவர் பிரும்ம ஸ்ரீ தீக்ஷிதர்.

புண்பட்ட மனத்திற்கு அன்புடன் பேசி, உள்ளத்திலே நிறைவை உண்டாக்கி விடுவார் பிரும்ம ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள். கங்கா பிரவாகம் போல் ஸ்ரீமத் ராமாயணம்,பாரதம்,பாகவதம், ஸ்காந்தம் எந்தப் புராணமானாலும், அவர் அகக்கண்ணிலே குருவாயூரப்பன் தோன்றி லீலை புரிய ஆரம்பித்து விடுவான். நம்மையும் அப்பனை தெரிசிக்கும்படி செய்துவிடுவார். மஞ்சுளசரணம், மங்கள கடாக்ஷம், 'மிஞ்சிக்கயிறு, பட்டுபீதாம்பரம், என்றெல்லாம் இப்படி அழகாக வர்ணிக்கும்

போது, குருவாயூரப்பன் எதிரே வந்து விடுவான். இது அவர்கள் உபந்யாஸத்தின் தனிப்பட்ட சிறப்பு.

உபந்நியாஸத்தில் பக்தியிலே மெய்மறந்து, கால நிர்ணயமின்றிப் போய்விட மாட்டார்கள். வேதமாதா அவரை ரக்ஷிக்க வந்து விடுவாள். தீக்ஷிதர் அவர்கள் வேதம் சொல்லும் போது மக்கள் ரக்ஷை தரித்துக்கொண்ட மாதிரி உணர்வார்கள்.

உடனே ஹ்ரீம் ...... என்று சுலோகத்தைச் சொல்லி, எல்லோரையும் அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமாகும்படி செய்து விடுவார்கள். ஞானிகள் எல்லா தெய்வ உருவையும் முழுமையாக காண்பவர்கள்.

பிரும்ம ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுடைய நகைச்சுவை மிகவும் உயர்ந்தது. ஒருசமயம்'' தாங்கள் உபந்நியாஸத்தில் அடிக்கடி அசடுகள் எனக் குறிப்பிடுகின்றீர்களே? யாரை நினைவில் கொண்டு?'' என்று கேட்டேன்.

''அப்படிச் சொல்லும் போது ஸ்திரீகள் இருக்கும் பக்கம் பார்க்க மாட்டேனே'' என்றார்.

மற்றொரு சமயம் ''நீங்கள் நரஸ்துதி செய்வதாகச் சிலர் குறை கூறுகிறார்களே'' என்றேன்.

சிரித்துக் கொண்டே ''தர்மம் செய்கிறவர்களைச் சொல்ல வேண்டாமா? எல்லோரையும் தர்மபுத்திரர் கண் கொண்டு பார்க்கணும். துரியோதனன்கண்களுடன் பார்க்க கூடாது. வேதம் ஜீவனிடம் குறையை தோஷத்தைக் காணாதே யென்று சொல்லி இருக்கிறது'' என்றார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன், அவர்கள் சுய சரிதத்தை அவர் சொல்ல நான் எழுதும் பெரும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. பல இடங்களில் மிகவும் உருக்கமாக இருக்கும். இளம் வயதிலே அவ்வளவு வசதியின்றிப் பாடம் பல ஆண்டு கஷ்டப்பட்டுப் படித்திருக்கிறார்கள். ஆசார்ய பக்தி, தெய்வபக்தி, பெரியோர்களிடம் பக்தி, அபரிமிதமான குணம் எல்லாம் அவர்களிடம் சின்ன வயதிலேயே குடி கொண்டிருந்திருக்கிறது என்று, அந்த சரிதத்திலிருந்து தெரிகிறது. அது பின்னால் கடலாக வளர்ந்து விட்டது. பிரும்ம ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்குப் பணக்காரர்கள் ஏழைகள் என்ற வித்தியாஸம் கிடையாது. ஜாதிமத பேதமற்ற சமரஸ நோக்க முள்ளவர்கள். சாதரணமாக எதாவதுஒரு சிறு விஷயத்தைப்பற்றிச் சொன்னால் கூட, அதை அழகாகப் பாராட்டி உபந்நியாஸத்தில் சொல்லிவிடுவார்கள். ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் தன்னுடைய அதிமேதாவிலாஸத்தினாலும் அருங்குணத்தினாலும் இன் சொல்லாலும், காசியிலிருந்து கன்னியாகுமரிவரை ஒவ்வொரு குடும்பத்திற்கும் பந்துவாகவும், குருவாகவும்,வழி காட்டியாகவும்

இருந்தார்கள். ஒவ்வொருவரும் தம்மிடம் தனிப்பட்ட அன்போடு இருப்பதாக உணர்வார்கள்.

பிரும்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்களை யாராவது தவறுதலாகத் தன் சிறுமை புத்தியினுல் ஏதாவது வந்து குற்றமாகச் சொன்னுல், கொஞ்சம் கூடக் கோபமடைய மாட்டார்கள். ''நின்றுகொண்டு பேசக்கூடாது. உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்று தன்பெருந் தன்மையால் அவர்கள் சிறுமையைப் போக்கி விடுவார்கள்.

பிரும்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்குப் பரந்த உள்ளம். ஸர்வே ஜனு: சுகினோபவந்து என்று எப்பொழுதும் நினைப்பார்கள். அதுமட்டுமல்ல. அவரவர்கள் எந்த விருப்பத்தை நினைக்கிறார்களோ, அப்படியே நிறைவேறும் என்று ஆசிர்வதிப்பார்கள். ஸித்தி பெற்ற அந்தவாக்கு, ராமனையும் கோபாலனையும் அம்பிகையையும் சொல்லிச் சொல்லித் தழும் பேறின அந்தநாக்கு, எந்த மகத்தானதைச் சொன்னுலும் பலனளிக்கும்.

வேத ஸ்வரூபமாக இருந்த ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள், தமக்கும், உபந்நியாஸத்திற்கும் அவர்களுடைய வேதத்தைச்சட்டமாக்கிக் கொண்டு விட்டார்கள். உபந்நியாஸம் பரிபூரணமானது. தனிப்பட்டது. அரிச்சந்திரன், சாவித்திரி ஸத்தியவான், இந்தக் கதைகளை நாம் கேட்கும் போது, மெய்மறந்து கண்களில் நீர் நிறைந்து மெய் சிலிர்த்துத்தான் கேட்போம்.

பிரும்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் காலத்தை வென்றவர்கள். நம்மைப் போன்றவர்களிடம் மிகுந்த கருணை கொண்டு, சந்நியாச ஆர்வம் மேற் கொண்டு, பகவத் ஸ்வரூபமாய் ஸமாதியிலே கோவில் கொண்டு விட்டார்கள். அந்த ஸமாதி நம்முடைய பிரார்த்தனை ஸ்தலம் ஆகி விட்டது. நமக்குக் இடைத்திருக்கும் மற்ருெரு அனுக்கிரகம், ஜயமங்கள ஸ்தோத்திரப் புத்தகங்கள். ஸ்ரீ அனந்தராம (தீக்ஷிதர்)திருவடிகளே யதீந்தரர் சரணம்.

[ஸ்ரீ தீக்ஷிதர் பெருமான் ஸமாதியடைந்த செய்தி கிடைப்பதற்கு முன்னமேயே, சென்றமாத ''அருள்'' இதழ் தயாராகி விட்டிருந்தது. அதனுல் அவர்களைப் பற்றி அந்த இதழில் நமது இரங்கற் கட்டுரையை வெளியிட இயலாமல் போய்விட்டது. அந்தக் குறையை இந்த இதழில் நிறைவு செய்துள்ள ஸ்ரீமதி வசுமதி ராமசாமி அவர்கட்கு, எமது நன்றி. — ஆசிரியர்]

திருப்புகழ் தண்டபாணி ஸ்வாமிகள்

ஸ்வாமி சரவணபவானந்தர்

சிறந்த முறையில் விரைந்து பாடும் ஸ்ரீதண்டபாணி ஸ்வாமிகளின் கவிதா சக்தியைக் கண்டு, இவரது ஆசான், "வருக கவி மழையே!" என்று அழைத்து, "ஒயாமாரி" என்ஞெரு பட்டமும் கொடுத்தார்.

முருகன் கருணையினல், இவர் தமது 18வது வயதில் வண்ணம் பாடத் தொடங்கினர்.

எனினும் முருகன் திருவருளைப் பரிபூரணமாகப் பெற்ருலன்றி உயிர் வாழ்வதில்லை என உறுதி பூண்டு, திருமலை சென்ருர். திருவருட் காட்சி வேண்டினர். அழுதார், தொழுதார், ஆடினர், பாடினர். நினைத்த வண்ணம் நிகழவில்லை. இறுதியில், தாம் அதுவரையிலும் பாடிய பாடல்களை ஒரு பேழையில் வைத்து விட்டு, மேல் திசை நோக்கிச் சென்று, வடக்கே தலைவைத்து, தெற்கே கால்நீட்டி, வைராக்கிய சித்தத்தொடு உயிரைத் திரணமாக மதித்து, மலைமேலிருந்து மடமட என்று உருண்டார்.

இதனை அவர் தமது "குருபர தத்துவத்"தில் கூறுகின்ருர். "வடதிசையில் தலை வைத்து மறலிதிசை கால் நீட்டி, உடலை அந்தக் குன்றத்தின் உச்சியினில் உருட்டிவிட்டேன்; விடலையிடும் தேங்காய் போல் வேறுபட்டுச் சிதருமல், மடமடெனக் கொண்டங்கோர் மண்தரையில் விட்டதுவே"

ஒருவித ஊனமும் இன்றி உடல் மண்தரையில் வந்து விழுந்தது. இவரது மன உறுதியையும், நம்பிக்கையையும் என்னென்பது!

அருணகிரிநாதர், திருவண்ணமலைக் கோபுரத்தினின்றும், "குமரப்பா!" என்று குதித்தார். முருகன், "அமரப்பா!" என்று அணைத்தான்.

அதுபோல், முருகன் இவரைத் தாங்கித் தரையில் விட்டு, மன வெளியில் "இப்படி விழலாமா? இறந்தால் என் செய்வது? நான் அல்லவா தாங்கினேன்? இன்று முதல் நீ புத்துடல் பெற்ருய்.

எனவே, நீ ஒரு திருஉருவாளன்'' என்றருளினன்.

அதற்கு இவர், ''நான் ஆன்மா வானவன். எனக்கு அழிவேது? உடல்போனால் வேறு ஒன்றுவரும், ஆனால், உன் அருள் ஒன்றுதான் எனக்குத் தேவை'' என்றார்.

''இப்படிஉருண்டிடத்துணிந்தனை வீணே
மருண்டு இறந்திடில் என் செய் வாய்?
தாங்கினேன் யான் என்றான் வடி வேலன்''

''அதற்கென் தன்னுடல் அழிந் திடில் வேறுடல்
அவன் செயக் காத்துளான் என்றார்''

''உய்ந்ததால் திருஉருவாளன் என்று
ஒரு மெய்ப்பேர் கொடுத்தான்''

(தண்டபாணி விஜயம்)

இடது புஜத்தில் காயம் இருந்தது.

பழைய குறத்தி வள்ளி, புதுக் குறத்தியாக வந்து புண்ணாற்றி மறைந்தாள்.

சுவாமிகள், பல தலங்கள் சென்று பாமாலை பாடினார்.

ஒரேதடவை பாடுவார். அவை களைத் தாமே பனையேட்டில் எழுதுவார்.

இரண்டாம் பிரதி செய்வது கிடையாது. ஒற்றுக்குப் புள்ளி இருக்காது. ரகரத்திற்குக் கீழ்க் கோடு கிடையாது. ஆனால் எழுத்து முத்து போன்றது.

வடலூர் இராமலிங்க வள்ள லார்க்கும் இவருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கடலூரில்மூன்று முறை கண்டு அளவளாவி யுள்ளார்கள்.

தாயுமானாரின் மறுபிறவியே வள்ளலார் எனக் கண்டார் தண்டபாணி சுவாமிகள்.

அருணகிரியின் மறுஅவதாரமே தண்டபாணி சுவாமிகள் எனக் கண்டார் வள்ளலார்.

''கூடலூரில் ஒருமனையிற் குலவும் வடலூரானைக் கண்டு
பாடல் மதுரம் கலந்தருந்தி...!''

என்று, சுவாமிகள் புலவர் புராணத்தில் குறிப்பிடுகின்றார்.

பின்னர், வள்ளலார் மறைந்த போது,

''இன்னும் வடலூரான் எழுந்திட ஏன் செய்தில்லாய்?'' என்று கேட்கின்றார்.

பல்லாயிரம் பாடல் கொண்ட ஏடுகளைத் தாம்பிரபருணி ஆற்றி லும், திருச்செந்தூர் கடலிலும் கிழித்துப் போட்டதாகக்கேள்வி.

திருவயிந்திரபுரம் சென்ற போது இவரது கோலத்தைக் கண்டு, ''இடக்கரத்தில் வடகலை நாமத்தை இடலாமா?'' என் றனர் அங்குள்ளவர்கள்.

அதற்கு சுவாமிகள், ''வலது கையினால் இட்டது வடகலை! கிழக்கு நோக்கி நிற்கின்றபோது, இடது கையில் உள்ள வடகலை வடக்கு பக்கம் பார்த்து இருப் பதை அறியமாட்டீர்களா?'' என் றதும், கேட்டவர்கள் வியப் படைந்தனர்.

அதன்பின், முருகனின் ஆணை யின்படி, புதுவை வேளாளர் குலத்தில் வந்த வேலாயுதம்

பிள்ளையின் மகள் சுந்தரம்மாளை, மைலம் சிவஞான பாலைய சுவாமிகளின் திருமுன் திருமணம்செய்து கொண்டார். உருத்திராக்கத் தாலி அணிவித்தார்.

அநேக தலங்கள் சென்று, ஆசு கவியாகப் பாடிய பாடல்கள் அனந்தம்.

பலமுறை, முருகன் கனவில் காட்சியளித்தான்.

உதடு முட்டாமல் பாடும் நிரோட்டம் பாடினார். சித்திரக் கவிகள் பலவும் செய்துள்ளார். இவர் பாடாத பாடல்வகையே இல்லை யெனலாம்.

வேகமுடைய இவரது எழுத்தாணியை, ''சருவதாரணி'' என்று புலவர்கள் புகழ்ந்து கூறினார்கள்.

தில்லைத் திருவாயிரம் பாடி, சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் அரங்கேற்றம் செய்தார், அதுபோது, அந்தணர்கள் திருவாசகத்தின் பின்னே வந்த திருவாயிரம் என்று சிறப்பித்தனர்.

சென்னைக் கந்த கோட்டத்தில் பிள்ளைத் தமிழ் அரங்கேற்றம் செய்தபோது, ஒருவைணவர் வர மறுத்தார். அதற்கு சுவாமிகள் ''திருமால் உலகத்தை ஒரு அடியால் அளந்தபோது, இந்த கந்த கோட்டத்தையும் சேர்த்துத் தானே அளந்திருப்பான்? எனவே வரச் சொல்லும்!'' என்றார்.

வைணவரும் வந்தார். பணிந்தார். உண்மை நிலையை உணர்ந்தார்.

கோவை தவத்திரு ராமானந்த சுவாமிகள், பழநியில் தண்டபாணி சுவாமிகளை நேரில் தரிசனம் செய்து, உபதேசம் பெற்று சித்திகள் கைவரப் பெற்றார். சிரவண புரத்தில், கௌமார மடலாயத்தை நிறுவினார். இவர் நிறைந்த நூல் ஆராய்ச்சியுடையவர், குருபக்தியிற் சிறந்தவர். நூறு ஆண்டுகள் வாழ்ந்தவர்.

திருவரங்கத் திருவாயிரம் அரங்கேற்றம் செய்தபோது, ஒரு பெண் விஷந்தீண்டி இறந்து விட்டாள் என்று கேள்வியுற்று, கருடாழ்வரை அழைத்து உடன் சென்று திருநீறுதந்து பிழைப்பித்தார்.

அன்றிரவு, திருமகள் சுவாமிகளின் கனவில் தோன்றி, ''உன் திருவாயிரம்கேட்டு அரங்கநாதன் உனக்கு விலையாகி விட்டான்'' என்றாள்.

ஒரு பாடல் எழுதப் புகுந்தால், அதன் பின்னே பல பாடல்கள் தொடர்ந்து முன் வந்து நிற்கும். அதனால், தவம் ஜெபம் தியானம் செய்வதற்கும் பெருந்தடையாய் இருந்ததாம். எனவே,

''தமிழ்க் கவி உதிக்கும்
வம்பு சகித்திலனே...!''
என்று சலித்துப் பாடுகின்றார்.

இறுதியாக, சான்றோர் மலிந்த தொண்டை நாட்டின் உட்பிரிவாகிய நடுநாட்டில், பசுக்கள் தவங்கிடந்து கொம்பு பெற்ற தலமாகிய ''கோமாத்ருபுரம்'' என்னும் ஆமாத்தூர் வந்தடைந்தார்.

ஆங்குள்ள அபிராமேஸ்வரர் மீது பதிகச் சதகமும், சதகப் பதிகமும் பாடினார்.

முன்னம் முருகன் சொன்னபடி ''புலவர் புராணம்'' பாடி முடித்தார்.

'' மாதைத் தலபுராணம் '' பாடினார்.

அம்மையார்க்குக் கல்லாடை கொடுத்தார்.

மரங்கொத்திக் குருவியின் அடையாளமிட்ட கொடி பெற்றார்.

எல்லைதாண்டா விரதம் பூண்டார்.

எல்லாப் பொருள்களும் அவர் இருக்கும்இடம் வந்து சேர்ந்தன. 58ம் வயதில், விளம்பி வருடம் ஆனி மாதம், 23ந் தேதி (5-7-1898) சனிக்கிழமை திருவோணத்தில், சுவாமிகள் மகா சமாதி நிலை யடைந்தார்.

தண்டபாணி சுவாமிகளின் ஏடுகள், இன்றும், திருவாமாத்தூர் கௌமார மடாலயத்தில், சுவாமிகளின் பரம்பரையினரால் பாதுகாக்கப் பெற்றுவருகின்றன.

சுவாமிகளின் மகன் செந்தில் நாயகம் பிள்ளை
பேரன் — முருகதாசர்.
கொள் பேரன் — சங்கரலிங்கம்.

சுவாமிகளிடம் சந்த இலக்கணம் பயின்றவர்கள் வெண்பாப் புலி வேங்கட சுப்பு பிள்ளை, அரன்வாயில் தங்கவேல் பிள்ளை, ஊற்றுமலைக் கந்தசாமிக் கவிராயர், நாடகத் தந்தை சங்கரதாஸ் சுவாமிகள், வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முனிவர்.

நெருங்கிப் பழகினவர்கள் :—
அஷ்டாவதானம் பூவைகலியாண சுந்தரனார்.
புரசை — சபாபதி முதலியார்.
பூண்டி — அரங்கநாத முதலியார்

மாணவர்களில் தலைசிறந்தவர் சிரவணபுரம் இராமானந்த சுவாமிகள்,

சுவாமிகளை அன்புடன் ஆதரித்தவர்கள் :—

புதுவை அமைச்சர் தானப்பர்.
இருதயாலய மருதப்பதேவர்.
தேவகோட்டை மேல வீட்டுச்
சிதம்பரம் செட்டியார்.

துணைவியார் சுந்தரத்தம்மாளின் கனவில் ஒருநாள் சுவாமிகள் தோன்றி, ''கொலை-புலை ஒழியும் வரை நாம் இங்குதான் இருப்போம். கவலைப்படாதே!'' என்று சாதித்தார்.

வடலூரார் மீண்டும் வர வேண்டும்.

சமய அதீதமான சமரசம் ஓங்க வேண்டும்.

வண்ணத்தமிழ் வளர வேண்டும்.

முழுமுதற் கடவுளாகிய முருகன் திருவருள் எங்கும் முழங்கவேண்டும்.

உலகம் உய்ய வேண்டும்.

இவைதாம் வண்ணச் சரபமாகிய திருப்புகழ் தண்டபாணி சுவாமிகளின் குறிக்கோள்கள். அவர்கள் திரு அவதாரம் செய்த பின்,

தமிழ் தழைத்தது!
இசை ஏற்றம் பெற்றது!

அவர்கள் எண்ணியவண்ணம், தெள்ளுதமிழ் வள்ளலார் திரும்ப வரும் நன்னாளை, நாமும் ஆவலோடு எதிர்நோக்கி யிருப்போமாக!


DIRECTOR
காளி மார்க்
அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாறாத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
Kali mark

நளன் வழிபட்ட நள்ளாறு



ஸ்ரீ முருகா
தண்டபாணி

நளச் சக்ரவர்த்தியைக் கலி புருஷன் ஆட்டி வைத்த கதை, மகாபாரதத்தில் மிகவிரிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், அவர் சனிபகவானால் ஆட்டி வைக்கப் பட்டதாகக் கருதிக்கொண்டிருப்பவர்கள்தாம் நாட்டில் மிகப்பலராகஇருக்கிறார்கள்.

அவ்வாறாயின், கலிபுருஷனும் சனிபகவானும் ஒருவரே தானா? அல்லது, அவர்கள் இருவரும் வெவ்வேறானவர்களா?

இப்போது நடந்து கொண்டிருப்பது கலியுகம். இந்த யுகத்துக்கு அதிதேவதை கலிபுருஷன்.

மக்களின் உள்ளத்தை தீய வழிகளில் திருப்பி விடுவதே கலிபுருஷனின் இயல்பு. பாரதத்தில் வருகிற துர்யோதனன், கலிபுருஷனின் அவதாரம்.

ஆனால், ஒருவர் அறநெறியில் நின்று, ஆசாரசீலராய் வாழ்ந்து கொண்டிருக்கும் வரையில், அவரைக்கலிபுருஷனால் அணுகவே முடியாது. நளச்சக்ரவர்த்தியைப் பீடிப்பதற்கு, கலிபுருஷன் பன்னிரண்டு ஆண்டுகள் காத்திருந்தானாம். கடைசியாக ஒருநாள், நளன் தன்னையும் மறந்து சிறிது ஆசாரக் குறைவாக நடந்து கொண்டபோதுதான். கலிபுருஷனால் அவனைப் பற்றிக்கொள்ள முடிந்தது.

அந்தச் சமயத்தில் நளமகாராஜனுக்கு ஏழரை ஆண்டுச் சனி ஆரம்பமாகியிருந்ததாம். அதன் பயனாகத் தான் போலும், அவன் சரியாகக் கால்கழுவாமல்சந்தியாவந்தனம் செய்ய முற்பட்டான்! அதாவது, கலிபுருஷன் நளனிடத்தில் பிரவேசிப்பதற்கு, சனி பகவான் வாசற்கதவு திறந்து வழி விட்டார் என்று சொல்ல வேண்டியதிருக்கிறது. அதனால் தான், கலிபுருஷன் பெயர்கூட மறைந்து போய், நளனைச் சனி பகவான் பீடித்ததாக உலகப் பெருவழக்கில் பேசப்பட்டு வருகிறது.

நம் தமிழ்நாட்டில், அந்த நளச்சக்ரவர்த்தியால் வழிபாடு

செய்யப்பட்ட திருத்தலம் ஒன்று இருக்கிறது. அதுதான் திருநள்ளாறு எனப்படுவது. "வளங் கெழுவு தீபமொடு தூபமலர் தூவி, நளன் கெழுவி நாளும் வழி பாடு செய் நள்ளாறே!" என்கிறார் திருஞான சம்பந்தப் பெருமான். நள்ளாற்றுப் பெருமானை வழிபாடு செய்த பின்னர் தான், நளமாமன்னனுக்குக் கலிதோஷம் நீங்கியதாம்.

கலிபுருஷனுக்கும் சனிபகவானுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை எடுத்துக் காட்டுவது போல, திருநள்ளாறனது சனி பகவானுக்குஉரிய ஒரு க்ஷேத்திரமாகவே போற்றப்படுகிறது. இரண்டரை ஆண்டுகளுக்கொரு முறை வருகிற சனிப் பெயர்ச்சித் திருநாள், இங்கு மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஜாதகரீதியாகச் சனி தோஷத்தால் பீடிக்கப்பட்டவர்கள், இங்குள்ள சனிபகவான் சன்னிதியில் வழிபட்டு, தம் துயர் நீங்கப் பெறுகிறார்கள்.

ஆனால் உண்மையில், திருநள்ளாற்றுத் திருத்தலத்தின் நாயகர் சனி பெருமான் அல்ல; சிவபெருமான். ஸ்வாமியின் பெயர் தர்ப்பாரண்யேசுவரர். அம்பிகையின் பெயர் போகமார்த்தபூண்முலையாள். இது சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. இங்குநகரவிடங்கத் தியாகேசர் உன்மத்த நடனம் புரிகிறார். தர்ப்பைக் கொழுந்துகளை ஒன்று சேர்த்தாற்போன்ற திருவுருவத்தோடு, இங்குள்ள சிவலிங்கம் விளங்குகிறது.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய தேவார ஆசிரியர்கள் மூவரும், இங்கு வந்து இறைவனைத் தம் பாசுரங்களால் போற்றியிருக்கின்றனர். அருணகிரிநாதரும் இத் தலத்திலுள்ள முருகப் பெருமானைத் தம் திருப்புகழால் அருச்சித்திருக்கிறார்.

இங்குள்ள மகா கணபதிக்கு, சொர்ண விநாயகர் என்று பெயர். பிராகாரத்தில் ஒரு விசேஷமான பைரவர் சன்னிதி இருக்கிறது. ஊருக்கு வடமேற்கே, நளதீர்த்தம் என்னும் ஒரு திருக்குளமும் அமைந்திருக்கிறது.

நளனுக்கும் திருநள்ளாறுக்கும் ஒரு தொடர்பு இருப்பது போல, திருஞானசம்பந்தருக்கும் திருநள்ளாறுக்கும் கூட ஒரு தொடர்புஇருக்கிறது. அதாவது, மதுரையில்போய் சம்பந்தப்பெருமான் சமணருடன் வாது செய்தார் அல்லவா? அப்போது அவர் ஒரு திருப்பதிகத்தை ஏட்டில் எழுதி நெருப்பில் இட்டார். அந்த ஏடுவேகாமல் இருந்தது. அதனால் அந்தப் பதிகத்துக்குப் பச்சைத் திருப்பதிகம் என்றே ஒரு பெயர் வழங்குவது உண்டு.

இந்த நிகழ்ச்சி மதுரையில் நிகழ்ந்த போதிலும்கூட, சம்பந்தப்பெருமான் எழுதி நெருப்பில் இட்டது மதுரைத் திருப்பதிகம் அல்ல. அது திருநள்ளாற்றுத் திருப்பதிகம். திருநள்ளாற்றில் உள்ள போக மார்த்த பூண் முலையாள் என்ற அம்பிகையின் திருப்பெயரைக் கொண்டு தொடங்குவது.

இத்தனை சிறப்புக்கள் வாய்ந்த இத்திருத்தலமானது, காரைக்காலுக்கு மேற்கே மூன்றுகல் தொலைவில் இருக்கிறது. அன்பர்கள் தரிசித்து, இம்மை மறுமைப் பயன்களை எய்துவார்களாக!

●

என் தந்தை

கலைச்செல்வி இராம. மணிமேகலை

"திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" வாதவூரடிகளான மாணிக்கவாசகப் பெருமான் பாடியருளிய திருவாசகத்தின் பாடல்களில் பெரும்பகுதியை மனனம் செய்தவர், என் தந்தையார் உயர்திரு பிச்சப்பா சுப்பிரமணியம் அவர்கள். காரைக்குடிக்கும் தேவகோட்டைக்கும் இடையே உள்ள சிற்றூரான அமராவதி புதூரைச் சொந்த ஊராகக் கொண்ட அவர், அண்ணல மகாத்மா காந்தியடிகளுடன் நெருங்கிப் பழகியவர். கதராடை தவிர மற்ற ஆடைகளை அணியாதவர். கதர்க் குல்லாயுடன் காட்சியளிக்கும் என் தந்தையை, இராஜாஜி அவர்கள் மிகவும் புகழ்ந்து கூறுவார் என்று என் தந்தை சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிய என் தந்தையார், ஒரு பண்பட்ட பேச்சாளர் மட்டுமல்ல; ஒரு எழுத்தாளருங் கூட. ராகத்துடன் திருவாசகப் பாடல்கள் அவர் பாடும்போது, பல அன்பர்கள் மெய்ம்மறந்திருப்பார்கள்

அண்ணல் மகாத்மா காந்தியடிகளை அமராவதி புதூருக்கு அழைத்து வந்த அன்பர்கள் சிலரில், என் தந்தையும் ஒருவர். என் பெரிய தமக்கையார் தன் கழுத்துச் செயினைக் கழற்றி அண்ணலின் கைகளில் கொடுக்க' அண்ணல் அந்த இடத்திலேயே அதை ஏலம் போட்டு, அதில் கிடைத்தபணத்தைத்தான் திரட்டிவந்த நிதியில் சேர்த்துக் கொண்டாராம். ஏறக் குறைய 40 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம் என்றாலும், எங்கள் குடும்பம் மறக்க முடியாத சம்பவம் என்பதை யாரேனும் மறுக்க முடியுமா? அண்ணல் மகாத்மா வார்தாவில் இருந்து தன் கைப்பட எழுதிய கடிதம் ஒன்று பிரேம் போடப்பட்டு, என் சிறிய தமக்கையார் இல்லத்தில் தேவகோட்டையில் இன்னும் இருக்கிறது, என் தகப்பனருக்கு Dear Subramaniam என்று தொடங்கி எழுதிய அந்தக் கடிதத்தைப் படிக்கும்போது, நான் பெரு மகிழ்ச்சி அடைவது வழக்கம்.

தமிழ்க் கடல் திரு. ராய. சொக்கலிங்கம், திரு, சா. கணேசன், திருவாசகமணி கே. எம். பாலசுப்ரமணியம் ஆகியோர் என் தந்தையின் நெருங்கிய நண்பர்கள். பல செல்வந்தர்களுடன் பழகிய என் தந்தை, ஏழைகளிடம் மிகுந்த பிரியம் காட்டினர் என்பதற்கு, அமராவதி புதூரில் இப்போது இயங்கிவரும் காந்தி சமதர்ம பாடசாலையே ஒரு சாட்சி. அண்ணல் காந்தி

யின் பெயரால் ஒரு இலவச மருத்துவசாலை ஒன்றும் நடத்தி வந்தார். காந்தி சமதர்ம பாடசாலையின் ஆசிரியர் உயர்திரு நாராயண ஐயர் அவர்கள். என்னுடைய முதல் ஆசான் அவர்தான். மணலைக் கொட்டிப் பரப்பி அதில் 'அ' என்று எழுதக் கற்றுத் தந்தவரும் அவரே.

''ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் பராசக்தி ஓம் சக்தி ஓம்'' என்ற மகாகவி பாரதியாரின் பாடலைச் சொல்லித் தந்தவரும் அவரே. ''அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' என்ற பாடலைச் சொல்லித்தந்த அவரை என்னால் எப்படி மறக்க முடியும்? சோசலிசம் சோசலிசம் என்று மேடையில் சுலபமாகப் பேச்சாளர்கள் பேசி விடுவார்கள். வாழ்ந்து காட்டிய என் தந்தையாரும் நாராயண அய்யரும் மனித தெய்வங்கள். நம் தாய் மொழியாம் இனிய தமிழை நான் மேற்கொண்டு படித்துக் கலைச் செல்விப்பட்டம்பெற உதவியவர் என்னுடைய ஆசான் உயர்திரு. பி. ராமமூர்த்தி ஐயர் அவர்கள். ஓரளவு ஆங்கிலம் தெரியக் கற்றுத் தந்தவர்கள், கேரளாவைச் சேர்ந்த ஸ்ரீமதி ராஜலட்சுமி அம்மையார், தலைமை ஆசிரியை வடநாட்டில் இருந்து வந்த அம்மையார். அவர் பெயரும் ராஜலட்சுமி அம்மையார். அவர் தம்பூராவை வைத்துக் கொண்டு ஹிந்துஸ்தானி சங்கீதம் பாடும் போது, அந்த பக்த ''மீரா''வே மறு உருவில் என் எதிரில் வந்து பாடுகின்றாரோ என்று நினைக்கத் தோன்றும், எனக்கு இசையில் ஓரளவு பயிற்சி உண்டு என்றால் அதற்குக் காரணமானவர்கள் ராஜலட்சுமி அம்மையாரும், எங்கள் பள்ளி வார்டன் அம்மா திருமதி பாலாம்மாள் அவர்களும் தான்.

கொப்பனாபட்டி கலைமகள் கல்லூரியில் படித்த பெண்கள் அனைவருக்கும் ஒரு ஒப்பற்ற தாயாராக விளங்கிய திருமதி மெ. நாச்சம்மை ஆச்சி அவர்களை நன்றியுணர்வுடன் அடிக்கடி நினைவு கூர்தல் என் பழக்கம். என் வாழ்க்கையில் எவ்வளவோ பேருக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன், அனைவருக்கும் என் நன்றியும் வணக்கமும் என்றும் உரியது.

இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில்,தேவகோட்டையில் இருந்து எங்கள் உறவினர் பெண்ணான இந்திரா B. A. யிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. தற்சமயம் M. A. வகுப்பில் படிக்கும் இந்திராவின் கடிதத்தின் ஒரு பகுதியை இதில் பிரசுரிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடிதத்தின் வாசகம் வருமாறு:

''மனிதனை மனிதனுக்குவது அருளா? பொருளா?'' என்ற தலைப்பில் N. S. M. P. S. உயர்நிலைப் பள்ளியில் பட்டி மன்றம் நடந்தது. நான் 'அருள்' என்ற கட்சியில் பேசினேன். தங்களுடைய 'அருள்' பத்திரிகைஎனக்கு எண்ணற்ற கருத்துக்களை நல்கியதுடன், அப்பத்திரிகையும் ஒரு சாட்சியாக என் கட்சியை வலு

லூட்டியது. என் கட்சிதான் வெற்றி பெற்றது. 'பொருள்' கட்சியில் பேசியவர் அருள் பத்திரிகையையும் பொருளுக்கே வெளியிடுகின்றனரே யன்றி இலவச வெளியீடாக வரவில்லை என்று என் பேச்சை மேடையிலே மறுத்தாலும், இறுதியில் உண்மையை ஒத்துக் கொண்டார்கள். வெற்றியின் பங்கு தங்கட்கும் உண்டு என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

இப்படிக்கு
அன்புள்ள,
இந்திரா.

'அருள்' ஆசிரியையான என் கருத்து என்ன தெரியுமா?

பொருள் இல்லார்க்கு இவ்வுலக
மில்லை,

அருள் இல்லார்க்கு அவ்வுலக
மில்லை.

இதைப் படிக்கும் அனைவரும் முற்றும் துறந்த முனிவர்களல்லர் என்பதே என் தாழ்மையான கருத்து. அனைவருக்கும் மீண்டும் நன்றி.

பண்டாசுரனும் பகவானின் தந்திரமும்



ஸ்ரீ வித்யா மார்த்தாண்ட
பிரம்மஸ்ரீ
C. V. ஸ்வாமி
சாஸ்திரிகள்

பரமேஸ்வரனிடம் பெறற்கரிய வரங்களைப் பெற்ற பண்டாசுரன், சுக்ர பகவானைப் போல மந்திர சாஸ்திர இரகசியங்களில் வல்லவனான **விசுக்ரன்** என்னும் ஓர் அசுரனைத் தன் வலது தோளிலிருந்து படைத்தான்.

அதேபோல், தன் இடது தோளிலிருந்து **விஷங்கன்** என்னும் ஓர் அசுரனைப் படைத்தான்.

இவ்விரு தம்பிமார்களுடன், **தூமினி** என்னும் பெயரையுடைய ஒரு தங்கையும் அவனுக்கு ஏற்பட்டாள்.

அத்துடன், அசுர குருவான சுக்ரபகவானுடைய தலைமையில், ஏராளமான அசுரர்களும் அவனுக்குத் துணையாக வந்து சேர்ந்தார்கள்.

பிறகு பண்டாசுரன், அசுரகுல சிற்பியான மயனை அழைத்து, தான் இருந்து அரசாள்வதற்கான ஒரு தலைநகரை அமைத்துத் தருமாறு கட்டளையிட்டான்.

அவ்வாறே அந்த சிற்பியும், அசுரகுல முன்னோர்கள் இருந்து அரசு செலுத்தின சோணிதபுரம் என்னும் இடத்தை அடைந்து, இந்திரனுடைய அமராதிப் பட்டினத்துக்கு நிகரான ஒரு தலைநகரை, அங்கு ஒரு கணப் பொழுதில் அமைத்துக் கொடுத்தான்.

அந்தத் தலைநகரில்;

பிரம்மாவினுல் அளிக்கப்பட்டதும், தங்க மயமானதும், ஜீவனுடன் கூடியதும், நாசம் இல்லாததும, பால சூர்யனைப்போல் பிரகாசிப்பதுமான ஒரு தெய்விக மணி மகுடத்தைக் கொண்டு,

பண்டாசுரனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார் சுக்ர பகவான்.

மேலும், பிரம்மாவினுல் வழங்கப்பட்ட ஒரு தெய்விகமான குடையையும், இரண்டு தெய்விகமான சாமரங்களையும் அவர் அவனுக்குக் கொடுத்தார்.

அந்தக் குடையின் கீழ் இருப்பவன், எந்தஓர் அஸ்திரத்தினுலும் பாதிக்கப்பட மாட்டான். அதன் நிழல் பட்டால் உடம்பில் உள்ள எல்லா நோய்களும் நீங்கிவிடும். மனத்தில் உள்ள எல்லாக் கவலைகளும் ஒழிந்து விடும். அத்தகைய குடையின்கீழ், கதிரவனைப்போல் ஒளி படைத்ததும், எக்காலத்திலும் நாசமுருததும், சுக்ரனுல் அளிக்கப்பட்டதுமான ஒரு சிம்மாசனத்தின் மீது அமர்ந்து, பண்டாசுரன் ஆட்சி புரியத் தொடங்கினுன்.

அந்த பண்டாசுரனுக்கு, இந்திரசத்ரு, அமித்ரக்னன், வித்யுன் மாலீ, விபீஷணன், உக்ரகர்மா, உக்ரதன்வா, விஜயன், சுருதி பாரகன் என்னும் எட்டு அசுரர்கள் மந்திரிகளாக அமைந்தார்கள்.

அன்பும் அழகும் ஒருங்கே அமைந்த ஸம்மோஹினி, குமுதினி, சித்ராங்கி, சுந்தரி என்னும் நான்கு வனிதாமணிகள் அவனுக்குப் பத்தினிகளாக வாய்த்தார்கள்.

அவனுடைய பராக்கிரமத்தைக் கண்டு, இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் அவனை வந்து வணங்கிச் சென்ருர்கள்.

இவ்வளவு வைபவங்களுடன் விளங்கிய பண்டாசுரன், தன் குல குருவாகிய சுக்ரபகவானது ஆணையின்படி, பரமேஸ்வரனை மிகவும் பக்தியோடு ஆராதனை செய்து வந்தான். அவனைச் சேர்ந்த அசுரர்களும் கூட, அவ்வாறே இறைவனை ஆராதித்து வந்தார்கள்.

அதனுல், எல்லா அசுரர்களும் தனம், தான்யம், புத்ரர்கள் முதலிய எல்லா சம்பத்துக்களையும் குறைவில்லாமல் பெற்றவர்களாய், மிகவும் க்ஷேமமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அசுரர்களுடைய இல்லங்களில் நாள் தவருமல் யாகங்கள் நடைபெற்றன, வேதங்கள் முழங்கின. சாஸ்திர ஆராய்ச்சிகள் நிகழ்வுற்றன. இவ்விதமாக அறுபதினுயிரம் ஆண்டுகள் பண்டாசுரன் சிறிதும் அறநெறி தவருமல் ஆனந்தமாக ஆட்சிசெலுத்தி வந்தான்.

பண்டாசுரனின் தபசும் பலமும் இவ்வாறு வளர்ச்சி அடைந்து வந்த அதே சமயத்தில், இந்திரனும் தேவர்களும் நாளுக்கு நாள் பலவீனம் அடைந்து வந்தார்கள். அதைக் கண்டு மகாவிஷ்ணு சிறிது கவலை அடைந்தார். பண்டாசுரன் சிவபூஜை செய்து கொண்டிருக்கும் வரையில், தேவர்கள் மேன்மை அடைய முடியாது என்பதை அவர்

உணர்ந்தார். அதற்காக அவர் ஒரு யுக்தி பண்ணினர்.

உலகு அனைத்தையும் மோகம் அடையச் செய்யவல்ல ஒரு மாயா சக்தியை, அவர் படைத்தார். படைத்து, அவளை பண்டாசுரனிடத்தே அனுப்பிவைத்தார்.

அந்த மாயாசக்தியானவள், மனமோகனமான பேரெழில் வாய்ந்த பல அப்சர மங்கையரைத் தன்னோடு அழைத்துக் கொண்டு, இமயமலைச் சாரலில் பண்டாசுரன் தன் பத்தினிமார்களோடு விளையாடிக் கொண்டிருந்த மானஸ ஸரோவரத்தை வந்து அடைந்தாள்.

மாயாதேவி ஒரு சம்பகமரத்தின் கீழமர்ந்து, தேனினும் இனிதான குரலில் பாடியவாறு தன் வீணையை மீட்டத் தொடங்கினாள்.

அந்த நாத வெள்ளத்தால் ஈர்க்கப்பட்ட பண்டாசுரன், அவள் அமர்ந்திருந்த அந்தச் சம்பக மரத்தடிக்கு வந்து சேர்ந்தான்.

அங்கு மின்னல் கொடிபோல் விளங்கிக் கொண்டிருந்த மாயா தேவியைக் கண்டு, அவளுடைய பேரழகில் தன் இதயத்தைப் பறிகொடுத்தான்.

அதேபோல், அவனைச் சூழ்ந்திருந்த மந்திரிகள், பிரதானிகள் போன்ற மற்ற அரசுர்களும், மாயா தேவியின் பரிவாரங்களான அப்சர மங்கையரின் அழகிலே மயங்கி நின்றார்கள்.

மாயாதேவியையும் அந்த மங்கையரையும் மகாவிஷ்ணு அங்கு எந்த நோக்கத்தோடு அனுப்பி வைத்தாரோ, அந்த நோக்கம் இனிது நிறைவேறியது.

பண்டாசுரனும் அவனது துணைவர்களும், சிற்றின்பக் கடலிலே தலைகுப்புற வீழ்ந்தார்கள்.

வீழ்ந்து, அவர்கள் அதுகாறும் வழிபட்டு வந்த பரமேஸ்வரனையும், யாகாதி கர்மாக்களையும், வேத அத்யயனங்களையும் அறவே மறந்தார்கள்.

இப்படி எண்ணூறு ஆண்டுகள் விரைந்தோடி மறைந்தன.

★

ஆசிரியர் : இராம. மணிமேகலை. வெளியிடுபவர்: T. ராமனுதன். 4, தணிகாசலம் செட்டிரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா. காசிச் தாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர் சென்னை-17.

அருள்

ஆசிரியர் : கலைச்செல்வி மணிமேகலை

அருட்பெருஞ்சோதி



தனிப்பெருங்கருணை

அருள்

தமிழ்மாதம் முதல்நாள் தோறும் வெளிவருகிறது

அன்பார்ந்த வாசகர்களுக்கு

வாழ்க்கையில் உங்களுக்கு அவ்வப்போது ஏற்படக் கூடிய சிக்கல்களையும் பிரச்னைகளையும், சுருக்கமாக — ஆனால் தெளிவாக, எழுதியனுப்புங்கள். அவற்றிலிருந்து நீங்கள் விடுபடுவதற்கு உரிய ஆத்மிக — தார்மிக — சமய ரீதியான ஆலோசனைகளை, ''அருள்'' பத்திரிகையில் வெளியிடுகிறோம்.

உங்கள் ஊரையோ பேரையோ நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை. கையெழுத்துக் கூடப் போடாமல் வெறும் விஷயத்தை மட்டும் ஒரு கடிதத்தில் எழுதியனுப்பினால் போதும். உங்கள் ஊரையும் பேரையும் நீங்கள் குறிப்பிட்டு எழுதினால் கூட, அவற்றை நாங்கள் வெளியிடமாட்டோம்.

— ஆசிரியர்

அருள் 4	ஆண்டுச்	ஜனவரி
கருணை 4	சந்தா	15-1-70
தை, சௌமிய	ரூ. 3-60	விலை : 30 காசு

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி : நிர்வாகி, ''அருள்''
6, தணிகாசலம் செட்டிதெரு, தியாகராயநகர், சென்னை-17.

உ

திருச்சிற்றம்பலம்

உலகமெலாம் உதிக்கின்ற ஒளிநிலைமெய் யின்பம்
உறுகின்ற வெளிநிலையென்(று) உபயநிலை யாகி,
இலகியநின் சேவடிகள் வருந்தியிட நடந்தே
இரவில்எளி யேனிருக்கும் இடம்தேடி அடைந்து,
கலகமிலாத் தெருக்கதவம் காப்பவிழ்க்கப் புரிந்து
களித்தெனையங்(கு) அழைத்தெனது கையிலொன்று கொடுத்தாய்!
அலகிலருட் கடலாமுன் பெருமையையென் னென்பேன்!
ஆனந்த வல்லிமகிழ் அருள்நட நாயகனே!

ஒளிவண்ணம் வெளிவண்ணம் என்றனந்த வேத
உச்சியெலாம் மெச்சுகின்ற உச்சமலர் அடிகள்
அளிவண்ணம் வருந்தியிட நடந்தருளி அடியேன்
அடைந்தவிடத்(து) அடைந்துகத வம்திறக்கப் புரிந்து,
களிவண்ணம் எனையழைத்தென் கையில்வண்ணம் அளித்த
கருணைவண்ணம் தனைவியந்து கருதும் வண்ணம் அறியேன்
தெளிவண்ணம் உடையரன்பு செய்யும்வண்ணம் பொதுவில்
தெய்வநடம் புரிகின்ற சைவபரம் பொருளே!

—திருவருட்பா

இறைவி வணக்கம்

ஸ்ரீ மூக மஹாகவி

வேதம், நாதம், பிந்து, பிரகிருதி, அதன் காரியமாகிய பிரபஞ்சரூப விகிருதி இவற்றின் வடிவமாகவும், ஸர்வ மந்திர ஸ்வரூபிணியாகவும், தந்திரஸ்வரூபிணியாகவும், பரபதம் என்னும் ஸஹஸ்ராரத்திலே சித்சந்திர மண்டல மாகவும் காட்சியளிக்கின்ற ஸ்ரீ காமாக்ஷி தேவியை நான் வணங்குகின்றேன்.

பிரம்ம தேவரிடத்தில் வித்யா ஸ்வரூபமாகவும், காமகோடி பீடத்தில் காமகலாஸ்வருபமாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற தாயே காத்யாயனீ, காளீ, பாரதீ, பைரவீ, பத்ரே, சாகினீ, சாம்பவீ, சிவே! உன்னை நான் பாடிப் பரவுகின்றேன்.

ஐம்பத்தொரு அக்ஷரங்களைக் கொண்ட வர்ணமாலை வடிவினளாகவும், பரமேஸ்வரனுடைய சித்தத்தையே சலனமுறச் செய்பவளாகவும், காஞ்சிபுரத்தில் விளையாடு பவளாகவும், தன் பக்தர்களின்பால் பகைமை கொண் டோரை அழிப்பவளாகவும், கையில் சூலம் தரித்தவளாக வும், செம்பவள மேனியளாகவும், தேவர்களைக் காப்பவ ளாகவும், கபாலினியாகவும் விளங்குகின்ற என் அன்னையே! உனக்கு நமஸ்காரம்!


CNV
PRODUCTIONS
CNV புரொடக்ஷன்ஸ்
வா ராஜா வா
வண்ணப்படம்
கதை, வசனம், டைரக்ஷன்
A.P. நாகராஜன்
சென்னை வெலிங்டன் · பாரத் · மகாலட்சுமி
ராம் மற்றும் தென்னாடெங்கும்......
MARS

ஸ்ரீ மாதா ஆனந்தமயி

வேலவன்

அயல் நாட்டினர் எவருக்கேனும் ஆன்மிகத் துறையில் வேட்கை பிறக்குமானல், அவர்கள் உடனே நம் பாரத நாட்டுக்குத் தான் புறப்பட்டு வருவார்கள்.

சில ஆண்டுகளுக்குமுன், அம்மாதிரி ஒரு பிரெஞ்சுக்காரர் புறப்பட்டு வந்தார். வரும் வழியில், ஸ்விட்ஜர் லாந்தைச் சேர்ந்த ஒரு கிராமத்திலே தங்கினர்.

அந்த கிராமத்தில், இரண்டு அம்மையார்கள் இருந்தார்கள். அவர்கள் பல ஆண்டுகாலம் பாரத நாட்டில் வசித்து விட்டு, ஐரோப்பாவுக்குத் திரும்பி வந்தவர்கள். ஆன்மிகத் துறையில் பெரிதும் ஆர்வம் கொண்டவர்கள்.

அந்த அம்மையார்களிடம் போய், நமது பிரெஞ்சு நாட்டு நண்பர் ஒரு கேள்வி கேட்டார்:

"இந்தியாவில் ஒரேயொருவரை மட்டுமே சந்திப்பதாயிருந்தால், அதற்கு நான் யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?"

"மாதா ஆனந்தமயி!" எனப் பளிச்சென்று பதில் வந்தது.

பின்னர் இந்தியாவில் வந்த பிறகு, அதே பிரெஞ்சுக்காரர், ரிஷிகேசத்தைச் சேர்ந்த ஸ்வாமி சிவானந்தா அவர்களிடம், மாதா ஆனந்தமயியைப் பற்றி ஏதோ குறிப்பிட்டிருக்கிறர்.

அப்போது, "இந்திய மண்ணில் தோன்றிய ஒரு பரிபூர்ணத்வம் வாய்ந்த பரிமள மலர் அது!" என்ருராம் மகரிஷி சிவானந்தர்.

சிவானந்தர் போன்ற ஆத்மஞானிகளாலேயே அவ்வாறு போற்றப்படுதற்குரிய பெருமை படைத்த

மாதா ஆனந்தமயி அவர்களின் திருவுருவத்தை முகப்பு அட்டையில் தாங்கிக் கொண்டிருப்பதன் மூலம், இந்த "அருள்" இதழும் பெருமை படைத்ததாகி விட்டது.

பிறப்பால் வங்க நாட்டவராகிய மாதாஜி, காசியம் பதியில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு இருக்கிறார். கங்கா நதியின் கரையிலே, ஒரு குறுகலான சந்துக்குள்ளே அவருடைய தலைமை ஆசிரமம் அமைந்திருக்கிறது. அதைத் தவிர வேறு ஆசிரமங்களும் இருக்கின்றன. அந்த ஆசிரமங்களிலே, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, இங்கிலாந்து, அமெரிக்கா, ஹாலந்து போன்ற பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும், மாதாஜியைத் தரிசிப்பதற்காக வந்து கூடுகிறார்கள்.

ஆனால், மாதாஜின் எதிரிலே, அவர்கள் எல்லோரும் ஒரே தாய் வயிற்றில் பிறந்த சகோதர சகோதரிகளைப் போலவே ஆகிவிடுகிறார்கள். அதாவது, மேல் நாட்டினர் — கீழ்நாட்டினர், ஏழை - பணக்காரர், நல்லவர் - கெட்டவர், உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற பேத உணர்வுகளே, அவர்களது உள்ளத்தை விட்டு ஒழிந்து விடுகின்றன. தம்மையும் அறியாமல், அவர்களிடையே ஒருவருக்கொருவர் உள்ளன்பு பொங்கி யெழுகின்றது.

அது மட்டும் அல்ல. மாதாஜியின் எதிரில் போய் அமர்ந்தாலே, நமது சிக்கலான பிரச்னைகள் எல்லாம் தீர்ந்து விட்டாற் போன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. வாழ்க்கையின் தாக்குதல்களை சமாளித்து வெல்வதற்கான ஒரு புதிய ஊக்கம் பிறக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, உள்ளத்திலே தீவிரமான ஆன்மிக வேட்கை கிளர்ந்து எழுகின்றது.

மாதாஜிக்கு இப்போது வயது எழுபதுக்கு மேலாகிறது. எனினும், சில சமயங்களில் இருபது வயது இளம் பெண்ணைப் போலவும் அவர் காட்சியளிக்கிறாராம்! தெய்விகமான திருமேனிகளுடனும் தோற்றமளிக்கிறாராம். நெருங்கிப் பழகியவர்கள் கூறும் செய்திகள் இவை. காசிக்குச் செல்பவர்கள், அவசியம் ஸ்ரீ மாதாஜியைத் தரிசித்து ஆன்மலாபம் பெறுவார்களாக!

சித்திகளால் ஆபத்துக்கள் அதிகம்



பகவான்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

மக்கள் உலக விஷயங்களைப் பற்றிப் பேசியது என் காதில் விழுந்தபொழுது, அவைகளைக் கேட்கச் சகிக்காது நான் கண்ணீர் சிந்தியதுண்டு.

ஒருவன் நெறிதவறிப் போய் விடுவானாகில், முக்தி பெறுவதற்கு நெடுங்காலமாகிறது. நல்வழிக்கு அவன் திரும்பி வருவதற்கு மிகவும் சிரமப்பட்டாக வேண்டும். சில வேளைகளில், ஒரு பிறவி அதற்குப் போதாது.

உண்மையாகவும் உள்ளன்போடும் ஆத்மசாதனத்தில் ஈடுபடுகின்றவனுக்கு இடைஞ்சலாக இருப்பவர்களெல்லாம், அதிவிரைவில் அனுகூலமானவர்களாக மாறிவிடுவதுண்டு. அரசன், போக்கிரி, தன்னுடைய மனைவி ஆகியவர்களெல்லாம் துவக்கத்தில் பேரிடைஞ்சல் பண்ணுபவர்களாக இருக்கலாம். ஆனால் சாதகன் மட்டும் தன்னுடைய லட்சியத்தில் கண்ணுங் கருத்துமாயிருப்பானாகில், இவர்கள் எல்லோரும் இறுதியில் அவனுக்கு ஒத்தாசை பண்ணுகிறவர்களாக ஆகிவிடுவார்கள்.

காசியில் மதுரநாத் விசுவாசருடன் ஒரு மாளிகையில் நான் தங்கியிருந்த பொழுது, அவர் ராஜா பாபுவுடன் வர்த்தகத்தில் தங்களுக்கேற்பட்டிருந்த கஷ்டங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். ''தாயே, இப்பேச்சைக் கேட்பதற்கா நீ என்னைக் காசிக்கு அழைத்து வந்திருக்கிறாய்? நான் தக்ஷிணேசுவரத்திலேயே இருந்திருப்பேனாகில் இத்தகைய உலக விஷயங்களுக்குச் செவி கொடுக்காது இருந்திருப்பேனே?'' என்று முறையிட்டேன்.

கிருஷ்ணகிஷோரும் நானும் சாது மகாத்மா ஒருவரைப் பார்க்கப் புறப்பட்டோம். எங்களுடன் வரும்படி ஹலதாரியை நான் அழைத்தேன். ''எலும்பு தோல் ரத்தத்தாலாகிய . ஓர் உடலைப் பார்க்க நான் ஏன் உங்களோடு வரவேண்டும்?'' என்றார் ஹலதாரி. இதைக்கேட்ட கிருஷ்ணகிஷோருக்கு ஆத்திரம்

மிக வந்துவிட்டது. ''சாது மகாத்மா ஒருவரை சைதன்ய சொரூபமாக உணராது, தோல் மயமாக உணரும் இந்த மனிதன் எத்தகைய வேதாந்தி!'' என்று அவர் நொந்து கொண்டார். பிறகு அவர் ஹலதாரியைக் கண்ணெடுத்தே பார்ப்பதில்லை.

ஒரு தடவை பரமஹம்ஸர் அறையில் மகேந்திரரும் நரேந்திரரும், அக்காலத்திய மாணவர்களின் கீழ்த்தரமான இயல்பைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அறைக்குள் வந்ததும், ''நீங்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று பரமஹம்ஸர் கேட்டார். தாங்கள் பேசிய விஷயத்தை அவரிடம் அவர்கள் தெரிவித்தார்கள். அதைக் கேட்டதும் பரமஹம்ஸர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டார். ''இத்தகைய பேச்சால் யாருக்கும் ஒரு பிரயோஜனமுமில்லை. இதைத் தவிர்த்து விட்டு நீங்கள் பகவத் விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது நலம்,'' என்றார்.

உலகப்பற்றுகளில் உழன்று கொண்டிருப்பதனால்தான், தியானம் பண்ணிப் பழகும் சாதகன் ஆரம்ப தசையில் எத்தனையோ இடைஞ்சல்களுக்கு ஆளாகிறான்.

வெட்கம், வெறுப்பு, அச்சம் ஆகிய இம்மூன்றுக்கும் ஆளாகிறவன், ஒருபொழுதும் மேன்மையுறுவதில்லை.

கிறிஸ்தவ மதம் ஆதியோடந்தமாகப் பாபத்தைப் பற்றிய எண்ணத்தையே ஊட்டுகிறது. பிரம்ம சமாஜமும் அவ் விஷயத்தில் கிறிஸ்தவ மதத்துக்குப் பின் வாங்கியதல்ல. பாபத்தைப் பற்றியே ஓயாது எண்ணுகிற பேதைப் பாபியாய்விடுகிறான்.

திரும்பத் திரும்பப் பாபத்தையும் நரகவேதனையையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பானேன்? ''நான் பொல்லாத செயலை அறியாமையால் செய்துவிட்டேன். இனி அதைச் செய்யேன், இறைவா!'' என்று ஒருதடவை உள்ளம் கசிந்து சொல். பிறகு அதை அறவே மறந்துவிடு. இறைவனுடைய திருநாமம் உன்னைத் தூய்மைப்படுத்துகிறது என்கின்ற நம்பிக்கையை, உன் உள்ளத்தில் உறுதியாகவை.

சாதகன் ஒருவனுக்கு பக்தி வாய்க்குமாகில், ஹடயோகம் போன்றவைகளுக்குத் தேவையில்லை.

அஷ்ட சித்திகளை நாடுவது ஆசையின் இயல்பு, அர்ஜுனனைப்பார்த்து கிருஷ்ண பகவான் பகர்ந்ததாவது: ''அஷ்ட சித்திகளில் ஏதேனும் ஒன்று உனக்கு வாய்த்து விட்டாலும், நீ பரம்பொருளை அடையமாட்டாய். சித்திகள் உன்னுடைய திறமையை ஒரு சிறிதளவு அதிகப்படுத்துகின்றன. அவ்வளவு தான்.''

ஹடயோகி ஒருவனுடைய நிலை மிகப்பரிதாபகரமானது. உடலைப் பேணுதலிலும், அதை நெடிது காத்து வைத்திருத்தலிலுமே அவன் கண்ணுங் கருத்துமாயிருக்கிறான். குடலைக் கழுவுதல், குழாய் வழியாகப் பால் உறிஞ்சுதல் போன்ற செயல்களைத் தவிர, வேறு எதிலும் அவன் கவனத்தைச் செலுத்துவதில்லை.

அஷ்ட சித்திகளைப் பற்றி நினைத்தாலே எனக்குத் திகில்

உண்டாகிறது. ஏதேனும் ஒரு சித்தி எனக்கு வாய்த்துவிடுமாகில், இந்த இடம் வைத்திய சாலையாக மாறுவது திண்ணம். அவரவர்க்குற்ற நோயைப் போக்கவேண்டும் என்று ஏராளமானபேர் இங்கே கூடிவிடுவார்கள்.

சித்திகள் அடையப் பெற்றிருந்தயோகி ஒருவன், கடற்கரையோரம் அமர்ந்திருந்தான். அப்பொழுது திடீரென்று புயல் அடித்தது. ''ஏ, நிறுத்து உன் வேகத்தை!'' என்றான் யோகி. அவனுடைய சித்தி வலியால் புயல் அப்படியே நின்றது. அவ்வேளையில் கடலில் விரைந்து ஓடிக்கொண்டிருந்த கப்பல் ஒன்று புயல் நின்றதை முன்னிட்டு நிலை குலைந்து மூழ்கிப் போயிற்று. அதிலிருந்த பிரயாணிகளெல்லாம் மடிந்து போயினர். அந்தப் பாபம் யோகியை வந்து சார்ந்தது. அவன் சித்தியை இழந்து நரகத்தில் இடர்ப்பட்டான். சித்தி என்றைக்குமே ஆபத்தானது.

சாது ஒருவன் பன்னிரண்டு வருஷகாலம் வனத்தில் தவம் பண்ணினான். அதன் விளைவாக அவனுக்கு சித்திகள் வாய்த்துவிட்டன. அவைகளைக் குறித்து அவன் தற்பெருமை படைத்திருந்தான்.

ஒருநாள், பெருக்கெடுத்தோடும் நதியின்மீது நடந்து, அக்கரையிலிருந்த கிராமம் போய்ச்சேர்ந்தான். ஊரேகூடி அவன் செயலை மிகப் பாராட்டியது. ஆங்கு ஓர் அரசமரத்தடியில், மகாபுருஷர் ஒருவர் அமர்ந்திருந்தார். தன் பெருமையை சாது அவரிடமும் தெரிவித்தான்.

''இன்னும் உன்னால் என்ன செய்ய முடியும்?'' என்று சாது கேட்டார்.

''இதோ இங்கு நின்று கொண்டிருக்கிற யானையைக் கொல்ல முடியும்'' என்று அதன் மீது ஒரு துளி மண்ணை எடுத்து வீசினான். அது கீழே விழுந்து மாண்டு போயிற்று.

''இன்னும் என்ன செய்ய முடியும்?'' என்று அந்த மகான் கேட்டார்.

''மீண்டும் யானைக்கு உயிர்தர முடியும்!'' என்று சொல்லி, மற்றொரு துளி மண்ணை எடுத்து அதன் மீது வீசினான். யானை உயிர் பெற்றெழுந்தது.

தன் சித்திகளைக் குறித்து மகிழ்ச்சியுற்றவனாக, அந்த சாது மகானைப் பார்த்தான்.

''அப்பா! நீ பன்னிரண்டு வருஷம் தவம் புரிந்து காலணா சம்பாதித்திருக்கின்றாய்'' என்றார் மகான்.

''ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?'' என்று சாது கேட்டான்.

''ஓடக்காரக்குக் கொடுக்கிற காலணா உனக்கு மிச்சம். யானை இருப்பதாலும் இறந்து போவதாலும் உனக்கு ஆவது ஒன்றுமில்லை. உன்னிடத்துள்ள அகங்காரமும் தற்பெருமையும் இன்னும் இம்மியளவும் போகவில்லை'' என்றார் அந்த மகான்.

அண்ணனுக்குத் தம்பிசொன்ன அறிவுரை



பாரத ஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர்

ஆபத்தைப் போக்கிக்கொள்ளப் பொருளைக்காக்க வேண்டும். பொருளினால் மனைவியைக்காக்க வேண்டும். மனைவியாலும் பொருளாலும் தன்னை ரக்ஷித்துக் கொள்ள வேண்டும்.

முன் கல்பத்திலேயே சூதாட்டமானது மனிதர்களுக்கு ஒருவருக்கொருவர் துவேஷத்தை உண்டு பண்ணக் கூடியது எனக் கூறியுள்ளார்கள். ஆகையால் புத்திமான்கள் பொழுது போக்காய்க்கூட சூதாட்டம் ஆடக்கூடாது.

ஓ அரசனே, சூதாடும் சமயத்திலேயே இது வேண்டாமெனக் கூறினேன். ஓ பிரதீபகுலத்தில் உதித்தவரே, நன்மையை அளிக்கும் மருந்தானது வியாதி உள்ளவனுக்குப் பிடிக்காமல் போவது போல், அது உமக்கு ருசிக்கவில்லை.

எந்த எஜமானன், அன்புடன், நன்மையில் பற்றுள்ளவனை வேலைக்காரன் விஷயத்தில், ஒருக்காலும் கோபித்துக்கொள்ளாமல் இருக்கிறானோ, அந்த எஜமானனிடத்தில் வேலைக்காரர்கள் விச்வாஸத்துடன் இருப்பார்கள். ஆபத்துக் காலத்திலும் அவனை விட மாட்டார்கள்.

வேலைக்காரர்களுடைய ஜீவனத்தைக் கெடுத்து, புதிதான ராஜ்யத்தையோ பொருளையோ அடைய விரும்பக் கூடாது. ஸ்நேகத்துடன் கூடின மந்திரிகள் (வேலைக்காரர்கள்) வஞ்சிக்கப் பட்டார்களேயானால், போகமிழந்து விரோதிகளாகவும் ஆகி, இவனைக் கைவிட்டு விடுவார்கள்.

முதலில் எல்லாக் காரியங்களையும், வரவு செலவுக்கு உசிதமான விருத்தியையும் கணக்கிட்டு, அதற்கு உசிதர்களான ஸகாயர்களைச் சேர்க்க வேண்டும். செய்ய முடியாதவைகளான காரியங்களும், ஸகாயத்தால் ஸாதிக்கக் கூடியவைகள் அல்லவா?

எஜமானனுடைய எல்லாக் காரியங்களையும் அறிந்து சோம்பலின்றிச் செய்கிறவனும், நன்மையைக் கூறுகின்றவனும், அன்புள்ளவனும், பெருந்தன்மையுள்ளவனும், எஜமானனுடைய சக்தியை அறிந்தவனுமான வேலைக்காரன், தன்னைப் போல் பாதுகாக்கப்பட வேண்டியவன்.

ஏவிய வேலையைச் செய்யாதவனும், எதிர்த்துப் பேசுகிறவனும், தான் புத்திமான் என அகங்காரம் கொண்டவனும், விபரீதமாகப் பேசுகிறவனுமான வேலைக்காரன், சீக்கிரம் விலக்கத் தக்கவன்.

மந்தமில்லாதவனும், ஆண்மையுடையவனும், காரியத்தை சீக்கிரம் செய்கிறவனும், தயையுள்ளவனும், திறமையுடையவனும், பிறரால் கலைக்க முடியாதவனும், சிறிதும் நோயில்லாதவனும், யுக்தி யுக்தமான வார்த்தை சொல்பவனும், ஆக இந்த எட்டு குணங்களுமுள்ளவனை, தூதனாக பெரியோர்கள் கூறுகின்றனர்.

அறிவுள்ள மனிதன், தன்னிடத்தில் நம்பிக்கையில்லாதவனுடைய வீட்டிற்கு, அகாலத்தில் விச்வாஸத்துடன்போகக்கூடாது. நாற்சந்தியில் மறைந்து இரவில் நிற்கக்கூடாது. அரசனால் விரும்பப்பட்ட ஸ்திரீயை விரும்பக் கூடாது.

அரசன் எப்பொழுது ஒரு மனிதனை ஸம்மானித்து கௌரவிக்கிறானோ, அந்த மனிதனிடத்தில் எல்லா குணங்களும் வந்து அடைந்து விடும்.

விடியற்காலையில் ஸ்நானம் செய்கின்ற மனிதனை, சரீர பலம், இனிய குரல், அக்ஷரசுத்தி, மிருதுவான தோல், நல்ல மணம், பரிசுத்தி, லக்ஷ்மீ, காந்தி, சிறந்த ஸ்திரீகள். ஆகிய பத்தும் வந்து அடைகின்றன.

அளவறிந்து உண்பவனை, ஆரோக்யம், ஆயுஸ், பலம், சுகம், ஆரோக்யமுள்ள குழந்தை, பெரும் தீனிக்காரன் என்ற நிந்தை இல்லாமை, ஆகிய இந்த ஆறும் அடைகின்றன.

காரியம் செய்யாதவனையும், பெரும் தீனிக்காரனையும், உலகத்

தார்க்கு விரோதமாக நடப்பவனை யும், மிகுந்த கபடமுள்ளவனை யும், கருணையற்றவனையும், தேச காலமறிந்து நடக்காதவனையும், துறவிபோல் வேஷம் போடு பவனையும் (தகாத வேஷம் தரிப் பவனையும்), தன் வீட்டிற்குள் சேர்க்கக் கூடாது.

தானும் அனுபவிக்காமல் பிற ருக்கும் கொடாதவனையும் (கதர் யனையும்), நிந்திக்கிறவனையும், படிப்பற்றவனையும், காட்டில் வசிப்பவனையும். சூதாடுகிறவனை யும், பூஜிக்கத்தகாதவனைப் பூஜிக் கிறவனையும், நிஷ்டூரமாய்ப் பேசு கிறவனையும், பலரிடத்தில் துவே ஷத்தை அடைந்தவனையும், செய்ந் நன்றி மறந்தவனையும், ஆகிய இவர்களைத் தனக்கு எந்தக் கஷ்டம் வந்தாலும் யாசிக்க கூடாது.

கவனிக்காமல் காரியம் செய் கிறவனையும், பெரிய தவறுகளைச் செய்கிறவனையும், எப்பொழுதும் பொய் சொல்கிறவனையும், உறுதி யான அன்பில்லாதவனையும், ஸ்நேகத்தை விட்டவனையும், தன்னை ஸமர்த்தனுக நினைப்ப வனையும், ஆகிய இந்தக் கீழ்பட்ட மனிதர்களை ஒரு போதும் ஸேவிக் கக்கூடாது.

நல்ல உதவியாளர் இருந்தால் தான் பொருள்கள் கிடைக்கும். பொருள்களால்தான் நல்ல உதவி யாளர்கள் கிடைப்பார்கள். (சிறிது பொருளைச் செலவு செய்து நல்ல உதவியாளர்களை அடைந்து, நிரம்பப் பொருளைச் சம்பாதிக்க வேண்டுமெனக் கருத்து). ஒன்றுக்கொன்று காரணமான இவை இரண்டும், ஒன்றில்லாமல் மற்றொன்று கிடைப்பதில்லை.

புத்ரர்களை உண்டுபண்ணி, அவர்களைக் கடனற்றவர்களாகச் செய்து, அவர்களுக்கு ஜீவனத்தை (பிழைப்பை) ஏற்படுத்தி, எல்லாப் பெண்களையும் சரி யான இடங்களில் விவாகம் செய்து கொடுத்துவிட்டு, பிறகு வனத்தில் இருந்துகொண்டு பக வானை அடைய விரும்பவேண்டும்.

ஸர்வப் பிராணிகளுக்கும் தனக்கும் எது சுகத்தை அளிக் குமோ, அதைச் செய்யவேண்டும். இதனுல், ஸர்வகாரிய ஸித்தியை அளிப்பதற்கு மூலமான தர்ம மானது, ஈச்வரனிடத்தில் ஒப்பு வித்ததாக ஆகும். (அதாவது, ஈச்வரன் தர்மத்தின் பயனுக ஸர்வ காரிய ஸித்தியையும் அளிப் பார் எனக் கருத்து).

செல்வப் பெருக்கம், சத்ரு ஜெயம், வீர்யம், ஸத்வ குணம், முயற்சி, உறுதி, இவைகள் எவ னிடமிருக்கின்றனவோ, அவனுக் குப் பிழைப்பில்லாமையால் உண் டான பயம் ஏது?

ஓ இந்திரனுக்கு ஒப்பானவரே! பாண்டவர்களுடன் விரோ தத்தை அடைவதால் ஏற்படும் தோஷத்தை யோசித்துப்பாரும். இவர்களுடைய விரோதம், இந்தி

ராதி தேவர்களுக்கும் துயரத்தை அளிக்கும். உமது புத்ரர்களால் உண்டுபண்ணப்பட்ட இந்தப் பகையானது, பயத்துடன் எப்பொழுதும் வசிப்பதையும், புகழுக்கு நாசத்தையும், சத்ருக்களுக்கு சந்தோஷத்தையும் அளித்து, பீஷ்மருக்கும் தங்களுக்கும் துரோணருக்கும் தர்ம புத்ரருக்கும். கோபத்தைக் கொடுத்து, ஆகாயத்தில் காணப்படும் வால் நக்ஷத்திரம் போல் உலகத்தை அழித்து விடும்.

உங்கள் நூறு புத்ரர்கள், கர்ணன், பாண்டவர்கள் ஆகிய இவர்கள் ஒன்று சேர்ந்தால், சமுத்திரத்தை ஆடையாக உடைய இந்த பூமி முழுவதும் ஆளுவார்கள்.

ஓ அரசனே, துரியோதனாதிகள் காடு; பாண்டவர்கள் புலிகள். புலிகளுடன் கூடிய காட்டை அழிக்காதே. காடில்லாமல் புலிகளும் நாசமடைய வேண்டாம்.

புலி இல்லாமல் காடு இருக்க முடியாது. (அதாவது, புலிகள் இல்லாவிடில், யாவரும் சென்று மரங்களை வெட்டிக் காட்டை அழித்துவிடுவார்கள் எனக் கருத்து). காடில்லாமல் புலிகளும் இருக்கமுடியாது. புலிகளால் காடு காக்கப்படுகிறது. காட்டினால் புலிகள் காக்கப்படுகின்றன.

வாழ்வினை



ஸ்ரீ திருமுருக
கிருபானந்த வாரியார்

கலிங்கம் என்ற அரிய ஒரு நாடு உண்டு. அதில் இரு தலை நகரங்கள் உண்டு. சிங்கபுரம் கபிலபுரம் என்ற பேருடைய அந்த இரு நகரங்களும் வளமையுடையவை. அம் மாநகரங்கள் இரண்டினையும் இரு அரசர்கள் அரசு புரிந்தார்கள். அவர்கள் பங்காளிகள்; பங்காளிகளுக்குள் மாறுபடுவது இயல்புதானே?

கபிலபுரத்தில் சங்கமன் என்ற உத்தமன் இருந்தான். நீதிநெறி மாறாதவன். இனிய குணமுடையவன். நற்குண சீலனான அவன், தன்பால் சரக்கு வாங்குபவர்களையும் தானாக நினைத்து, சரக்குகளின் நலந் தீங்குகளையும் கூறி வியாபாரம் புரிவான்.

உலகத்திலே அருமையிலும் அருமையானவர்கள் ஐவர் உளர்.

(1) தன்னுடைய சரக்கின் கெடுதியைக் கூறும் வியாபாரி.

(2) புகழை விரும்பாத கொடையாளி.

(3) மாற்றைக் குறைத்துக் கூறாமல் பொன் வாங்கும் வாணிபன்.

(4) எவ்வித லஞ்சமும் வாங்காத உத்யோகஸ்தன்.

(5) தண்டனையை நியாயம் என்று ஒப்புக்கொள்ளுகின்ற குற்றவாளி.

ஆகவே, நமது சங்கமன் தனது சரக்குகளின் குணதோஷங்களை உள்ளதை உள்ளவாறு உரைத்து வியாபாரம் புரிபவன்.

அவனுடைய இல்வாழ்க்கைத் துணைவி நீலி என்பவள். அம்மாதரசி உயர்ந்த கற்பு நெறியுடையவள். கணவனாரைக் கடவுளாகக் கருதிக் காதல் பூண்டவள். இருவரும் ஈருடம்பு ஒருயிராக,

உள்ளம் உணர்வு ஒன்றி ஒற்று மையாக வாழ்ந்தார்கள்.

மாறுபட்ட மன்னர்களாதலின் கபிலபுரத்திலிருந்து சிங்கபுரத் திற்கும். சிங்கபுரத்திலிருந்து கபிலபுரத்திற்கும், யாரும் போக்குவரத்துக் கூடாது என்று தடை விதித்திருந்தார்கள். தடை மீறி வந்தவர்கள் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

சங்கமன் வியாபார நிமித்தம் கபிலபுரத்திலிருந்து சிங்கபுரம் போனான். ஏற்கெனவே இவன் பால் பரதன் என்பவன் பகை கொண்டிருந்தனன். வியாபாரத் தில் பகை மூள்வது இயல்பு தானே?

பரதன் தன் அரசனிடம் போய், "மன்னரே! கபில புரத்திலிருந்து நமது நகரத்தில் உளவு அறிய ஒரு ஒற்றன் வந்து ஊருக்குள் இருக்கின்றான். அவன் பேர் சங்கமன்" என்று பொய்மை கூறினான். அரசன் அவன் சொல்லை உண்மையெனக் கருதி, சங்கமனைப் பிடித்துக் கொல்லு மாறு கட்டளையிட்டனன்! குற்றம் புரியாத குணங்குடி உத்தமனை சங்கமனைக் கொன்றுவிட்டார் கள்.

சங்கமன் மனைவி நீலி தன் கணவன் மாண்ட செய்தியை அறிந்து திடுக்கிட்டாள்; இடி யேறுண்ட நாகம் போல் நடுநடுங் கினாள்.

"அந்தோ! பிராணேசா! என் அன்பே! அன்பில் விளைந்த அமுதே! ஆ! தங்கள் மலர் முகத்தை என்று காண்பேன்? இனித் தங்கள் இனிய செஞ் சொற்களைக் கேட்கு நாள் உளதோ! தாங்கள் எங்கு சென் றீர்? என் உள்ளம் துடிக்கின் றதே? 'என் அருமை மானே! நான் சிங்கபுரம் போய் வருகின் றேன்' என்றுகூறி விடைபெற்றுச் சென்றீரே! சிங்கபுரம் சென்று அப்படியே எமபுரம் சென்று விட் டீரே! தங்களைப் பிரிந்து நான் எங்ஙனம் வாழ்வேன்? இனி எனக்கு என்ன வாழ்வு இருக் கின்றது? மணமில்லாத மலருக் கும், சுவையில்லாத கனிக்கும் என்ன பெருமை இருக்கின்றது? தாங்கள் சென்ற உலகிற்கு அடி யேனும் வருகின்றேன்", என் றெல்லாம் கூறி அழுதாள்.

கணவன் சென்ற திசை நோக் கித் தொழுதாள். இங்கும் அங்கும் பேய் பிடித்தவளைப் போல் விரித்த தலையுடன் அலைந் தாள். இரவு பகலாக அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வந்த வண்ணமாகவே யிருந்தது! அவளைக் கண்டார் அனைவரும் பரிதாபமுற்றார்கள்.

அப்பெண்மணியின் ஆருத்து யரை நோக்கிக் கருங்கல்லுங் கரைந்தது." ஆ! இப்பெண் ணரசி தன் கணவனையிழந்து, கொழுகொம்பில்லாத கொடி போல் வாடி வருந்துகின்றாளே! இவள் துன்பம் கடலினும்பெரிது.

தெய்வமே! இவளுக்கு ஆறுதல் தரக்கூடாதா?'' என்று கூறி வருந்தினார்கள்.

நீலி இவ்வண்ணம் பேய் பிடித்தவள் போலவும், பித்துப் பிடித்தவள் போலவும் அலைந்தாள். பதினாலாவது நாளின் முடிவில், ஒரு மலை மீது உச்சியில் நின்றாள். ''எங்கும் நிறைந்த கடவுளே! என் கணவனுக்கும் எனக்கும் இடர்புரிந்தார், மறுபிறப்பில் இத்துன்பத்தை யடையக்கடவது'' என்றுகூறி, மலை உச்சியினின்றும் வீழ்ந்தாள். அவள் ஆன்மா சாந்தியடைந்தது.

சங்கமன்மீது கோள் சொல்லிக் கொலை புரிவித்த பரதன், மறுபிறப்பில் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் கோவலனாகப் பிறந்தான். அவன் மனைவி கண்ணகியாகப் பிறந்தாள்.

முற்பிறப்பில் குற்றம்புரியாத சங்கமனை மன்னவனைக் கொண்டு கொல்வித்த ஊழ்வினை வந்து உருத்தி ஊட்டியது. அதனால் பொற்கொல்லன் சூழ்ச்சியால் மதுரையில் கொல்லப்பட்டான். நீலியைப் போல் கண்ணகி 14 நாள் துன்புற்று, இறுதியில் உறுதியான கற்பின் மாண்பினால் கணவனுடன் நற்கதி பெற்றாள்.

ஆதலால் 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்'' என்ற பொய்யா மொழிப்படி, நாம் புரிந்த வினை மறு பிறப்பில் இறைவன் ஆணையால் நம்பால் வந்து பொருந்தும்.

எனவே மனவாக்குக் காயங்களால் யாருக்கும் எந்த வகையான கெடுதியும் அணுத்துணையேனும் புரியக்கூடாது.

சோழநாடே ஒரு சிவாலயம்



ஜகத்குரு

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்

ஈசுவரனை வேதம் வர்ணிக்கையில், ''அவருக்குக் கையில்லை, காதில்லை, கண்ணில்லை; ஆனால் எல்லாவற்றையும் செய்பவர், எல்லாவற்றையும் கேட்பவர், எல்லாவற்றையும் பார்ப்பவர்'' என்று சொல்லியிருக்கிறது.

கண்ணிருந்தால் அது சிறிது தூரம் பார்க்கும். ஆகையால் தான், எதையும் பார்க்க வல்லவருக்குக் கண்ணில்லை, காதில்லை; என்றால், உருவமே யில்லை. உருவமில்லையானால் அவர் எப்படித்தான் இருக்கிறார்?

நர்மதாபாணம் உருவமற்றது. அது அவர் எப்படி இருக்கிறார் என்று தெரிவிக்கிறது. அது வட்டமாக இருக்கிறது. வட்டத்திற்கு ஆதியுமில்லை, அந்தமுமில்லை. ஈசுவரன் ஆதியுமந்தமுமற்றவர் என்று பாணம் காட்டுகிறது.

ஸ்படிகலிங்கம் அவரை இன்னும் நன்றாகத் தெரிவிக்கிறது. நாம் எப்படி நினைக்கிறோமோ அப்படி அவர் ஆகிவிடுவார் என்பதையும் அது தெரிவிக்கிறது.

ஸ்படிகலிங்கத்தை ரோஜாப் புஷ்பத்தால் அர்ச்சனை செய்தால், அது சிவப்பாகத் தெரியும். வில்வத்தால் அர்ச்சித்தால், பச்சையாகத் தெரியும். அப்படியே அவரை நாம் மான் மழுவுடையவராக நினைத்தால், அப்படி ஆகிவிடுவார், சங்க சக்கர கதாபாணியாக ஸ்மரித்தால், அப்படி ஆகிவிடுவார். அவருக்குத் தனியான ரூபம் ஒன்றும் இல்லை. அவரே நாரதருக்கு அப்படிச் சொல்லியிருக்கிறார்.

''உலகில் உத்கிருஷ்ட வஸ்துக்களையெல்லாம் திரட்டி, நானாக

உனக்குக் காட்டுகிறேன். அழகு, ஐசுவரியம், சாந்தம், கருணை, வாஸனை முதலிய உத்கிருஷ்ட மானவைகளை ஓர் உருவாக்கி, நான் உனக்குக்காட்டுகிறேன். ஆனால் அதுதான் நான் என்று நினைத்துக் கொண்டு விடாதே. உனக்குத் தெரிவிக்க வேண்டி இந்த ரூபத்தைக் காட்டுகிறேன். அழகு, வாஸனை முதலிய உத்கிருஷ்டப் பொருள்களில் உனக்குப் பிரியமானதையால், அவைகளை ஓர் உருவாக்கி நீ பார்க்கும்படி செய்கிறேன். ஆனால் இது மாயை'' என்று பகவான் சொல்லியிருக்கிறார்.

நாம் நினைப்பது போல் அவர் ஆவார். நாம் நினைத்தால் ஸகுணம்; அவராகவோ நிர்க்குணம். ஸ்படிகலிங்கம் அதைக் காட்டுகிறது. ஸாக்ஷாத் பரமேசுவரனுக்கு அது ஒரு சிறந்த அடையாளம். ஆகையால்தான் அதைத் தரிசனம் செய்ய வேண்டும். ஆகையால்தான் ஸன்னியாஸிகள் ஸ்படிகலிங்க பூஜை செய்கிறார்கள்.

சிவன் கோயில்களில், கர்ப்பக்ருஹத்தில் உள்ள லிங்கத்தை மஹாலிங்கம் என்கிறோம். எந்தக் கோயிலிலும் மஹாலிங்கத்திற்குக் கபாலீசுவரர் என்றோ, வன்மீகநாதர் என்றோ பல பெயர்கள் உண்டு. ஆனால் ஒரு மஹாலிங்கத்துக்கு மாத்திரம், மஹாலிங்கம் என்றே பெயர். அந்த மஹாலிங்கம் மத்தியார்ஜுனத்தில் இருக்கிறது. மத்தியார்ஜுனம் என்பது திருவிடைமருதூர். அர்ச்சுனம் என்றால் மருது என்று பெயர்.

வடக்கே கர்னூல் ஜில்லாவில் மல்லிகார்ஜுனமும் (ஸ்ரீசைலம்), தெற்கே திருநெல்வேலி ஜில்லாவில் புடார்ஜுனமும் இருப்பதால், நடுவிலுள்ளதற்கு மத்தியார்ஜுனம் என்று பெயர். அங்குள்ள லிங்கத்தை மஹாலிங்கம் என்று விசேஷமாகச் சொல்லுகிறோம்.

காரணம், சோள தேசமே ஒரு கோயிலாக இருக்கிறது, ''வித்யா கௌடே, சிவ: சோளே'' என்று சொல்லுவண்டு. தர்க்கம் முதலிய வித்தைகளுக்குக் கௌட தேசம், அதாவது வங்காளம் பிரஸித்தம்; சைவத்திற்குச் சோள தேசம் பிரஸித்தம் என்பது அதன் அர்த்தம். சோள தேசத்தில் சிவன் கோயில்கள் அதிகமாக இருப்பதல்லாமல், தேசமே ஒரு சிவன் கோயிலாக இருக்கிறது.

எந்தச் சிவன் கோயிலிலும், கன்னி மூலையில் விக்கினேசுவரரும், மேற்கில் ஸுப்ரண்யரும், வடக்கில் சண்டேசுவரரும், தெற்கில் தக்ஷிணாமூர்த்தியும், அக்கினி மூலையில் ஸோமாஸ்கந்தரும், ஈசானத்தில் நடராஜாவும் பைரவரு மிருப்பார்கள். பரிவார தேவதைகள் இன்ன இன்ன விடத்தில் இருக்க வேண்டுமென்று ஆகமம் விதித்திருக்கிறது.

மத்தியார்ஜுனத்திற்கு நேர் மேற்கில் 10 மைல் தூரத்திலுள்ள ஸ்வாமிமலை சுப்ரமண்ய க்ஷேத்திரம். அதற்குச் சிறிது தெற்கில் கன்னி மூலையிலுள்ள திருவலஞ்சுழி, பிரஸித்தமான கணேச க்ஷேத்திரம். அதைப் பற்றிச் சிறிது சொல்லுகிறேன்.

ஷண்மதங்களில் காணபத்யமென்பதொன்று. கணபதியை உபாஸித்து முக்தி அடைய காணபத்யம் மார்க்கத்தை

சொல்லுவது. மஹாராஷ்டிர தேசத்தில் கணபதி உபாஸனை அதிகமாகவுள்ளது. அங்கு மோர்காம் என்று ஒரு கணேச க்ஷேத்திரமுள்ளது. மயூரம் என்ற ஸம்ஸ்கிருதச் சொல், மயில் என்று தமிழில் அர்த்தமுடையது. அது மஹாராஷ்டிரத்தில் மோர் என்ருகி விட்டது. காம் என்பது கிராமம் என்பதன் திரிபு. மஹாராஷ்டிரம், ஹிந்துஸ்தானி முதலிய பாஷைகளில் 'காம்' என்ருல் கிராமம் என்றுஅர்த்தம். ஆகையால் மோர்காம் என்பது மயூரக்கிராமம்.

மயூரவாகனருடராக ஒரு கணேச அவஸரமுண்டு. மோர்காமில் ஸ்ரீகணேசர் மயூரவாகனரூடராக இருக்கிருர். மோர்காம் க்ஷேத்திர புராணத்தில், திருவலஞ்சுழியை தக்ஷிணவர்த்தமென்றும், அது கணேசருடைய ராஜதானி என்றும், திருவலஞ்சுழியைப்பாடியிருக்கிருர்கள். அங்கு விக்கினேசுவரர் வலம்புரித் துதிக்கையை உடையவராக இருக்கிருர்.

இந்தத் திருவலஞ்சுழியில், பலகணி சலவைக்கல்லால் செய்யப்பட்டிருக்கிறது. சோள தேசத்தில் மலையேயில்லை. இருந்த மலைகளை ஹனுமார் பிடுங்கிக் கொண்டுபோய்ச் சேது கட்ட உபயோகப்படுத்திவிட்டாராம். மலையில்லை என்பது நிச்சயம். இரண்டு மைலுக்கு ஓர் ஆறு உள்ளது. இதர நாடுகளிலிருந்து கருங்கல்லைக் கொண்டு வந்து, ஆறுகளைக் கடந்து, தேசமெங்கும் பெரிய பெரிய ஆலயங்களைப் பூர்விகர்கள் கட்டியிருக்கிருர்கள். அப்படிப்பட்ட கோயில்களில் திருவலஞ்சுழிக் கோயில் அபூர்வமான வேலைப்பாடுடையது.

முன்னுளில் ஸ்தபதிகள் கோயில் கட்டுவதாக ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுக்கும் பொது, திருவலஞ்சுழிப்பலகணி, ஆவுடையார் கோயில் (திருப்பெருந்துறை) கொடுங்கை முதலிய வேலைப்பாடுகள் தவிர, மற்ற வேலைகளை யெல்லாம் தாங்கள் செய்ய முடியுமென்று எழுதிக் கொடுப்பார்களாம். ஆவுடையார் கோயில் கொடுங்கை ஒரு காகிதத்தின் கனமே யுள்ளது.

திருவலஞ்சுழிக் கோயில் திருவிடைமருதூர் மஹாலிங்கத்துக்கு விக்கினேசுவரர் ஸந்நிதி என்று சொல்லுகையில், இந்த விவரங்களைச் சொல்ல நேர்ந்தது. திருவிடைமருதூருக்கு 10 மைல் தெற்கில் ஆலங்குடி என்று ஓர் ஊர் இருக்கிறது. அது தக்ஷிணமூர்த்தி க்ஷேத்திரம். இடைமருதூருக்கு நேர் வடக்கிலுள்ள திருச்சேய்ஞலூர் என்பது, சண்டேசுவரர் கோயில். சண்டேசுரநாயனர் திருச்சேய்ஞலூரில் அவதாரம் செய்ததாகப் பெரிய புராணமும் கூறியிருக்கிறது. திருவிடைமருதூருக்கு நேர்கிழக்கிலுள்ளது திருவாவடுதுறை. இப்பொழுதுள்ள மடம் ஏற்பட்டதற்கு முன்னேயே, அது பிரஸித்

தமான க்ஷேத்திரம். அது நந்திகேசுவரர் ஸந்நிதி. திருவாரூரில் ஸோமாஸ்கந்தர். தில்லையில் நடராஜா. சீகாழியில் பைரவர். இப்படிச் சோள தேசமே ஒரு சிவாலயமாக இருக்கிறது. இந்தப் பெரிய ஆலயத்தின் கர்ப்பக்கிருஹம் திருவிடைமருதூர். அதிலுள்ள மஹாலிங்கத்திற்கு வேறு பெயர் இல்லை. மேலே சொன்ன பரிவார தேவதைகளையுடைய அந்தந்தக் கோயிலில், அந்தந்தப் பரிவார தேவதைக்கே பெருமை ஏற்பட்டிருக்கிறது. ஆரூரில் வன்மீகநாதர் முதலிய மூர்த்தங்கள் இருப்பினும், தியாகராஜ க்ஷேத்திரமென்றே அது பிரஸித்தி அடைந்திருக்கிறது. ஸ்வாமிமலைக்கு ஸுப்ரமண்ய க்ஷேத்திரமென்றே பிரஸித்தி. சிதம்பரத்திற்கு நடராஜ க்ஷேத்திரமென்றே பிரஸித்தி.

●

உ


திருச்சிற்றம்பலம்

ஆடக மணிப்பொற் குன்றமே! என்னை
ஆண்டுகொண்(டு) அருளிய பொருளே!
வீடகத்(து) ஏற்றும் விளக்கமே! விளக்கின்
மெய்யொளிக் குள்ளொளி வியட்பே!
வாடகச் சிறியேன் வாட்டங்கள் எல்லாம்
தவிர்த்தருள் வழங்கிய மன்றில்
நாடகக் கருணை நாதனே! உன்னை
நம்பினேன்! கைவிடேல் எனையே!

வட்டவான் சுடரே! வளரொளி விளக்கே!
வயங்குசிற் சோதியே! அடியேன்
இட்டமே! இட்டத்(து) இயைந்துளே கலந்த
இன்பமே! என்பெரும் பொருளே!
கட்டமே தவிர்த்திங்(கு) என்னைவாழ் வித்த
கடவுளே! கனகமன் றகத்தே
நட்டமே புரியும் பேரருள் அரசே!
நம்பினேன்! கைவிடேல் எனையே!

—திருவருட்பா

நன்றி கெட்ட கௌதமன்



வேதவேதாந்த
வித்வரத்னம்
பிரம்மஸ்ரீ

ஆர். முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகள்

ஒருவன் செய்த உபகாரத்தை எப்பொழுதும் மறக்காமல் இருக்கவேண்டும். ஒருபொழுதும் நன்றி கெட்டவனாக இருக்கலாகாது. கௌதமன் என்ற பிராம்மணன், தனக்கு உபகாரம் செய்த நாடீஜங்கன் என்ற கொக்கைக் கொன்றதால், நரகத்தில் வீழ்ந்தான்.

மத்ய தேசத்தில் கௌதமன் என்ற பிராம்மணன் இருந்தான். அவன் மிக ஏழை. முறைப்படி வேதங்களைக் கற்கவுமில்லை. அந்தணர்களுக்குரிய ஆசாரங்களை அனுஷ்டிக்கவுமில்லை. பல வேடர்கள் வசிக்கும் கிராமத்திலேயே வசித்து, அவர்களுடைய தொழில்களையே செய்து, ஒருவாறு வயிற்றை வளர்த்து வந்தான். இருந்தாலும் வறுமை அவனை வாட்டி வந்தது.

ஒருசமயம், எப்படியாவது பொருளைத் தேடி வர வேண்டுமென்றெண்ணி, வீட்டைவிட்டுப் புறப்பட்டு வெகுதூரம் சென்றான். ஓரிடத்தில் பல வியாபாரிகள் கப்பலேறிச் செல்வதற்காகச் சென்று கொண்டிருப்பதைக் கண்டு, அவர்களுடன் அவனும் சேர்ந்துகொண்டான்.

அன்றிரவு ஓர் மலையடியாரத்தில் அனைவரும் உறங்கினர். நடுநிசியில் மதம் பிடித்த யானை ஒன்று அங்கு வந்து, உறங்கிக் கொண்டிருந்த பலரைக் கொன்றுவிட்டது. கௌதமன் மட்டும் தெய்வாதீனமாகத் தப்பிப்

பிழைத்தான். காலையில் எழுந்திருந்து, மிகப்பயத்துடன் ஓடோடிச் சென்று. ஓர் வனத்தின் நடுவில் உள்ள பெரிய ஆலமரத்தினடியில் அமர்ந்து, சற்று களைப்பாறினான். வாடிய முகத்துடனும், கொடிய பசியுடனும், மிகுந்த பயத்துடனும் சுற்றுமுற்றும் பார்த்தான். நல்ல வாசனையுடன் குளிர்ந்த காற்று வீசிற்று. சூரியனும் மறையும் தறுவாயிலிருந்தான்.

அச்சமயம், ஓர் பெரிய கொக்கு அந்த ஆலமரத்தின் மேல் உள்ள அதன் வீட்டிற்கு வந்தது. அதன் பெயர் நாடீஜங்கன். அது கொக்குகளுக்கெல்லாம் அரசன். சிறந்த அறிவாளி. பிரும்மதேவருடனும் மற்ற தேவர்களுடனும் நட்புள்ளது. தேவர்களைப்போன்ற திருமேனியையுடையது. காச்யபருடைய புதல்வன்.

அப்படிப்பட்ட சிறந்த கொக்கைக் கண்டதும் ஆச்சர்யமடைந்து, "இதைக் கொன்று தின்றால் நம் பசிதீருமே" என எண்ணினான் பாபி கௌதமன்.

ஆனால் அதற்கு நேர்மாறாக, "வாரும் பிராம்மணரே, வாரும்! தெய்வாதீனமாகத் தாங்கள் என் வீட்டை நோக்கி வந்திருக்கின்றீர். சூர்யனும் மறைந்துவிட்டான். ஆதலால் நான் அளிக்கும் உணவை உண்டு, என் வீட்டிலேயே இரவில் சுகமாக உறங்கிவிட்டுக் காலையில் தங்கள் விருப்பப்படி செல்லலாம்" என்றது அந்தக் கொக்கு.

அதைக் கேட்ட கௌதமன் ஆனந்த சாகரத்தில் மூழ்கினான். பிறகு நாடீஜங்கன் அளித்த பலவித இனிய மாமிசங்களை வயிறு நிறையப் புசித்தான். பிறகு ஓர் சிறந்த படுக்கையில் அவனை அமர்த்திவைத்து, அவனுடைய களைப்பு நீங்குவதற்காகத் தனது இரு இறக்கைகளாலும் விசிறிக் கொண்டே "தாங்கள் எந்த கோத்ரத்தில் பிறந்தவர்கள்? தங்களுக்கு எந்த வேதங்களில் பரிசயம்? தங்களுடைய தொழில் என்ன?" என்றெல்லாம் கேட்டது அக்கொக்கு.

"நான் கௌதம குலத்தில் பிறந்தவன். ஓர் அந்தணன்" என்று சுருக்கமாக பதிலளித்து, பிறகு "நான் மிகவும் வறுமையால் வருந்திக் கொண்டிருக்கிறேன். எப்படியாவது பொருளை சேகரிக்க வேண்டுமென்று புறப்பட்ட நான் பல துன்பங்களுக்குள்ளாகி, இங்கு வந்து சேர்ந்தேன்" எனக் கூறிக் கண்ணீர் வடித்தான்.

அதைக்கேட்ட அந்தக் கொக்கு பயப்படவேண்டாம். நிறையப் பொருள்களுடன் வீட்டிற்குச் செல்லலாம். 'நான்கு விதமாகப் பொருள் சேரலாம்' என பிருகஸ்பதியின் மதம். சிறந்த சிநேகிதன், படிப்பு. மூலதனம், அறிவு இவை நான்கும் பொருள் சேருவதற்குக் காரணங்கள். நான்

தங்களுடைய நண்பன். தாங்கள் பொருளைப் பெறுவதற்கு என்னால் இயன்றவரை உதவிபுரிகிறேன். இப்பொழுது கவலையற்றுத் தூங்குங்கள்'' எனக் கூறிப் படுக்கையை அளித்தது.

மறுநாள் காலையில் ''இங்கிருந்து மூன்று யோசனை தூரத்திற்கப்பால், விரூபாக்ஷன் என்ற இராக்ஷஸத் தலைவன் இருக்கின்றான். அவனிடம் சென்று நான் அனுப்பியதாகத் தெரிவித்தால், தங்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுப்பான். அதைப் பெற்றுத் தாங்கள் சுகமாக வாழலாம்'' எனக் கூறிக் கௌதமனை அனுப்பினான் நாடீஜங்கன்.

கௌதமனும் வெகுவேகமாக அங்கு சென்று, விரூபாக்ஷனைப் பேட்டி கண்டான்.

''நீர் எந்த எந்த வேதங்களைப் பயின்றிருக்கிறீர்? உமது கோத்திரமென்ன? நீர் யாரிடம் வித்யாப்யாஸம் செய்தீர்'' என்றெல்லாம் வினவ, ''கௌதம கோத்ரத்தில் பிறந்தேன்'' என்று மட்டும் பதில் உரைத்தான்.

அதிலிருந்து, இவனிடம் படிப்பு, ஆசாரம் முதலியவை ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து ''நீர் எந்த ஊரில் வசிக்கின்றீர்? உமது மனைவி எந்த கோத்ரத்தில் உதித்தவள்'' என வினவினான்.

''நான் மத்திய தேசத்தில் தோன்றியவன். ஆனால் வேடர்களின் நடுவில் வசித்துவருகிறேன். என் மனைவி நான்காவது வர்ணத்தில் தோன்றியவள். வறுமையால் மிகவும் கஷ்டப்படுகிறேன். தங்களிடம் சென்றால் வறுமை தீரும் என்றுகூறி, நாடீஜங்கன் என்னை அனுப்பிவைத்தான்'' எனப் பதில் உரைத்தான் அந்தணன்.

''இவனுடைய ஆசாரமும் படிப்பும் எப்படியிருந்தாலும், இவன் பிராம்மணனாகப் பிறந்திருக்கிறான். மேலும் நமது சிநேகிதன் இவனை அனுப்பியிருக்கிறான். இந்தக் கார்த்திகை மாதத்தில் ஆயிரம் பிராம்மணர்களுக்கு நாமும் தானம் செய்தாக வேண்டும். அந்த ஆயிரத்தில் ஒருவனாக இவனையும் சேர்த்துக்கொண்டால் தவறு என்ன?'' எனக் கருதி, அவனுக்கு அறுசுவையுணவை அளித்து, ஏராளமாக சுவர்ணங்களையும் இரத்தினங்களையும் தானம் செய்தான்.

அந்தப் பெரிய சுமையைத் தூக்கிக் கொண்டு, மிகுந்த சந்தோஷத்துடன் திரும்பவும் நாடீஜங்கனுடைய கிருகத்திற்கு வந்து சேர்ந்தான். அப்பொழுது இருட்டி விட்டது. முன்போலவே உணவுகளை உட்கொண்டு அக்கொக்குடன் கூடவே படுத்தான்.

வேடத் தொழிலையே செய்து பல பக்ஷிகளின் மாம்ஸங்களையே தின்று வழக்கமானதால், அக்கொக்கின் மாமிசத்திலும் சபல

மேற்பட்டது அந்த நன்றிகெட்ட பாவிக்கு. ஆதலால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. கொக்கோ அயர்ந்து தூங்கிவிட்டது. துஷ்ட மிருகங்கள் சமீபத்தில் அண்டாதிருப்பதற்காக, அக்கொக்கு சமீபத்தில் நெருப்பை எரிய விட்டிருந்தது. நள்ளிரவில் எழுந்திருந்து, அக்கொலைபாதகன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும் நாடீஜங்கனைக் கொள்ளிக் கட்டையால் கொன்று, அந்த உடலில் ஒரு பகுதியை அதே தீயில் வாட்டித் தின்றுவிட்டு, கையிலும் கொஞ்சம் எடுத்துக் கொண்டு அவனுடைய சொந்த கிராமத்திற்குச் சென்றுவிட்டான்.

விரூபாக்ஷன் பிரதிதினம் நாடீஜங்கனை சந்திப்பது வழக்கம். ஐந்து ஆறு தினங்களாக அவனைக் காணாததால், அக்கொலைபாதகனான கௌதமனிடம் சந்தேகம் கொண்டான். "அவன் நாடீஜங்கனிடம் செல்லுகிறேன் என்றானே? அவனுடைய முகத்தில் கொலைபாதகனுடைய ஒளியே காணப்பட்டதே? ஒருக்கால் அவன் தான் ஏதாவது செய்திருப்பானோ?" என்றெல்லாம் எண்ணிக் கொண்டே, சில இராக்ஷஸர்களுடன் தன் மகனை அனுப்பி, நாடீஜங்கனைப் பார்த்து வரச் சொன்னான்.

ஆலமரத்தடியில் நாடீஜங்கனின் உடல் வெட்டுண்டு கிடப்பதைக் கண்டு, அவர்கள் திடுக்கிட்டுக் கதறினர். உடனே விரைந்தோடிக் கௌதமனைக் கட்டி இழுத்துக் கொண்டு விரூபாக்ஷனிடம் திரும்பி வந்து, நடந்த விஷயத்தைத் தெரிவித்தனர். உடனே விரூபாக்ஷன் கௌதமனை கண்டம் கண்டமாக வெட்டித் தின்னும்படி இராக்ஷஸர்களுக்கு உத்தரவிட்டான்.

"அந்த நன்றி கெட்டவன் உடலை நாங்கள் உண்ணமாட்டோம்" என்றனர்.

"அப்படியானால் நாய் நரிகளுக்குப் போடுங்கள்" என்றான்.

அவைகளும் அந்த உடலைப் புசிக்க விரும்பவில்லை. ஏனென்றால், மற்ற எல்லா பாவங்களுக்கும் பிராயச்சித்த முண்டு. நன்றியற்றவனுடைய பாபத்திற்கு பிராயச்சித்தமே இல்லை.

பிராம்மணன் சொத்தை அபஹரித்தவன், திருடன், பிரஹ்மஹத்தி செய்தவன், குருவின் மனைவியிடம் சென்றவன் இவர்களுக்கெல்லாம் பெரியோரால் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நன்றி கெட்டவனுக்கு பிராயச்சித்தமே இல்லை. ஆதலால் அந்தப் பாவியின் உடலை துஷ்ட மிருகங்களும் புழுக்களும் கூடத் தின்பதில்லை. பிறகு பல ஆயிர வருஷங்கள் நரகத்தில் பலவித கஷ்டங்களை அனுபவித்தான் கௌதமன்.

நாடீஜங்கனோவெனில், இந்திரனுடைய அமிருதத்தால் நனைக்கப்பட்டு, மறுபடியும் பிழைத்து உத்தம கதியைப் பெற்றான். ஆதலால் ஒரு பொழுதும் நன்றி கெட்டவனாக இருக்கலாது என்பது தெரியவருகிறது.

சற்குருவின் இன்றியமையாமை

மஹரிஷி ஸ்ரீ சிவானந்தர்

சாதகருக்கு வழிகாட்டுவதற்காக மானிட வடிவத்தில் தோன்றுகின்ற கடவுளே குரு. கடவுளின் கருணை குரு வடிவை எடுக்கிறது. குருவை தரிசனம் செய்வது கடவுளை தரிசனம் செய்வதாகும். குரு கடவுளோடு ஐக்கியப்பட்டிருக்கிறார். அவர் மற்றவர்களிடம் பக்தியை ஊக்குவிக்கின்றார். அவருடைய சாந்நித்தியம் எல்லோரையும் தூய்மையாக்குகிறது.

குரு உண்மையில் ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் இணைத்து வைப்பவராக இருக்கிறார். அவர் தன்னை இந்த (ஜீவாத்மா) நிலையிலிருந்து அந்த (பரமாத்மா) நிலைக்கு உயர்த்திக் கொண்டவர். ஆகவே அவருக்கு இரண்டு நிலைகளிலும் தங்கு தடையின்றித் தாராளமாக நடமாட முடிகிறது. அவர் அமரத்துவம் என்னும் வாயிற்படியின் மீது நின்றுகொண்டு, போராடிக் கொண்டிருக்கும் ஜீவர்களைக் குனிந்து ஒரு கையால் தூக்கி, மற்றொரு கையால் நிலையான ஆனந்தமும், எல்லையிலா சத்திய உணர்வும் கூடிய பெருநிலைக்கு உயர்த்தி விடுகின்றார்.

ஒருவர் குருவாக இருப்பதற்கு, அவருக்குக் கடவுளிடமிருந்து உத்தரவு கிடைத்திருக்க வேண்டும்.

சாஸ்திரப் படிப்பு மட்டும் ஒருவரை குருவாக்கிவிட முடியாது. வேத அத்தியயனம் செய்திருப்பவரும், ஆத்ம ஞானத்தை நேராக அனுபவமூலம் பெற்றிருப்பவரும்தான், குருவாக ஏற்றுக் கொள்ளப்படுவார். ஜீவன் முக்தராக இருப்பவர்தான் உண்மையான குரு. அவர்தான் ஸத்குரு. அவர் பிரம்மம் அல்லது பரமாத்மாவோடு அபேதமாக இருக்கிறார். அவர் பிரம்ம வித்தாக (அதாவது, பிரம்மத்தை அறிந்தவராக) இருக்கிறார்.

ஒரு ஸத்குரு எண்ணற்ற சித்திகளைப் பெற்றிருக்கலாம். அவர் தெய்வீக ஐசுவரியங்கள் அனைத்தையும், (அதாவது, இறைவ

னுடைய செல்வம் அனைத்தையும்) பெற்றிருப்பார்.

இருப்பினும், ஒரு மஹானுடைய பெருமையை வெளிப்படுத்தவோ, அல்லது அவர் ஆத்மானுபூதி நிலையை அடைந்து விட்டார் என்பதை நிரூபித்துக் காட்டவோ, சித்திகளைப் பெற்றிருப்பது சோதனையாக மாட்டாது. ஸத்குருமார்கள் பொதுவாக எவ்வித சித்தியையும் வெளிப்படுத்திக் காட்டுவதில்லை. இருந்த போதிலும், ஸ்தூல நிலைக்கு மேம்பட்ட அசாதாரண விஷயங்கள் இருக்கின்றன என்பதை சாதகர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டும், அவர்களுக்கு தைர்ய மூட்டுவதற்காகவும், அவர்களுடைய உள்ளத்தில் நம்பிக்கையை உண்டாக்கவும், அவர்கள் சில சமயங்களில் அவ்வாறு சித்திகளை வெளிப்படுத்திக் காட்டுவது உண்டு.

ஸத்குரு பிரம்மமே ஆவார். அவர் பேரானந்த சாகரம். ஞான சமுத்திரம். கருணைக்கடல். அவர் உங்கள் ஆத்மாவை நடத்திச் செல்லும் தலைவர். அவர் ஆனந்த ஊற்று. அவர் உங்களுடைய தொந்தரவுகள் துயரங்கள் தடைகள் அனைத்தையும் நீக்குகிறார். அவர் உங்களுக்கு நேரான தெய்வீக வழியைக் காட்டுகின்றார். அவர் உங்களுடைய அஞ்ஞானத் திரையைக் கிழித்து விடுகிறார். அவர் உங்களை அமரராகவும், தெய்வீகத் தன்மை பெற்றவராகவும் ஆக்குகின்றார். அவர் உங்களிடமுள்ள கீழான அசுர குணங்களை மாற்றிவிடுகின்றார். அவர் உங்களுக்கு ஞானம் என்னும் கயிற்றைக் கொடுத்து, நீங்கள் இந்த சம்சார சாகரத்தில் மூழ்கிக் கொண்டிருப்பதிலிருந்து மேலே தூக்கி விடுகின்றார். அவரை ஒரு சாதாரண மனிதர் என்றுஎண்ணி விடாதீர்கள். நீங்கள் அவரை ஒரு மனிதர் என்று கருதுவீர்களேயாகில், நீங்கள் ஒரு விலங்கே. உங்கள் குருவை வழிபாடுசெய்து அவருக்கு பயபக்தியுடன் நமஸ்காரம் செய்யுங்கள்.

குருவே கடவுள். அவரிடமிருந்து வரும் வாக்கு, கடவுளிடமிருந்து வரும் வாக்காகும். அவர் எதையும் உபதேசிக்க வேண்டியதில்லை. அவருடைய சான்னித்தியம் அல்லது சத்சங்கமே உள்ளத்தை உயர்த்தக் கூடியதாகவும், ஊக்கமூட்டக் கூடியதாகவும், தூண்டி விடக்கூடியதாகவும்இருக்கிறது. அவருடைய சத்சங்கமே ஆத்ம ஒளியாக உள்ளது. அவருடைய சத்சங்கத்தில் இருப்பதே ஆன்மீகக் கல்வியாகும். கிரந்த ஸாஹிப்பை வாசித்துப் பாருங்கள். குருவினுடைய மாஹாத்மியம் உங்களுக்குத் தெரியவரும்.

மனிதன் மனிதனிடமிருந்து தான் உபதேசம் பெற முடியும். ஆகவே கடவுள் மானிட சரீரத்தின் மூலம் உபதேசிக்கிறார். உங்களுடைய குருவிடத்தில் உங்களுக்கு வேண்டிய மானிட லக்ஷிய

மாகிய பூர்ணத்துவம் கிடைக்கிறது. நீங்கள் உங்களை உருவாக்கிக் கொள்வதற்கு அவர் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். அப்பேர்ப்பட்ட மஹாத்மா, வழிபட்டு மரியாதை செய்வதற்குத் தகுதியுடையவர்தான் என்பதை, உங்கள் மனம் தாராளமாக ஏற்றுக்கொண்டு சமாதானமடையும்.

குரு மோக்ஷ வாயிலாக உள்ளார். மனோவாக்கைக் கடந்த பேரறிவு நிலைக்குச் செல்ல, அவர் நுழைவாயிலாக உள்ளார். ஆனால் அதன்மூலம் நுழைந்து உள்ளே செல்ல வேண்டியது, சாதகனுடைய வேலையாகும். குரு உதவி மாத்திரம் செய்யக் கூடியவர். நடைமுறை சாதனைகளைச் செய்கின்ற வேலை சாதகனைச் சார்ந்தது.

ஆன்மீகப் பாதையில் நுழைபவருக்கு, ஒரு குரு அத்தியாவசியம். ஒரு தீபத்தை ஏற்ற எரிந்துகொண்டிருக்கும் மற்றொரு தீபம் தேவைப்படுகிறது. அதே போல, அனுபூதி பெற்ற ஒரு ஆத்மாவால்தான் மற்றொரு ஆத்மாவிற்கு ஒளிவிளக்கம் கொடுக்க முடியும்.

சிலர் சுயேச்சையாக சில வருஷ காலம் தியானம் செய்கின்றனர். பிறகு அவர்கள் ஒரு குருவினுடைய அவசியத்தைப் பிரத்தியக்ஷமாக உணருகின்றனர். வழியில் அவர்களுக்கு சில தடைகள் ஏற்படுகின்றன. இந்தத் தடைகளை அல்லது இடையூறுகளைக் கடந்து செல்வது எப்படி என்பதை அவர்களால் தெரிந்து கொள்ள முடிவதில்லை. அதன் பிறகு அவர்கள் ஒரு குருவைத் தேட ஆரம்பிக்கின்றனர்.

ஏற்கனவே பத்ரிநாத் சென்று வந்த ஒருவரால்தான், அந்த இடத்திற்குரிய வழியை உங்களுக்குத் தெரிவிக்க முடியும். ஆன்மீகப் பாதையில் உங்களுடைய வழியைக் கண்டு பிடிப்பது இன்னும் சிரமமான காரியம். மனமானது உங்களை அடிக்கடி தவறான பாதைக்கு அழைத்துச் சென்றுவிடும். குருவானவர் படுகுழிகளையும், இடையூறுகளையும் நீக்கி, சரியான வழியில் உங்களை அழைத்துச் செல்வார். அவர் "இந்த வழி மோக்ஷத்திற்குச் செல்லக்கூடியது. இது பந்தத்திற்குச் செல்லக் கூடியது" என்று உங்களிடம் கூறுவார். இம்மாதிரியான ஆலோசனை இல்லாவிடில், நீங்கள் பத்ரிநாத் போக வேண்டுமென்று விரும்பியிருந்தாலும், நீங்கள் டில்லிக்குப் போய்ச் சேர்ந்திருப்பது தெரிய வரும்.

சாஸ்திரங்கள் அடர்ந்த காட்டைப் போன்றவை. அவைகளில் சிலேடையாகப் பொருள் தரக் கூடிய பகுதிகள் உள்ளன. ஒன்றுக்கொன்று முரண்பாடான பொருளைத் தரக்கூடியவை போலத் தோன்றும் பகுதிகள்

இருக்கின்றன. அவைகளில் ரகசியமான அர்த்தங்களும், வெவ்வேறு முக்கியத்துவமும், மறைத்து வைக்கப்பட்டுள்ள விளக்கங்களும் உள்ள பகுதிகள் இருக்கின்றன. எதிரிடையான மேற்கோள்கள் இருக்கின்றன. சரியான அர்த்தத்தை எடுத்து விளக்கவும், சந்தேகங்களை நீக்கி சிலேடைப் பொருள்களை விளக்கி அவைகளிலுள்ள உபதேசங்களின் சாராம்சத்தை உங்களுக்கு எடுத்துச் சொல்லவும், ஒரு குரு அவசியம்.

ஆன்மீகப் பாதையில் செல்லும் ஒவ்வொரு சாதகருக்கும், ஒரு குரு அத்தியாவசியம். உங்களிடமுள்ள குறைபாடுகளை, குருதான் கண்டு பிடிப்பார். உங்களிடமுள்ள குறைபாடுகளை உங்களாலேயே கண்டு பிடிக்க இயலாது. ஏனெனில் அஹங்காரத்தினுடைய தன்மை அப்பேர்ப்பட்டது. எவ்வாறு ஒரு மனிதன் தன்னுடைய முதுகைத் தானே பார்த்துக்கொள்ள முடியாதோ, அதேபோல, அவனால் தனது குறைகளைத் தானே பார்க்க முடியாது. அவனிடமுள்ள தீய குணங்களையும், குறைபாடுகளையும் போக்கிக் கொள்வதற்கு, அவன் ஒரு குருவின் கீழ் இருந்து வரவேண்டும்.

ஒரு குருவின் ஆலோசனையின் கீழ் இருந்துவரும் சாதகன், தவறான வழிக்குச் செல்வதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றான். குருவோடு ஸத்ஸங்கம் கொண்டிருப்பதானது, லௌகீக வாஸனை நிறைந்த உலகின் பாதகமான தீய சக்திகளிலிருந்தும், எல்லாவிதமான தூண்டுதல்களிலிருந்தும், உங்களைப் பாதுகாக்கும் கவசமாகவும், கோட்டையாகவும் விளங்குகிறது.

ஒரு குருவினுடைய அத்தியாவசியத்திற்கு எதிராக, எந்த குருவினிடமும் படிக்காமலேயே பரிபூர்ண நிலையை அடைந்த மஹான்களின் உதாரணங்களை எடுத்துக் காட்டுதல் கூடாது. ஏனெனில், அப்பேர்ப்பட்ட மஹாபுருஷர்கள் ஆன்மீக வாழ்விற்கு விதிவிலக்கானவர்கள். அவர்கள் சாதாரணமாகப் பொதுப்படையாகக் குறிப்பிடத் தக்கவர்கள் அல்ல. அவர்கள் பூர்வ ஜன்மங்களில் செய்த கடுமையான சேவை, அத்தியயனம், தியானம் ஆகியவற்றின் பலனாக, இப்பொழுது ஆன்மீக குருமார்களாகவிளங்குகின்றனர். அவர்கள் ஏற்கனவே குருவின் கீழிருந்து அத்தியயனம் செய்திருக்கின்றனர். இந்தப் பிறவி அதனுடைய தொடர்ச்சியான ஆன்மீகப் பலனே யாகும். ஆகவே, அதன்மூலம் குருவினுடைய முக்கியத்துவம் ஒன்றும் குறைந்துவிடாது.

உங்கள் பிரச்னைகள்

தத்துவமாய் இருக்கட்டும், சமயமாய் இருக்கட்டும். எதுவாயிருந்தாலும், நம் வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு அது வழிகாட்டுவதாய் இருக்கவேண்டும் என்பதே, "அருள்" பத்திரிகையின் சித்தாந்தம்.

அந்த முறையில்தான், தமது பிரச்னைகளை நமக்கு எழுதியனுப்புமாறு, நமது வாசக அன்பர்களுக்கு வேண்டுகோள் விடுத்து வருகிறோம்,

பல அன்பர்கள் அவ்வாறே நமக்கு எழுதியனுப்பி யிருக்கிறார்கள். அவர்களுக்குப் பயன்படக்கூடிய ஆலோசனைகளை, இந்த இதழிலிருந்து நாம் வெளியிடத் தொடங்குகிறோம்.

பிரச்னை

"எனக்கு வயது 35. திருமணம் ஆகி மூன்று வருடங்கள் ஆகின்றன. இந்த நிலையில் இரண்டு கைக்குழந்தைகளை விட்டு விட்டு, என் மனைவி இறந்து போய்விட்டாள். அவளது பிரிவைத் தாங்க முடியாமல், நான் தற்கொலை கூடச் செய்து கொள்ள எண்ணினேன். அவளையும், அவள் என் மீது வைத்திருந்த பாசத்தையும் எண்ணி யெண்ணி, என் உள்ளம் இரவு பகலாக ஏங்குகிறது. நான் மனச்சாந்தி பெறுவதற்கு வழி என்ன?" என்று கேட்டிருக்கிறார் ஓர் அன்பர்.

ஆலோசனை

துக்கம் என்பது, நம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதற்காக இறைவனால் அளிக்கப்படுகிற ஒரு வரப் பிரசாதம். பாரதத்திலே, குந்திதேவி ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவைப் பார்த்து, "நீ அடிக்கடி எனக்குத் துக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தது, இங்கு நினைவு கூரத்தக்கது,

"கல்லைப் பிசைந்து கனியாக்குவான் எங்கள் கண்ணுதலே!" என்றார் மணிவாசகப் பெருமான். அதாவது, கல்லைப்போன்று கடினமாயிருக்கும் உள்ளத்தை, அவன் கனியைப் போன்று மென்மை உடையதாய் ஆக்கிவிடுகிறான் என்பது, அதன் பொருள். அவன் அப்படி ஆக்குவதன் நோக்கம் என்ன?

உள்ளம் கடினமாயிருக்கும் வரையில், உலகில் உள்ள சக்திகள் எல்லாம் அதற்கு எதிரிடையாகவே வேலை செய்து கொண்டிருக்கும். அதனால் மனிதனுக்கு ஒன்று போக ஒன்றாய் இடுக்கண்கள் வந்து கொண்டிருக்கும். அந்த நிலையில், அவன் எவ்வளவு வசதி படைத்தவனாயிருப்பினும், உள்ளத்தில் அமைதியற்றவனாகவே வாழ்ந்து கொண்டிருப்பான். துர்யோதனன் அப்படித்தான் வாழ்ந்து கொண்டிருந்தான்.

உள்ளம் மென்மையுடையதாய் ஆகிவிட்டால், உலகிலுள்ள சக்திகள் எல்லாம் நமக்கு அனுகூலமாக வேலை செய்யத் தொடங்கும். அந்த நிலையில், நாம் செய்யும் சிறுசிறு முயற்சிகள் கூட நமக்குப் பெரும் பெரும் வெற்றிகளைத் தந்து கொண்டிருக்கும். நம் உள்ளமும் எப்போதுமே கவலையற்று அமைதியுற்றிருக்கும்.

நாம் எல்லோரும் அவ்வாறு கவலையற்று அமைதியோடு வாழும் உயர்நிலையை அடைய வேண்டும் என்ற கருணையினுலேயே, கல்போன்றிருக்கும் நம் உள்ளங்களை இறைவன் கனிபோன்று ஆக்கிவிட முற்படுகிருர்.

இறைவனிடத்தே வைத்துள்ள பக்தியின் காரணமாக உள்ளம் உருகும்போது, அது இயல்பாகவே கனிவு பெறுகிறது. அவ்வாறு தாளுகவே உருகுவதற்கான பரிபக்குவம் நமக்கு இல்லாவிட்டால், இறைவன் துக்கங்களைக் கொடுத்து நம் உள்ளத்தை உருக வைக்கிருர். எனவே, வயிற்றிலுள்ள அஜீர்ணத்தைப் போக்கிக்கொண்டு பிற்பாடு நிரம்ப உண்பதற்காக இப்போது நாம் உபவாசம் இருப்பது போல், நம் மனத்திலுள்ள பாபங்களைப் போக்கிக் கொண்டு பிற்பாடு நன்கு சுகமாய் வாழ்வதற்காக, இப்போது நாம் துக்கத்தை அனுபவிக்கிருேம்.

ஆம்; பக்தியினுலோ துக்கத்திஞலோ நம் உள்ளம் உருகும்போது, அந்த உள்ளத்தைப் பற்றியுள்ள பாபங்கள் கழுவப்படுகின்றன. அவ்வாறு கழுவப்படுகிற பாபங்கள்தாம், கண்ணீர் வடிவத்தில் வெளிப்படுகின்றன. பாபங்கள் கழுவப்பட்டவுடன், மனத்தில் ஒரு புதுமையான அமைதி தோன்றுகிறது. நாம் அதுவரையில் அனுபவித்திராத ஓர் ஆறுதல் ஏற்படுகிறது.

இந்த உண்மையைக் கருத்தில் கொண்டுதான், மரணம் நேர்ந்த சமயங்களில் ஒப்பாரி வைத்து அழுவது என்னும் வழக்கத்தை, நம முன்னேர்கள் கையாண்டு வந்திருக்கிருர்கள். அந்த வழக்கம் இப்போது நமக்கு அநாகரிகமாகப் படலாம். ஆளுல் துக்க சமயத்தில் நன்கு வாய்விட்டு அலறி அழுவது சிறந்த பயனுடையதாகும் என்று, இன்றைய மனே தத்துவ நிபுணர்களே ஒப்புக்கொள்ளுகிருர்கள்.

நமக்குப் பிரியமான ஒருவர் இறந்து போய் விட்டால், நம் உள்ளத்திலே துக்கம் பீறிட்டு எழுவது இயல்பு. அப்படி எழுகின்ற துக்கத்தை நாம் கொஞ்சம் கூட அடக்கக் கூடாது. அதற்கு மாருக, அதை நாம் நன்கு அழுது தீர்த்துவிட வேண்டும். நம்மிடம் துக்கம் விசாரிக்க வருகின்ற நண்பர்களும் சுற்றத்தார்களும் கூட, நம்முடைய துக்கத்தைக் கிளறிவிட வேண்டுமே தவிர, நம்மை சமாதானப்படுத்த முயலக் கூடாது. அப்படி ஒரு பத்து நாட்களோ, பதின்மூன்று நாட்களோ, பதினைந்து நாட்களோ, நம்மால் முடிந்த மட்டும் அழுது புலம்பி அனுபவித்துத் தீர்த்து விட்டோமாஞல், அப்புறம் நம் வாழ்நாள் முழுவதும், அந்த ஒரு குறிப்பிட்ட துக்கத்திஞல் நம் உள்ளம் பாதிக்கப்படமாட்டாது.


அப்படிக்கின்றி, அந்தப் பத்து நாட்களோ பதினைந்து நாட்களோ நாம் முழுமையாக வெளியிட்டு அழுது தீர்க்காமல், நமது துக்கத்தை நாம் அடக்கி வைத்துக் கொண்டிருந்து விட்டால், அது பிற்பாடு நம் மனத்திற்குள்ளேயே புரையோடத் தொடங்கி

விடும். அது மட்டும் அல்ல. நம் வாழ்நாள் முழுதும் அது நமது உள்ளத்தை விட்டு அகலாமல், பல் வேறு மன நோய்களைத் தோற்றுவித்துத் தொல்லைப்படுத்திக் கொண்டிருக்கும்.

அப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்கள் என்ன செய்ய வேண்டும் என்றால், —

யாரும் இல்லாத ஒரு தனியிடத்தில் போய் உட்கார்ந்து கொண்டு, இறந்து போனவரை எண்ணித் தம்மால் முடிந்த மட்டும்வாய்விட்டு அழவேண்டும். அவ்வாறு அடிக்கடி அழுது அழுது, கண்ணீரை ஆறாய்ப் பெருக்க வேண்டும். ஒரு சில நாட்களுக்கு அப்படிச் செய்து வந்தால், மனத்தில் புரையோடிப் போயுள்ள துக்கம் அனைத்தும் அந்த அழுகையின் வாயிலாக வெளிப்பட்டு, அறவே ஒழிந்து போய்விடும். அதற்கு அப்புறம், உள்ளத்தில் ஒரு நிலையான அமைதியும் ஏற்பட்டுவிடும்.

அந்த அமைதி ஏற்பட்ட பிறகு, நமக்குப் பிரியமானவரது மரணத்தின் காரணமாக நம் வாழ்க்கையில் தோன்றியுள்ள பிற பிரச்னைகளும், இறைவனருளால் தாமாகவே தீர்ந்து விடும் என்பது உறுதி. ஏனென்றால், பிரச்னைகள் தீருவதால் உள்ளத்தில் அமைதி ஏற்படுவதில்லை. உள்ளத்தில் அமைதி ஏற்படும் போதுதான் பிரச்னைகள் தீருகின்றன.


அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
Kali mark
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாருத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

உழைப்பின் வடிவிலே இறைவனை வழிபடுவோர்



பகவத் கீதையிலே, ஒரு சாதாரண மனிதனின் அன்றாட வாழ்க்கையில் அவனுக்கு வழி காட்டக் கூடிய பகுதி ஒன்று உண்டு என்றால், அதுதான் கர்ம யோகத்தைப் பற்றிய பகுதி யாகும்.

"உன் கடமையைச் செய்; எக்காரணத்தை முன்னிட்டும் உழைப்பைக் கைவிடாதே!" என்பது கர்மயோகத்தின் சாரம்.

பொதுவாக, மனிதன் பணம் சம்பாதிப்பதற்காகவே உழைக்கிறான். தனக்குப் போதுமான அளவு பணத்தையும் மற்ற வசதிகளையும் தேடிக் கொண்டு விட்டால், அதன் பிறகு ஆயுள் முழுதும் யாதொரு உழைப்புமில்லாமலே சும்மா யிருந்து விடலாமென்று நினைக்கிறான்.

இந்த நினைப்பே தவறானது என்கிறது பகவத் கீதை. மனிதன்

எவ்வளவு தான் பொருளைத் தேடிக் கொண்டு விட்டாலும், தேடிக்கொள்ளா விட்டாலும், அவன் தன் உயிருள்ளவரைக்கும் உழைத்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பது கீதையின் கட்டளை. ஏனென்றால், உழைப்பு என்பது உயிர்த்துடிப்பின் அடையாளம். உழைப்பு ஓயும்போது, அந்த உயிர்த் துடிப்பும் ஓயத் தொடங்கி விடும்.

ஒரு குறிப்பிட்ட பயனைக் கருதி நாம் உழைப்போமாயின், அந்தப் பயன் கைகூடினதும் உழைப்பு நின்றுவிடும். பயன் கைகூடா விட்டால், உழைப்பு மட்டுமல்ல; உள்ளமும் சோர்ந்து படுத்து விடும். எனவே தான் பயனைக் கருதாது பாடுபடு என்கிறது பகவத் கீதை. பயனைக்கருதாது பாடுபடும் போது, நாம் சிறிதும் எதிர்பார்க்காத உயரிய பயன்கள் எல்லாம் தாமாகவே நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் என்பது, அதன் உட்பொருள்.

ஆனால் பயனைக் கருதா விட்டால், உழைப்பில் மனம் செல்லுவதில்லை. அப்படிச் செல்ல வேண்டுமாயின், அந்த உழைப்பிலேயே சுவை காணும் அளவுக்கு, உள்ளம் பரிபக்குவப் பட்டிருக்க வேண்டும். அதாவது, குழந்தைகள் விளையாட்டிலே சுவை காண்பது போல், நாம் உழைப்பிலே சுவை காண வேண்டும்.

அப்படிச் சுவை காண்பவர்கள், தாம் எந்த எந்தத் தொழிச் செய்தாலும், அந்த அந்தத் தொழிலின் மூலமாகவே உயர்ந்த சித்தியை அடைவார்கள் என்று உறுதி கூறுகிறது பகவத் கீதை. இங்கே சித்தி என்பது ஆத்ம சித்தி மட்டும் அல்ல, உலகியல் வெற்றியும் கூடத்தான்.

எனவே, உலகியலில் வெற்றி அடைவதற்கே, நாம் செய்யும் தொழில் எதுவாயிருந்தாலும் அதைப் பிரியத் தோடு செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். "இது தாழ்ந்த தொழில்—அது உயர்ந்த தொழில்" என்னும் பேத உணர்ச்சி, கனவிலும் வரக் கூடாது. பேத உணர்ச்சி தோன்றி விட்டால், செய்யும் தொழிலில் பிரியம் தோன்ற மாட்டாது. இதுதான் கீதையின் போதனையில் அடங்கியுள்ள இரகசியம்.

இந்த இரகசியத்தை, கற்றறிந்த பண்டிதர்களிலேயே பல பேர் உணருவதில்லை; உணர்ந்தாலும் அதைத் தம் வாழ்க்கையில் கடைபிடிப்பதில்லை. திருவாளர்கள் வி. ஜி. பன்னீர்தாஸ் சகோதரர்கள், கற்றறிந்த பண்டிதர்கள் அல்ல. எனினும், கர்ம யோகத்தின் இந்த அடிப்படை இரகசியத்தை, அவர்கள் கற்காமலே உணர்ந்திருக்கிறார்கள். உணர்ந்தது மட்டும் அல்ல; தம் வாழ்க்கையில் அதைக் கடைப் பிடித்தும் வந்திருக்கிறார்கள். அதைத்தான் பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரம் என்று சொல்லுவார்கள்.

பன்னீர்தாஸ் சகோதரர்கள் இன்று பெரிய செல்வவந்தர்களாகவும், புகழ்படைத்த வியாபாரிகளாகவும் விளங்குகிறார்கள் என்றால், அதற்கு மூலதனம் அந்த ஸமஸ்காரமேயாகும். தொழில்களிலே இது உயர்ந்தது — இது தாழ்ந்தது என்ற பேத உணர்ச்சி இல்லாமல், செய்யும் தொழில் எதுவாயிருந்தாலும் அதை சிரத்தையோடு செய்து, உலகியல் சம்பந்தப்பட்ட மட்டில் கீதையிலே கூறப்பட்டுள்ள சித்தியைப் பெற்றவர்கள் அவர்கள். அதே போல் ஆன்மிகத்துறையிலும் பரிபாகத்துக்கு உரிய மனப் பண்பை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டு வருபவர்கள்.

இவர்களில் மூத்தவராகிய பன்னீர்தாஸ், சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த அழகப்பபுரம் என்னும் குக்கிராமத்திலிருந்து, பரமஏழையாய்ச் சென்னைக்கு வந்தவர். வரும் வழியில், மதுரை இரயில் நிலயத்திலே இவருக்குத் தற்செயலாக மகாத்மா காந்தியின் தரிசனம் கிடைத்தது. அதன் பயனாகத் தானோ என்னவோ, அன்று முதல் உழைப்பிலும் நேர்மையிலும் இவருக்கு ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

சென்னையில் வந்து, அவர் மிகவும் சிரமப்பட்டார். ஒரு ரேஷன் கடையில் சொற்ப சம்பளத்தில் பணிபுரிந்தார். பின்னர் தம் சொந்த ஊரில் இருந்த அன்னை, தம்பி, தங்கை ஆகியோரைச் சென்னைக்குக் கூட்டி வந்து, மிகமிக எளிய வாழ்க்கையை நடத்தி வந்தார். இவருடைய தம்பி சந்தோஷம், ஒரு பேப்பர் பையனாக வேலை செய்து, மாதம் பதின்மூன்று ரூபாய் சம்பாதித்தார். இதறகிடையில் பனீர் தாசுக்குத் திருமணமும நடந்து விட்டது. குடும்பத்திலுள்ள அனைவருமே அரும்பாடுபட்டு உழைத்து, ஒரு சிறிய டீக்கடை நடத்து வந்தார்கள். ஆனால் எத்தொழிலைச் செய்தாலும், அத் தொழிலில் அவர்கள் மகிழ்ச்சி உடையவர்களாக விளங்கினார்கள். அந்த மனப் பண்பு தான், அவர்கள் மேலும் மேலும் உயர்வு அடைவதற்கு உறுதுணை புரிந்தது.

நாம் கடவுளைக் கண்டதில்லை; காணவும் முடியாது. ஆனால் நமக்குச் சோறு போடுகிற தொழில் எதுவோ, அதனையே நாம் கண்கண்ட தெய்வமாகக் கருத வேண்டும். அப்போது அந்தத் தொழிலிலே நாம் செலவிடுகிற உழைப்பு அனைத்தும், இறைவனுக்குச் செய்யப்படுகிற வழிபாடாக மாறிவிடும். இறைவனும் அந்தத் தொழிலின் வாயிலாகவே நமக்கு இன்னருள் புரிவான்.

இந்த உயரிய தத்துவத்தை ஓதாமலே உணர்ந்து ஒழுகி வருகின்ற பன்னீர்தாஸ் சகோதரர்கள், நமது "அருள்" பத்திரிகையின் வளர்ச்சியில் பெரிதும் ஆர்வம் படைத்தவர்கள். அவர்களுடைய வளர்ச்சிக்கும் ஆன்மிக மேம்பாட்டுக்கும், இறைவன் மேலும் மேலும் ஆசி நல்குவானாக!

அம்பிகையின் ஆவிர்பாவம்

ஸ்ரீ வித்தியா மார்த்தாண்ட பிரம்மஸ்ரீ
C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்

ஒரு சமயம், நாரதர் தேவலோகத்துக்கு வந்தார். இந்திரன் அவரை வணங்கி, "முனிவர் பெருமானே! தாங்கள் எல்லாம் அறிந்தவர்கள். தங்கள் வருகையினால் நாங்கள் கிருதார்த்தர்கள் ஆனோம். தாங்கள் வந்த காரணத்தைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுகிறோம்!" என்று கேட்டுக் கொண்டான்.

நாரதர் சொன்னார்: "இந்திரா! இப்போது பண்டாசுரன் விஷ்ணு மாயையால் மோகத்தை அடைந்திருக்கிறான். அந்த மோகத்திலிருந்து அவன் விடுபட்டு விட்டால், அப்புறம் மூன்று உலகங்களையும் எரித்துச் சாம்பலாக்கி விடுவான். ஆகையால், அதற்குள்ளாக நீங்கள் அம்பிகையைப் பூஜித்து, உங்கள் பலத்தைப் பெருக்கிக்கொள்ளுங்கள். அம்பிகையின் உபாஸனையால், நீங்கள் கட்டாயம் சிரேயஸ்ஸை அடைவீர்கள்!"

இவ்வாறு நாரதரால் உபதேசிக்கப்பட்ட இந்திரன், தேவர்களால் புடைசூழப் பட்டவனாய் ஹிமவத் கிரியை வந்து எய்தினான். அங்கு கங்கைக் கரையிலே எல்லா ருதுக்களிலும் கிடைக்கின்ற நறுமலர்களைக்கொண்டு, மகாபூஜாவிதானப்படி பராசக்தியைப் பூஜை செய்யத் தொடங்கினான்.

இந்திரன் பூஜை செய்ததால், அந்த இடத்துக்கு இந்திரப்ரஸ்தம் என்று பெயர் வந்தது. தன்னை அடைந்தவர்களுக்கு எல்லா சித்திகளையும் கொடுக்கக் கூடியதாய், இன்றும் அது விளங்கிக் கொண்டிருக்கிறது.

அங்கே, நாரதர் உபதேசித்த பூஜா மார்க்கத்தின்படி, இந்திரனும் தேவர்களும் பதினாயிரம் ஆண்டுகள் மிகக் கடினமான தபசிலே ஈடுபட்டிருந்தார்கள்.

இந்தச் செய்தியை அறிந்தார் அசுர குருவாகிய சுக்கிரபகவான்.

உடனே அவர் பண்டாசுரனிடம் சென்று, "அசுரேந்திரா! உன்னுடைய குலத்துக்கே பரம வைரியாகிய ஹரியினால் சிருஷ்டி செய்து அனுப்பப்பட்டவள் இந்த மாயாதேவி. நீ அதை உணராமல், அவளிடம் மோகம்அடைந்து நிற்கிறாய். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இந்திரனும் தேவர்களும் உன்னை ஜயிப்பதற்கான முயற்சியில், அம்பிகையை நோக்கித் தவம் செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்களுடைய தவம் நிறைவெய்தி விட்டால், அப்புறம் நீ அழிவதைத் தவிர வேறு வழியே இல்லை. ஆகையால் நீ இப்போதே ஹிமவத் கிரிக்குப் புறப்பட்டுச் சென்று, அவர்களுடைய தவத்திற்கு இடையூறு விளைவிக்க

வேண்டும்'' என்று யோசனை கூறினர்.

இதைக் கேட்டதும், பண்டாசுரன் தன் மந்திரிகளைக் கூப்பிட்டு அவர்களிடம் இச் செய்தியைத் தெரிவித்தான்.

அப்போது, சுருதவர்மா என்னும் மந்திரி, பண்டாசுரனைப் பார்த்து, ''அரசே! அறுபதினுயிரம் ஆண்டுகள் தாங்கள் நிர்பயமாக அரசு செலுத்தலாமென்று பரமேஸ்வரன் தங்களுக்கு வரம் கொடுத்தார். இப்போது அதற்கு மேலும் அநேகம் ஆண்டுகள் கடந்து விட்டன. ஆகையால், இனிமேல் நாம் சுகமோ துக்கமோ எது வந்தாலும் அனுபவிக்கத்தான் வேண்டும்'' என்று கூறினன்.

உடனே பீமகர்மா என்னும் மற்ெறுரு மந்திரி, ''மன்னவா! யுத்தத்திலே சத்ருவின் பாதிபலம் தங்களுக்கு வந்துவிடும் என்று சிவபெருமான் வரம்கொடுத்திருக்கிறுர். ஆகையால் நாம் பயப்படத் தேவையில்லை. இருந்தாலும், எதிரிகளை நாம் அலட்சியமாய் நினைக்கக்கூடாது. நாம் இப்போதே சென்று, தேவர்களின் தவத்தைக் கலைத்துவிட்டு வரவேண்டும்'' என்ருன்.

அப்படியே பண்டாசுரனும் தன் சைன்யங்களுடன் ஹிமவத்கிரிக்குப் புறப்பட்டுச் சென்ருன்.

ஆனுல் அங்கே அவன் தேவர்களின் அருகிலேயே நெருங்க முடியாதபடி, அவர்களைச் சுற்றிலும் அம்பிகையின் அருளால் ஒரு மாயக் கோட்டை எழுந்து நின்றது.

பண்டாசுரன் அந்தக் கோட் கோட்டையைத் தன்னுடைய தானவாஸ்திரத்தாலே பிளந்தான். ஆனுல் பிளந்த மறுகணமே, அது மீண்டும்முன்போல ஒன்றுகூடி, முன்னைக் காட்டிலும் மிகுதியான வலுவுடையதாய் விளங்கியது.

வியப்படைந்த பண்டாசுரன், மறுபடியும் அந்தக்கோட்டையை வாயு அஸ்திரத்தால் பிளந்தான். கோட்டை மறுபடியும் ஒன்றுகூடி நின்றது.

இப்படியே அவன் எத்தனை தடவை பிளந்தாலும், அத்தனை தடவையும் கோட்டை ஒன்றுகூடி நின்றது. அதனை எதுவும் செய்ய முடியாமல்,பண்டாசுரன் மிகவும் எரிச்சலுடனும் ஏமாற்றத்துடனும், தன் தலைநகருக்குத் திரும்பினன்.

இந்த அதிசயத்தைக் கண்டு, தேவர்களும் வியப்படைந்தார்கள். கடைசியாக அவர்கள் ஒரு மாபெரும் ஹோம குண்டத்தை நிறுவி, அதில் மஹாயாகவிதானமாக அக்னியைவழிபட்டு,தங்கள் சரீரத்திலுள்ள மாமிசங்களையே அறுத்து அறுத்து ஆகுதியா

அளித்து யாகம் செய்யலானுர்கள்.

அப்படி எல்லா அங்கங்களிலுமுள்ள மாமிசங்களே அறுத்து ஹோமம் செய்துவிட்டு, இறுதியில் தம்முடைய சரீரங்களேயே அக்கினியில் ஆகுதியாக அளிப்பதற்கு அவர்கள் முற்பட்ட சமயத்தில்;

அந்த அக்கினி குண்டத்திலிருந்து ஓர் ஒப்புயர்வற்ற திவ்ய தேஜஸ் எழுந்தது. கோடி சூர்யர்களேப் போன்ற பிரகாசமும், கோடி சந்திரர்களேப் போன்ற குளிர்ச்சியும் வாய்ந்த அந்தப் பேரொளிப் பிழம்பின் நடுவிலே ஒரு திவ்யமான சக்கரத்தையும், அந்தச் சக்கரத்திலே ஒரு தேவீ ஸ்வரூபத்தையும், அவர்கள் கண்டார்கள்.

செவ்வரத்தம் பூவைப் போன்ற சிவந்த திருமேனியளாய், மாதுள மலர் போன்ற செந்நிறப்பட்டாடை அணிந்தவளாய், சர்வாபரண பூஷிதையாய், சிருங்கார ரசத்திற்கு இருப்பிடமானவளாய் கருணை பொழியும் கடைக்கண் பார்வை படைத்தவளாய், பாசம், அங்குசம், கரும்புவில் மலர்க்கணேகள் இவற்றை ஏந்திய நான்கு கரங்களேப் பெற்றவளாய் விளங்கிய அந்தத் தேவியைப் பார்த்து, இந்திரன் முதலிய தேவர்கள் ஆனந்தக் கடலில் மூழ்கினர்கள். அவளுடைய திருவடிகளில் அடிக்கடி விழுந்து வணங்கினர்கள்.

அவளுடைய பார்வை பட்ட மாத்திரத்திலே, தேவர்களது எல்லா அங்கங்களும் பூரணமாக வளர்ச்சியுற்று, அவர்கள் தமது தாபங்களெல்லாம் நீங்கப் பெற்றவர்களாய், வஜ்ர சரீரம் படைத்தவர்களாக விளங்கலாயினர்.

●

அறிவு படைத்தவர்கள் பொருமையால் பீடிக்கப்பட்டவர்களாயிருக்கிருர்கள். உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள் கர்வத்தால் கெட்டுப் போகிருர்கள். மற்றையோர் அறியாமையில் மூழ்கிக்கிடக்கிருர்கள். ஆகையால் வித்வான்களுடைய கல்வியானது (அதைப் போற்றுபவரோ ஏற்றுக் கொள்பவரோ இல்லாத காரணத்தால்) பிறருக்குப் பயன் படாமல் அவர்களுக்குள்ளேயே புதையுண்டு கிடக்கிறது.

— இராஜா பர்த்ருஹரி

ஆசிரியர் : இராம. மணிமேகலே. வெளியிடுபவர்: T. ராமனுதன், 4, தணிகாசலம் செட்டிரோடு, சென்னே-17. அச்சிடுபவர்: கொண்டா. காசிநாராமன், ராமன்ஸ் பில்டிங் பிரஸ், 81-5 பாண்டி பஸார், தியாகராயநகர் சென்னே-17.

அருள்

ஆசிரியர் : கலைச்செல்வி மணிமேகலை

அருட்பெருஞ்சோதி



தனிப்பெருங்கருணை

அருள்

உ

தமிழ்மாதம் முதல்நாள் தோறும் வெளிவருகிறது

அன்பார்ந்த வாசகர்களுக்கு

வி ன வி டை

சென்ற இதழிலிருந்து, மனித வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சிக்கல்களுக்கும் பிரச்னைகளுக்கும், " உங்கள் பிரச்னைகள் " என்ற தலைப்பில், ஆத்மிக-தார்மிக-சமயரீதியான ஆலோசனைகளை வெளியிட்டு வருகிறோம்.

இதைத் தவிர, வரப்போகும் பங்குனிமாத இதழிலிருந்து, **வினவிடை** என்ற ஒரு புதிய பகுதியைத் தொடங்க **எண்ணியுள்ளோம். அன்பர்கள்** தமக்குத் தோன்றுகிற **ஆத்மிக-தார்மிக-சமயரீதியான கேள்விகளை** எங்களுக்கு எழுதியனுப்பினால், **அவர்களின் பெயர்களைக்** குறிப்பிடாமலே அவற்றிற்கு உரிய **பதில்களை " அருள் "** பத்திரிகையில் **வெளியிடுவோம்.**

— ஆசிரியர்

அருள் 4	ஆண்டுச்	பிப்ரவரி
கருணை 5	சந்தா	15-2-70
மாசி, சௌமிய	ரூ. 3-60	விலை: 30காசு

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி : நிர்வாகி, "அருள்"
4, தணிகாசலம் செட்டிதெரு, தியாகராயநகர், சென்னை-17,

உ

திருச்சிற்றம்பலம்

புல்லவா மனத்தேன் என்னினும் சமயம்
புகுதவா பொய்ந்நெறி யொழுக்கம்
சொல்லவா பிறரைத் துதிக்கவா சிறிதோர்
சொப்பனத் தாயினும் நினையேன்;
கல்லவா மனத்தோர் உறவையும் கருதேன்;
கனகமா மன்றிலே நடிக்கும்
நல்லவா! எல்லாம் வல்லவா! உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே!

புண்படா உடம்பும் புரைபடா மனமும்
பொய்படா ஒழுக்கமும் பொருந்திக்
கண்படா(து) இரவும் பகலும்நின் றனையே
கருத்தில்வைத்(து) ஏத்துதற்(கு) இசைந்தேன்;
உண்பனே யெனினும் உடுப்பனே யெனினும்
உலகரை நம்பிலேன் எனது
நண்பனே நலஞ்சார் பண்பனே உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே!

—திருவருட்பா.

இறைவி வணக்கம்

ஸ்ரீ மூக மஹாகவி

கம்பாநதிக் கரையில் உறைபவளும், பர்வதராஜ னுடைய புண்யமே தன் வடிவானவளும், பரமசிவனது மடியிலே விளங்கும் ஒரு மங்களாபரணம் போன்றவளு மான ஸ்ரீ காமாக்ஷிதேவியை, எனது மேலான குருநாதரு டைய கருணையினலே நான் காணப்பெற்றேன்.

மடியில் கிளியை வைத்திருப்பவளும், சங்கீதத்தில் பிரிய முள்ளவளும், சங்கீத வித்வான்களைத் தன் பக்கத்தில் வைத்திருப்பவளும், பைரவகணங்களால் சூழப்பட்டு இருப்ப வளும், காதுகளில் சங்கினலாகிய குண்டலங்களை அணிந் திருப்பவளுமான தாயே! நீ வெல்க!

தாயே காமாக்ஷீ! உன்னை வணங்கும் அடியார்களுக்கு நீயே மோக்ஷவடிவினளாய் விளங்குகிருய்! நானுவிதமான சேதன அசேதனப் பிரபஞ்சங்களை நீயே படைக்கிருய்! ஸிம்ஹ வாஹனத்தை உடையவளாகவும், சிவபெருமானை மகிழ்விப்பவளாகவும், பகைவர் கூட்டங்களை அழிப்பவ ளான அந்தத் துர்கையாகவும், நீயே காட்சியளிக்கின்ருய்!

சூர்ய நமஸ்காரம்

உ

ஆதியே உன்னைத் தொழுதேன்
ஐஸ்வரியம் பெருகத் தொழுதேன்
சந்திரா உன்னைத் தொழுதேன்
சந்தோஷம் பெருகத் தொழுதேன்
சூரியா உன்னைத் தொழுதேன்
சூழ்வினைகள் நீங்கத் தொழுதேன்
கதிரேசா உன்னைத் தொழுதேன்
கண்ணும்கருத்தும் விளங்கத் தொழுதேன்
மகாதேவா உன்னைத் தொழுதேன்
மாங்கல்யம் விளங்கத் தொழுதேன்
எழுபரித் தேரில் உலகம் வலம்வரும்
முழுமுதற் பொருளே வாழி வாழியவே !

— க. துரையம்மாள்